Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் ...3

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 1

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ஷவ்வால், துல்கஃதாமீ

1937ளு ஜனவரி, பிப்ரவரிமீ

1. அல்குர்ஆன் ... 1 2. அல்ஹதீது ... 4
3. ஹஜ்ஜுக் கடமை ... 6
4. நபிகள்கோன் (ஸல்.) கட்டளை ... 9
5. எகிப்தில் முஸ்லிம் ஆதிக்கம் வந்த வரலாறு ... 11
6. முஸ்லிம்களுக்குள் பிளவையுண்டுபண்ணுபவர்கள் 18
7. மிர்ஜாவின் வாக்கு மாறாந் தன்மை ... 20
8. கிறிஸ்தவர்களுக்கோர் மெஞ்ஞாபனம் ... 22
9. தீண்டாதார்களுக்கோர் மீட்பின் செய்தி ... 25
10. சிறுவர் பக்கல்... 26 11. தருமத்தின் மகிமை 27
12. காதியானீ மிர்ஜாவின் நபித்துவ தாவாக்களுக்கு ஏற்பட்ட காரணங்கள் ... 29
13. ஹிந்து வேதத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) ... 34
14. முஸ்லிம்களின் முன்னேற்றத்தின் இரகசியம் ... 36
15. பர்மாவில் இஸ்லாம் ... 38
20. மில்னர் கமிஷன் ... 54

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	”	4 0 0
தனிப் பிரதி ...	”	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்வலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை புண்டுபண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ ஹிபாஜத்துல் இஸ்லாம் ” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

21894

OFFICE OF THE REGISTRAR ... MADRAS 13 FEB 1937

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1355 ஷவ்வால், துல்கஃதா மீ 1937ஹு ஜனவரி, பிப்ரவரி மீ	இதழ் 1 & 2

அல் குர்ஆன்

"இன்னும் ஜனங்களில் ஹஜ்ஜைப் பற்றி அறிக்கையிடும். உம்மிடம் நடந்தவர்களாகவும் மிகவும் தூரதேசத்திலிருந்து வருகிற வாகனத்தின்மீதிலுமாக அவர்கள் வருவார்கள்.

திருகுர்ஆன்.

சோதரீர்! திருமறையில் கூறப்பட்டுள்ள இவ்வசனம், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது மூலப்பிதாவாகவும், நபிமார்களுக்குத் தந்தையாகவுமிருக்கிற ஸெய்யிதுனா ஹஜ்றத் இப்ராஹீம் கலீலுர்ரஹ்மான் (அலை.) அவர்களுக்கு இறைவனிட்ட கட்டளையாகும். எனவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு வெகு காலத்திற்கு முன்னதாக, 'பைத்துல்லா' வை ஹஜ்ஜுச் செய்யும் புநித கடமை மக்களின் மீது விதியாக இருந்திருக்கிறதென்று தெரிய வருகிறது. மேலும் இப்புநித கடமை மனுவின் பிதாவாகிய ஹஜ்றத் ஆதம் ஸபியுல்லாஹ் (அலை.) அவர்க்ள் காலத்திலேயே இருந்த விபரம் ஹஜ்றத் அனஸுப்னுமாலிக் (றலி.) அவர்களது அடியிற் கண்ட ரிவாயத்திலிருந்து தெரிய வருகிறது :—

"ஆதமே! மரணத்தின் தூது உம்மிடம் வருவதற்குள்ளாக நீர் பைத்துல்லாவை ஹஜ்ஜுச் செய்துகொள்ளும் என்பதாக அல்லாஹுதஆலா ஹஜ்றத் ஆதம் (அலை.) அவர்களுக்கு வஹீ அறிவித்தான் என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்."

மேற்கண்ட ஹதீதிலிருந்தும், தெய்வத் திருமறையின் வசனத்திலிருந்தும் இஸ்லாத்தின் முக்கிய கடமைகளிலொன்றாகிய ஹஜ்ஜுக் கடமையானது இவ்வுலகில் மனிதர் தோன்றிய காலத்திலிருந்து இருந்து வருவதாக நாம் தெரிந்து கொள்கிறோம். இந்த ஒரு கடமையை அல்லாமல் இதர இஸ்லாமியக் கடமைகளும்கூட முற்காலத்திலிருந்தே இருப்பதாக ஹதீதுகள், தெய்வத்திருவசனங்கள் முதலியவைகளிலிருந்து தெரிய வருகிறது. எனவே, இஸ்லாம்மதமானது ஏனையமதஸ்தர் கருதுவது போல நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் தோன்றியதுமல்ல, அந்த அறபியருக்கு

மட்டிலும் ஏற்பட்டதுமல்ல. மனிதவர்க்கம் அனைத்திற்குமே பொதுவாகவுள்ள மதமாக இருக்கிறது. என்றாலும், காலத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு அவைகளிலுள்ள கிரியைகளிற் சிற்சில மாறுபாடுகளும் சீர்திருத்தங்களும் இறைவனால் செய்யப்பட்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் சம்பூரணமாக்கப்பட்டது.

இஃதிவ்வாறிருக்க, ஹஜ்ஜுக் கடமையைப் பற்றிக் கவனிப்போம். அன்று ஹஜ்றத் இப்றாஹீம் (அலை.) அவர்கள் அறிக்கையிட்டதற்கிணங்க ஜனங்கள் மிகமிகத் தூரதேசங்களிலிருந்தெல்லாம் ஹஜ்ஜுச் செய்வதற்காக திருமக்காபுரி வந்துகொண்டிருந்தனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருமக்காவில் பிறப்பதற்கு முன்னதாவே ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது கோத்திரக்காரர்களான குறைஷியர் மக்கமாநகரில் வசித்துக்கொண்டும், ஹஜ்ஜுக்கு வருபவர்களுக்கு உதவிபுரிந்து கொண்டுமிருந்தனர். எனவே, ஹாஜிகளுக்கு உதவிபுரிவதற்காக இக் குறைஷியர்கள் தங்களுக்குள் வேலைகளைப் பங்கிட்டுக்கொண்டு அவரவரும் தத்தம் காரியங்களைக் குறைவரச் செய்து கொண்டிருந்திருக்கின்றனர். இப்படிப் பங்கு வைக்கப்பட்ட வேலை குறைஷியரிலுள்ள பல பிரிவிலும் வாழையடி வாழையாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலம்வரை இருந்து வந்திருக்கிறது. ஹாஜிகளுக்கு ஊழியம் புரியும் விஷயத்தில் குறைஷியர் குறையில்லாமல் நடந்துகொள்வதாலும்,எவ்வித வித்தியாசமும் பாராட்டாமல் பொது ஜனங்களுக்கு ஊழியம் புரிந்து வந்ததாலும் அக்காலத்திலுள்ள அரபியர் குறைஷியரை மிகவும் கௌரவப் படுத்தி கண்ணியம் கொடுத்து கொண்டாடி வந்திருக்கின்றனர்.

என்றாலும், இடைக்காலத்தி லேற்பட்ட சாவகாச தோஷத்தால் புனிதமான இக் கடமைகளில் அநேகம், புதிய அநாச்சாரங்கள் புகுந்து அதன் புனிதத்தைக் கெடுத்துவிட்டன. எனவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இப்புனிதக் கடமையில் புதிதாய்ப் புகுந்த அநாச்சாரங்களை அகற்றி அதன் புனிதத்தன்மையை மறுபடியும் புதுப்பித்தார்கள். அதற்கப்புறம் இன்றுவரை இப்புனித கடமை உலக முஸ்லிம்களால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்புனித ஹஜ்ஜை ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் அறிக்கையிட்டபின் அறபியர் மட்டுமில்லாமல் அக்காலத்திலிருந்த நபிமார்களும்கூட நிறைவேற்றிவந்தார்கள் என்ற விபரம் பைபிளிலிருந்து தெரியவருகிறது.

தவிரவும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அருளிய திருவேதத்தில் இறைவன் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு இட்ட கட்டளையை வேறுவிதமாகக்கூறி இருக்கிறான். அதாவது "இந்த வீட்டை அல்லாவுக்காக ஹஜ்ஜுச் செய்வது ஜனங்கள் மீது (அதாவது) செல்வதற்கு இயல்புள்ளவர்கள் மீது கடமையாகும்" என்பதாகக் கூறி இருக்கின்றான். இக்கட்டளையிலும், இதற்கு முந்திய கட்டளையிலும் இறைவன் இதனை விதித்திருப்பது பொதுவாக எல்லா ஜனங்கள் மீதுமேயாகும். இக்கட்டளையில் அறபியர், ஈரானியர், அப்கானியர், இந்தியர் என்ற பாகுபாடுமில்லை. ஆண் பெண் என்ற வித்தியாசமும் பாராட்டவில்லை. ஆகவே, இப்புனித கடமையானது மனிதவர்க்கம் அனைத்தின்மீதுமே ஏற்பட்ட நிரந்தரமான விதியாக இருந்து வருகிறது. இவ்விதியும் மிகவும் கண்டிப்பான விதியாகும். இதனைக் குறித்து இறைவன் "மேலும், எவர் (இக்கட்டளைக்கு) மாறு செய்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரின்பால் தேவையற்றவன்." எனக் கூறி யிருக்கிறான்.

அல்லாஹுத ஆலா ஏவிய இக்கட்டளைக்கு மாறுசெய்வதென்பது அவனது அத்தேவாலயத்திற்கு விரோதமாக வேறொரு தேவாலயத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை மட்டிலும் அறிவிக்கவில்லை; அக்கட்டளையை நிறைவேற்றாமல் இருப்பதுங்கூட அதனை மீறுவதாகவே இருக்கிறது. மேலும், அவன் அகிலத்தாரிடம் தேவை யற்றவன் என்ற இப்பயங்கரமான சமாச்சாரம் இக்கட்டளையை நிறைவேற்றா திருப்பவருக்கு அவனாலளிக்கப்படும் தண்டனையை நன்கு விளக்கிக் காண்பித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வுலகில் பிறந்த மக்களில் அரசர், ஆண்டி, ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர் என்ற பாகுபாடும், ஏற்றத் தாழ்வும் காண்பிக்கப்படுகிறது. ஆனால், இவர்களில் எவரும் தேவையற்றவரல்ல. இவ்வுலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆளும் மன்னனாக இருந்தபோதிலும் தனக்குரிய சொந்தக் காரியத்திற்கும் கூடப்பிறரிடம் தேவைப் படாமலிருக்கமுடிவதில்லை. எனவே, யாவரும் தேவை

யுள்ளவராக இருப்பதால் தனது தேவையை யுத்தேசித்தேனும் மற்றவர் செய்யும் காரியத்தில் தயவு தாட்சண்யம் காட்டவேண்டியிருக்கிறது. இங்ஙனம் தயை தாட்சண்யம் காட்டுவதற்கு நிர்ப்பந்தப்படுத்தப் பட்டிருக்கும் மனிதவர்க்கம் தங்களுக்குள்ளுள்ள விதிவிலக்குகளை மீறுவோருக்கு குற்றத்திற்குத் தக்கவாறு கடுந்தண்டனைகளை விதித்து அவைகளை நிறைவேற்றும்போது அதனைத் தடுக்க முடிவதில்லை என்றால், எவரிடமும் எவ்விதத் தேவையுமில்லாதிருக்கிற சர்வ வல்லோன் தனது கட்டளையை நிறைவேற்றாமலோ அல்லது போட்டி போட்டோ மீறுதல் செய்து கொண்டிருக்கும் மனிதர்களைத் தண்டிக்கும் விஷயத்தில் தயவு தாட்சண்யம் பாராட்டவே மாட்டான். அவனிடம் அதனை எதிர்பார்ப்பதும் தவறாகும். ஆகவே, தயவு தாட்சண்யம் பாராட்டத்தேவையில்லாத அவ்வல்லோன் தண்டனையளிக்க முன்வரும்போது அத்தண்டனையும் மிகக்கடுமையாகவே இருக்கும். ஆதலின் இதுவரை அவனது கட்டளையை நிறைவேற்றாமல் இருப்பவர்கள் இனியேனும் அதனை விரைவில் நிறைவேற்றுவார்களாக. இதுவரை அவன் தண்டியாமல் விட்டு வைத்திருப்பதானது மனிதர் பால் அவனுக்குள்ள இரக்கச் சித்தமேயாகும். இன்றில்லை யேனும் இனியொரு சமயத்திலாவது மனிதர் தங்களது பொறுப்பை யுணர்ந்து நிறைவேற்றட்டும் எனச் சந்தர்ப்பம் அளித்ததேயாகும். இச் சந்தர்ப்பம் இனிமேலும் கிடைத்துக்கொண்டே இருக்கும் என்று நினைப்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. அவன் அளித்த இச்சந்தர்ப்பத்தை இனிமேலும் அளிக்காமல் நிறுத்திக் கொள்வது எப்பொழுது என்று நிர்ணயமாகத் தெரிந்து கொள்ளவும் ஹேது வில்லாததால், அன்பர்கள், தங்களுக்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் இப்பொழுதே அவனது கட்டளையை நிறைவேற்றுவார்களாக.

இங்கு, மற்றொரு முக்கிய விபரத்தைக் கூறாமலிருக்க முடியவில்லை. இறைவனது கட்டளையை நிறைவேற்றாமல் இருந்தவர்களுக்கு அவனது கோபப்பார்வை ஏற்பட்டு அழிந்த விபரம் முற்காலத்தைய சரித்திரங்களைப் பார்ப்பவருக்குத் தெரியாத விஷயமன்று. ஹஜ்றத் நூஹ் (அலை.), ஹஜ்றத் லூத் (அலை.) ஆகியவர்களது ஜனக் கூட்டத்தார்கள் அழிந்த விபரங்களைப் பார்க்கும் எவருக்கும் மெய்நடுக்கங் கொள்ளாதிருக்காது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்னர் அபிசீனிய சக்கிரவர்த்தியின் அரசப் பிரதிநிதியாக இருந்த "அப்ரஹத்துல் அஷ்ரம்" என்பவன் யமன் தேசத்தில் ஒரு கோவிலைக் கட்டிக்கொண்டு ஹஜ்ஜுக்கு வரும்படி ஜனங்களை அழைத்ததும், அப்புறம் ஜனங்கள் வராமலிருப்பதைக் கண்டு பொறாமையடைந்து கஃபத்துல்லாவை இடித்துத் தள்ளிவிட்டால் எல்லா ஜனங்களும் யமனிலுள்ள தமது கோவிலுக்கு வருவர் என்று எண்ணி யானைப்படையுடன் மக்கமா நகருக்கு வந்ததும், மக்கா வாசிகளில் எவரும் அதனை எதிர்க்காமலிருந்தும் எதிரிகளனைவரும் மடிந்து அழிந்த விபரமும் திருகுர் ஆனிலுள்ள ஸூறத்துல்பீலில் சொல்லப்பட்டிருக்கிறது. இது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிறப்பதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவமாகும். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உலகிற்றோன்றி, நபிப்பதவியையடைந்து 1300-வருஷங்களுக்கு மேலான பின்னர் இந்தியாவிலுள்ள ஒரு மிர்ஜா, காதியான் எனும் ஊரில் ஒரு மஸ்ஜிதைச் சுட்டிக் காட்டித் தமது சிஷ்யர்களிடம் இனிமேல் இங்குதான் ஹஜ்ஜுக்கு வரவேண்டும் என்று கட்டளையிட்டானென்றால் அல்லாஹுத ஆலாவின் கட்டளையை மீறும் விஷயத்தில் அவனது மன உறுதி எத்தன்மைத்து என்பதைச்சிந்தித்துப் பாருங்கள்! அவனிட்ட இக் கட்டளை பைத்தியக்காரத்தன மென்று அவனது சிஷ்யர்கள் அதனை அலக்ஷியம் செய்தார்கள் என்று நினைக்கிறீர்கள். அன்று, அன்று. அவர்கள் அதனை அலக்ஷியம் செய்யவில்லை. இன்றுவரை வருடந்தோறும் அவ்வூருக்குச் சென்று ஒரு மகா நாட்டில் கலந்து கொண்டு, ஹஜ்ஜுச்செய்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அன்று 'அப்ரஹத்துல் அஷ்ரம்' ஒரு பெரிய அரசாங்கத்திற்குப் பிரதிநிதியாகவும், ஒரு பெரும் படைக்குத் தளகர்த்தனாகவும் இருந்தும் இறைவனது வேதனை வந்தபோது தன்னைக்காத்துக் கொள்ள முடியவில்லையென்றால், சாமான்ய மனிதராகவும், ஒரு அரசாங்கத்தாரின் சாதாரண பிரஜையாகவு மிருக்கிற இக் கூட்டத்தினர் செய்யும் இந்த போட்டி ஹஜ்ஜினால் இறைவனுக்கு எவ்வளவு மகத்தான கோபமேற்படு மென்பதையும், இக்கோபத்தின் பேரில் தண்டனை அளிக்கப்படும் நேரம் வந்தால் இவர்களில் எவரா

வது தப்பமுடியுமா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்! இக் கூட்டத்தினர் வட இந்தியா வில் பஞ்சாபில் மட்டு மில்லாமல் நமது தமிழ் நாட்டிலும் மறைமுகமாக பரவி யிருக்கின்றனர். ஆகவே, அவர்களுடன் உறவு கொண்டாடுவதி லும் ஒத்துழைப்பதிலும் நம்மவர் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

அல் ஹதீது

"எனது கப்ரை எவர் தரிசிக்கிறரோ அவருக்கு எனது "ஷபாஅத்து" வாஜிபாகிவிடுகிறது. எனது வபாத்திற்குப்பின் எனது கப்ரை தரிசிப்பவர் என்னை ஜீவியத்தில் தரிசித்தவரைப் போலாகிறார்"

என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார்கள். மனிதராகப் பிறந்த தன் முக்கிய லக்ஷியம் இறைவனைப் பணிந்து மறு உலக முக்திப் பேற்றுக்கான காரியங்களை இவ் வுலகிலேயே செய்து கொள்வதாகும். மனித னுக்கு இறைவன் செய்துள்ள கிருபைகளை யும், அனுக்கிரகங்களையும் இத்தனை என்று கணிக்கவோ, அவைகளோவ் வொன்றிற்கும் தனித்தனியே நன்றி செலுத்தவோ மனித ரால் முடியாது. அப்படி இருக்க மனிதர்கள் நன்மையைச் செய்து அந்த நன்மையின் பலத் தால் மறு உலகப்பேற்றை அடைதல் என் பது குதிரைக் கொம்பாகும். இப் பெரும் கஷ்டத்தை இறைவன் உணர்ந்து தனது அனுக்கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித் தனியே பிரத்தியேகமாக நன்றி செலுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தா மல் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்து விடுபவர்களுக்கு மறுமையில் சுவர்க்கானந் தத்தை அளிப்பதாக திருமறையில் கூறி இருக் கிறான். இதுவும் போதாதென்று தன்னிடம் 'ஷபாஅத்து'ச் செய்து மக்களுக்குப் பாபவிமோ சன மளிப்பதற்கென நாயகம் (ஸல்.) அவர்க ளுக்கும், இதர நபிமார்களுக்கும் மற்றுமுள்ள பெரியார்களுக்கும் தராதரப்படி தனது பெருங் கருணையால் அந்தஸ்தளித்திருப்பதும் அவ்வல் லோனின் அருங்கருணையே யாகும். என்ற லும், இவர்கள் மக்களில் எவருக்கு ஷபாஅத்துச் செய்வார்கள் என்ற விபரம் பொதுவாகத் தெரிந்திருந்தாலும் குறிப்பாக எவருக்குத் தெரியாது. அதனைத் தெரிந்து கொள்வதற் குச் சிறந்த மார்க்கம் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நமக்கறிவிக்கப்பட்டிருக் கிறது. அம்மார்க்கம்தான் இவ்வியாசத்தின் தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஹதீது ஷரீபாகும். எனவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது கப்ரை ஜியாரத்துச் செய்வதால் மறுமையில் அந்நாயகம் (ஸல்.) அவர்களது ஷபாஅத்திற் குத் தகுதியுள்ளவராகி விடுகிறோம். இந்த ஷபாஅத்துக்கிடைக்குமாயின் றஹ்மானின் பிழைபொறுத்தலும் கருணையும் கிடைப்பது நிச்சயம் என்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், நியாயத்தீர்ப்பு நாளில் அவ்வல்லோனின் அநுமதியின்றி எவரும் அவனிடம் பேசவும் முடியாது, அப்படிப் பேசுவதும் நேர்மையான தைத்தவிர வேறொன்றுமாக இருக்கவும் மாட் டாது. ஆகவே, நாயகம் (ஸல்.) அவர்கள் அவ் வல்லோனின் அனுமதிப்படியே ஷபாஅத்துச் செய்வதால் அந்த ஷபாஅத்து அவனால் அங்கீ கரிக்கப்படுவது நிச்சயம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது கப்ரை ஜியாரத்துச் செய்வதானது மறுஉலக முக்திக்குச் சிறந்த உதவியாயிருப் பதால் முஸ்லிம்கள் அனைவரும் அப்பெருமக ரின் கப்ரை ஜியாரத்துச்செய்ய மதீனமா நகர் செல்வது மிகவும் உசிதமாகும்.

அல்லாமலும், "எனது மஸ்ஜிதில் எவர் நாற் பது தொழுகைகளைக் 'கலா'வில்லாமல் தொடர் ச்சியாகத் தொழுகின்றனரோ அவருக்கு நரகை விட்டு உரிமைச் சீட்டு எழுதப்படுகிறது; அவர் 'நிபாக்' என்னும் கள்ளக்குபிரை விட்டுப் பரிசுத்தராக்கப்படுகிறார்" என்பதாக நபிகள்

நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய விபரம் புகாரி, முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் காணப்படுகின்றன. இதுமட்டுமல்லாமல் "மதீனாவில் ஒரு றமலான் மாதமிருப்பதானது இதர ஊர்களில் ஆயிரம் றமலானுக்குச் சமமாக இருக்கிறது. மதீனாவில் ஒரு ஜும்ஆவை நிறைவேற்றுதல் இதர ஊர்களில் ஆயிரம் ஜும்ஆவுக்கு நிகராக இருக்கிறது" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆகவே, மதீனமா நகர் சென்று ஜும்ஆ முதலிய தொழுகைகளை நிறைவேற்றி, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ரௌலா ஷரீபைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களே பாக்கியவான்களாவர். இதனால் தான் ஹஜ்ஜுச் செய்ய திருமக்கா செல்பவர் மதீனமா நகருக்கு ஜியாரத்துக்காகச் செல்கின்றனர். அத்தகைய பாக்கியம் கிடைப்பதைப் பார்க்கினும் இவ்வுலகில் கிடைக்கக் கூடியபாக்கியம் வேறெதுவுமில்லை. ஆனால், அப்பெரும்பேற்றைப் பெற்றவர்கள் அப்புறம் குப்ர், ஷிர்க்கு ஆகியவைகளைச் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதவசியமாகும். ஏனெனில், குப்று, ஷிர்க்கு ஆகியவைகளைச் செய்வதானது மனிதனது ஈமானையே அடியுடன் மாற்றிவிடுகிறது. அவன் இஸ்லாத்தை விட்டு மாறியவனாகி விடுகின்றான். மார்க்கத்தை விட்டு மாறிவிடுபவனது நன்மைகள் ரத்துச் செய்யப்பட்டு விடுகின்றன. மதத்தை விட்டு மாறுவதற்குமுன் அவன் செய்துள்ள நற்கிரியைகளை இறைவன் அங்கீகரிப்பதுமில்லை. அதற்குப் பயனளிப்பதுமில்லை. இவ்வுலகில் மானிடராகப் பிறந்தவர் தனம் சம்பாதித்து தர்மஞ் செய்வதும், இதர நற்கிரியைகளைச் செய்வதும் மறுவுலக முக்தியின் நிமித்தமேயாகும். எனவே, மறுவுலக முக்தியை அடைவதற்கான வழி நமக்கறிவிக்கப்பட்டிருக்கும்போது இயல்புள்ள கனவான்கள் இப்புண்ணிய க்ஷேத்திரம் செல்லவும், ஜியாரத்துச் செய்யவும் சிந்தை கொள்ளாதிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இற்றைநாளில் சிலர் தங்களது இவ்வுலகஜீவியத்தையும், தங்களது தொழில்முறைகளையும் பெரிதெனமதித்து ஹஜ்ஜு, ஜியாரத்திற்குச் செல்வதை மறந்து விடுகின்றனர். இவர்களது தொழிலும், இவ்வுலக ஜீவியமும் இவர்களுக்கு நிரந்தரமானவைகளல்ல. ஆகவே, "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழிக்கேற்ப ஹஜ்ஜு ஜியாரத்திற்குச் செல்ல இயல்பும் வசதியுமிருக்கும்போதே அவைகளைச் செய்து கொள்வது அவசியமாகும். அப்புறம் தங்களது வசதியும் சௌகரியமும் மாறியபின் தவறிப்போன காரியத்தை நினைத்து வருந்துவதில் பயனில்லை. சீமானாக இருப்பவர் திடீரென ஏழையாகி விடுவதும், ஏழையாக இருப்பவர் திடீரென சீமானாகுவதும், ஸ்தூல சுகத்துடனிருப்பவர் சுகவீனமுள்ளவராக இருப்பதும் இற்றை நாளில் சகஜமாக இருந்து வருகிறது. மேலும், இப்பொய்யான வாழ்வை மெய்யென்று எண்ணி நாளைவரை உயிருடனிருப்போமென்று நம்புவதற்கு முடியாது. இத்தகைய அறிவு இம் மாநிலத்தில் எவருக்குமில்லை. நியாயத் தீர்ப்பு நாள் எப்பொழுது நிகழும், எந்த இடத்தில் மனிதன் மரிப்பான், எங்கு அடக்கப்படுவான், கர்ப்பம், மழை ஆகிய ஐந்து காரியங்களைப் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு மட்டில்தான் சொந்தமாக இருக்கிறது என்பதாக திரு குர்ஆனில் இறைவன் கூறி இருக்கிறான். ஆகவே, இவ்வுலக ஜீவியம் எப்பொழுது முடிவுக்கு வரும் என்பதைத் தெரிந்து கொள்ள அசக்தர்களாக இருக்கிற மானிடவர்க்கத்தார் தங்களுக்கு மறுஉலக வாழ்விற்குரிய சாதனம் கிடைத்தால் தங்களது முதல் சந்தர்ப்பத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதுதான் அறிவுடமை யாகும். அப்படிச் செய்யாமல் கால காணம் செய்வதானது புத்திசாலித் தனமுமன்று.

தவிரவும், வியாபாரத்தொழில் நடத்துபவரும் பிறரும் தங்களுக்கு ஒரு லாபம் கிடைப்பதாகத் தெரிந்தால் எவ்விதத்திலேனும் அந்த லாபத்தை அடைய முயலுவதுடன், பிறர் அந்த லாபத்தை அடைவதற்கு முன் அதனை நாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற பேராவினால்பட்டினி என்றும், பசியென்றும், இரவென்றும், பகலென்றும் பாராமல் அவசரம் அவசரமாக அதனை அடைய முந்துவதை நாம் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். மறுஉலகப்பேறு கிடைப்பதானது மனிதப் பிறவி எடுத்த அசல் நோக்கமே சித்தியாவதாக இருப்பதால் அதனைப் பார்க்கினும் பெரிய லாபம் வேறொன்றுமில்லை. எனவே நிரந்தரமான நித்தியபேரானந்தமான் மறுவுலக வாழ்க்கைக்கு முக்கிய வசதியளிக்கக் கூடிய ஜியாரத்தைத் தவறவிடாமல் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியமாகுமென்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம். இத்தகைய பெரும் பேற்றை அடைந்தவர்களே பாக்கியவான்கள்,



ஹஜ்ஜுக் கடமை

இஸ்லாம் மதம் உலகத்திற்குப் பூர்வீக மான பழம் மதமாகும். மனித வர்க் கம் அனைத்திற்கும் பொது மதமுமாகும். ஆகவே, அம் மதத்திலேற்பட்ட கடமை களும் மனிதவர்க்கத்திற்குப் பொதுவான தாகவும், யாவருக்கும் நன்மை பயப்பன வாகவுமிருக்கின்றன. இஸ்லாம் மதத்தி லேற்பட்டுள்ள கடமைகள் பலவற்றுள் ஹஜ்ஜுக் கடமையானது உலக நாகரீ கத்திற்கும், உலகாபி விருத்திக்கும் முக் கிய சாதனமாயமைந்துள்ளது. உலகத் திலுள்ள எல்லா தேசத்தினரும் கருப்பர், வெள்ளையர் என்ற வித்தியாசமின்றி ஓரி டத்தில் வருடந்தோறும் ஒன்று கூட வேண்டிய தேற்படுவதால் ஒரு சமூகத் தினரின் கல்வி, நாகரீகம், கலை ஆகி யவைகளை மற்றொரு சமூகத்தினர் தெரிந்து கொள்ளவும், பிற்போக்கான எண்ணம், நடத்தை முதலியவைகளைச் சீர்திருத்திக் கொள்ளவும், வர்த்தகம், கூட்டுறவு முதலியவைகளைப் பெருக்கிக் கொள்ளவும் மிகவும் சௌகரியமாக இருக்கிறது. உலக சம்மந்தமான இவ் வனுகூலங்கள் இருப்பதுமட்டு மில்லா மல் தெய்வ பக்தியையும், மார்க்கானுஷ் டானங்களையும் விருத்தி செய்யவும் இதில் வசதிகளிருந்து வருகின்றன. இதனால் தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், ஹஜ்ஜுச் செய்யப் புறப்படுவோரைக் குறித்து "சங்கையான பைத்துல்லாவை நாடி ஒருவர் புறப்படுவாராயின் அவரது ஒட்டகம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் இறைவன் இரண்டு நன்மை களை எழுதி, இரண்டு பாவங்களை நீக்கு கின்றான்; இரண்டு அந்தஸ்துகளை உயர்த்துகிறான்; பின்னர், அவர் பைத் துல்லாவிற்கு வந்து 'தவாபு' செய்து, 'ஸபா மர்வா'விற்கிடையில் 'ஸயீ' செய்து, தலைமயிரைக் களையச் செய்து அல்லது மயிரை வெட்டிக் கொள்வாராயின் அன்று பிறந்த குழந்தையைப்போல் பாவமற்றவராகி விடுகின்றார்" என்பதா கக் கூறியுள்ளார்கள். ஆகவே, பாப மற் றவராகி இறைவனது கருணைக்கு அரு கதையாகுபவருக்கு மங்களம் உண்டாவ தாக. எனவே, இக்கிரியை மனித சமூ கத்தின் முன்னேற்றத்தையும் நன்மை யையும் கவனித்தே இறைவனாலருளப் பட்டதாக இருப்பதால் இதனை நிறை வேற்றாதவர்கள் இதனாலேற்படும் பயனை அடையாதவராகி விடுகிறார்கள். என்றா லும், இக்கடமையை நிறைவேற்றாதிருப் பது அவ்வல்லோனின் கட்டளையை மீறு வதாக ஏற்படுகிறது. ஆதலின், மனிதவர் க்கத்தில் இயல்புள்ளவர் இக்கட்டளையை நிறைவேற்றும் விஷயத்தில் அசட்டை செய்யின் அவர்களுக்குக் கடுமையான தண்டனையும் மறுமையில் விதிக்கப்படு கிறது. இதனைக் குறித்து இறைவன், "எவருக்கு நான் ஸ்தூல சுகத்தை யளித்து செல்வத்தையும் கொடுத்திருக்கிறேனோ அவர் இவ்வனுகூலங்களை அடைந்து ஐந்து வருஷகாலம் வரை என்னிடம் எனது வீட்டிற்கு வரவில்லையோ அவர் நிச்சயமாக துர்பாக்கியசாலியாவார்" என்பதாக அறிவித்ததாக நபிகள் நாய கம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும், "எவருக்கு வழிச் செலவுக்கும்,

பைத்துல்லாஹ்வரை செல்வதற்கு வாகனமுமிருக்கிறதோ அவர் அவைகளை அடைந்திருந்தும் ஹஜ்ஜுச் செய்யவில்லையானல் அவர் யூதராகவோ அல்லது கிறிஸ்துவராகவோ மாறி மரணமடைவதைப்பற்றி எவ்விதக் கவலையுமில்லை'' என்பதாக நபிகள்கோன் (ஸல்.) நவின்றதாக ஹஜ்றத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கூறி இருக்கிருர்கள். எனவே, ஒருவருக்கு ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு வேண்டிய சௌகரியங்களிருக்கும்போது அதனைச் செய்யாமல் தாமதப்படுத்துவதானது அல்லாஹுதஆலாவினது கட்டளையை அவர் மதிக்கவில்லை என்பதைத் தவிர வேறென்றுமில்லை. திருகுர்ஆனிலுள்ள ஒரு கட்டளையை அலக்ஷியம் செய்வதும், அதனை முழுதும் அலக்ஷியம் செய்வதும் ஒன்றுதான். தவிரவும் திருகுர்ஆனிலுள்ள சகல கட்டளைகளையும் அங்கீகரிக்கவேண்டும் என்பதுதான் இஸ்லாத்தின் கட்டளையாகும். அதிலுள்ள சிலவற்றை ஒப்புக்கொண்டு சிலவற்றை நிராகரிப்பது குப்ராகும். அக்காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்த்துப் போர்புரிவதற்காகப் படை திரட்டி வந்த முஷ்ரிக்குகளும்கூட திருகுர்ஆனிலுள்ள கட்டளைகளத்தனையையும் அடியுடன் மறுக்கவில்லை; அதிலுள்ள சிலவற்றைத்தான் மறுத்தார்கள். என்ருலும், காபிர்கள் அக்கட்டளையை மறுப்பதாகப் பகிரங்கமாகக்கூறினர். ஆனல் இக்காலத்திலுள்ள முஸ்லிம்களிற் சிலர் அதாவது திருகுர்ஆனின் கட்டளையை அலக்ஷியம் செய்பவர் அதனை மறுப்பதாகப் பகிரங்கத்தில் கூறுவதில்லை; கிரியாம்சையில் காண்பிக்கின்றனர். இதுதான் இவ்விரு சாராருக் கிடையிலுள்ள வித்தியாசம். இன்று கிரியாம்சையில் செய்துகொண்டிருப்பவர்கள் நாளையதினம் பச்சாதாபப்பட்டு அதனை விட்டுவிடல் கூடும். அல்லது பகிரங்கமாக மறுத்துக் காபிராகிவிடல் கூடும். இதனல்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், சகல வசதியுமிருக்க ஹஜ்ஜுக்குச் செல்லாதிருப்போர் இறுதியில் யூதராகவோ அல்லது கிறிஸ்துவராகவோ மரிப்பின் அது ஆச்சரியமில்லை என்பதாக அறிவித்திருக்கிருர்கள். ஆகவே, நம் நாட்டிலுள்ள தனவந்தர்களும், ஹஜ்ஜுக் கடமையாக்கப் பட்டவர்களும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள ஹதீதின் உட்கருத்தை ஆராய்ந்து பார்ப்பார்களாக.

நமது நாட்டிலுள்ள சகோதரர்களிற் பலர் ஹஜ்ஜுச் செய்யக் கடமைப்பட்டவர்களாக இருந்தும் ஹஜ்ஜுக்குச் செல்லாதிருப்பதால் அவர்களைக் காபிர் என்றோ, "பாஸிக்" என்றோ கூற நாம் தயாராக இல்லை. அவர்களுக்கு தெய்வ பக்தியோ, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பால் அன்போ இல்லை என்றியம்பவும் நாம் இஷ்டப்படவில்லை. மார்க்க பக்தி குன்றியவர்கள் என்று குற்றம் சாட்டவும் நமக்கு விருப்பமில்லை. இந்நாட்டிலுள்ள பற்பல சமயத்தாரிடமும் அவர்கள் கலந்துறவாடுவதால் சாவகாச தோஷத்தால் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு எத்தன்மைத்து என்பதை உணராமல் இருக்கின்றனர் என்றும், மார்க்கக் கடமைகளை நிறைவேற்ருமல் பிற்படுத்துவதால் எத்துணை கஷ்ட சங்கடத்திற்காளாக நேரிடும் என்பதை அறியவில்லை என்றுமே கருதுகிரேம். இவ்வுலகத்தைய வாழ்வு அநித்தியமானது. உயிர் வாழும் ஒவ்வொருவரும் ஒரு நாளில் இவ்வுலகை விட்டகலுவது நிச்சயமாகும். உலகில் நிச்சயமாக நிகழக்கூடிய காரியம் மரணம் ஒன்றுதான், மற்றைய காரியங்களில் எதையும்—அது நிகழுவதற்கு முன்பே—நிச்சயமாக நிகழும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனலும் மரணம் எப்பொழுது சம்பவிக்கும்? எவ்விதம் சம்பவிக்கும் என்ற விபரத்தை எவரும் அறிந்திலர்.

ஆதலின், நமக்கு அனுபவத்தில் இருந்து வருகிற இந்த ஜீவிய வாழ்க்கை நழுவுவதற்கு முன்பே நமது கடமைகளைச் செய்து கொள்ளவேண்டும். ஆதலால், இயல்பும் சக்தியுமுள்ளவர்கள் ஹஜ்ஜுக் கடமையை உடனே நிறைவேற்றுவதுதான் உசிதமானது. இதனைக் குறித்து நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்குமுன்னதாக எச்சரிக்கை செய்யாமலில்லை. "ஹஜ்ஜுச் செய்வதில் தீவிரமாகுங்கள்; நாளைக்கு உங்களுக்குச் சம்பவிக்கப் போவதென்னவென்பதை நீங்களறிய மாட்டீர்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஜ்றத் இப்னு அப்பாஸ் (றலி.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். நாளைக்கு நிகழும் காரியம் இன்னதென்பதை மனிதன் அறியான் என்பதிற் சந்தேகமில்லை. இப்பொய்யான வாழ்வும் மெய்யல்ல. ஆதலின், ஹஜ்ஜுச் செய்யும் விஷயத்தில் நமது நாட்டுத் தனவந்தர்களும் செல்வந்தர்களும் அசட்டையாக இருப்பது விரும்பத்தக்க காரியமன்று. எனவே, நஞ்சோதரர்களாகிய அவர்கள் இவ்விஷயங்களை நன்கு ஆராய்ந்து இனிமேலேனும் அவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டார்களென நம்புகிறோம்.

மேலும், இக்காலத்தில் ஹஜ்ஜுக்குச் செல்வதானது முற்காலத்திலிருந்த அத்தனை சிரமமும் கஷ்டமுமில்லை. ரயில் பாதைகளில்லாமலும், கிரமப்படியுள்ள பொறுப்பு வாய்ந்த கப்பல் கம்பெனிகளில்லாமலு மிருந்தகாலத்தில் நமது நாட்டிலுள்ள மார்க்க பக்தர்கள் பாய்க் கப்பல்களிலும் படகுகளிலும் ஏறிக்கொண்டு ஹஜ்ஜுடைய காலத்திற்கு 5-6 மாதங்களுக்கு முன்னமேயே புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். இக்காலத்திலோ எங்கு பார்த்தாலும் நல்ல ரஸ்தாக்களும், ரயில் பாதைகளும் ஏற்பட்டிருப்பதுடன், கவர்ன்மென்டாரின் சட்டங்களுக்குட்பட்ட கப்பற் கம்பெனிகளு மிருக்கின்றன. அரசாங்கத்தாரும் ஹாஜிகளின் சௌகரியங்களை யுத்தேசித்துச் சட்டதிட்டங்களமைத்திருக்கின்றனர். கப்பல் கம்பெனியார் அரசாங்கச் சட்டத்திற் கேற்ப ஹாஜிகளுக்கு வசதி செய்து கொடுக்கிறார்களா என்று கவனிப்பதற்கும், இன்னும் என்னென்ன சௌகரியங்க ளேற்படுத்தித் தர வேண்டுமென அறிவிப்பதற்குமென ஹஜ்ஜுக் கமிட்டிகளை ஏற்படுத்தித்தக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். இதனால், ஹஜ்ஜுக்குச் செல்வோர் 'ஜித்தா' துறைமுகம் போய்ச் சேரும் வரை வழிப் பயம் எதுவுமில்லாமல் நிம்மதியாகச் செல்வதற்கான சகல வசதிகளுமிருக்கின்றன. ஜித்தாவிலிருந்து திருமக்கா, மதீனா செல்வதற்கு இதற்கு முன்னிருந்த சிரமங்கள் இப்பொழுதில்லை. சில வருஷங்களுக்குமுன் 'பத்து'களின் பயமிருந்தது. தங்களது பணத்தைப் பறித்துக் கொள்வார்களோ என்ற அச்சம் ஒவ்வொரு ஹாஜியையும் சதா வாட்டிக்கொண்டே இருக்கும். இக்காலத்திலோ இறைவனருளால் அரபி தேசத்திலும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கமேற்பட்டிருக்கிறது. திருட்டு, வழிப்பறி என்ற நாமதேயங்கூட இப்பொழுது அங்கில்லை. ஹாஜிகள் தவறுதலாகத் தங்களது பணத்தை வழியிற் போட்டு விட்டாலும், அங்குள்ள போலீசாருக்கு அதனை அறிவித்தால் அப்பணம் எவ்விதக் குறைவுமின்றித் திரும்பக் கிடைத்துவிடும். முற்காலத்தில் ஒட்டகையின் மூலமாகவோ கால் நடையாகவோ செல்வதற்குத்தான் இடமிருந்தது. ஆனால், இக்காலத்தில் மோட்டாரிலும் செல்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பஸ் சர்விஸ்களும் விடப்படுகின்றன. ஆகவே, வழி வசதியைக் கவனிக்கின் அறபி நாட்டிலும் சகல சௌகரியங்களு மேற்படுத்தப் பட்டிருக்கின்றன. தவிர, முற்காலத்தில் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்ப வந்து சேருவதற்குக் குறைந்தது

4, 5-மாதங்களேனும் வேண்டியதாக இருந்தது. இவ்வளவு நீண்ட காலத்திற்குத் தொழில் முறைகளை விட்டுவிட்டு அப்பால் செல்வதாயின் தொழில் நஷ்டமுண்டாகுமோ என்ற அச்சமுண்டாகவும் ஹேது விருந்தது. ஆனல், இக்காலத்தில் வழி வசதி யிருப்பதால் அத்தகைய அச்சத்திற் கிடமில்லை. சென்னையிலிருந்து ஒருவர் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பி வருவதாயின் குறைந்த பக்ஷம் ஒன்றரை அல்லது இரண்டு மாத காலம் போதுமானது. இக்காலத்திற்குள் அங்கு சென்று பார்க்கவேண்டிய இடங்களைப் பார்த்துவிட்டு வரலாம். எனவே, நமது செல்வச் சீமான்கள் ஹஜ்ஜுக்குச் செல்லாமலிருக்க எத்தகைய காரணமும் இக்காலத்திலில்லை. அப்படி இருந்தும் இக்காலத்தில் நமது நாட்டிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்லும் கனவான்களது எண்ணிக்கை வருடந்தோறும் குறைந்து வருவதற்கு வருந்தாமலிருக்க முடியவில்லை. இது நமது தனவந்தர்களுக் கேற்பட்ட மார்க்க பக்திக் குறைவோ, அல்லது விஷயமறியாமையோ, அல்லது வேறு எதுவோ யாம் அறியோம். எவ்வாறாயினும், ஹஜ்ஜுச் செய்யக் கடமைப்பட்டவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்லாமல் தாமதம் செய்வது விரும்பத் தக்கதல்ல வென்பதை அறிவித்துக்கொள்வதுடன், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள ஹதீதை அவர்கள் நினைத்துப் பார்க்கும்படி எச்சரிக்கை செய்கிறேம். எல்லாம் வல்ல இறைவன் நமது செல்வச் சீமான்களுக்கு மார்க்க பக்தியை யளித்து, இஸ்லாமியக் கடமைகளைக் குறைவற நிறைவேற்றி, மற்றவர்களுக்கும் உதவியாக இருக்க அருள் புரிவாளுக. ஆமீன்.

நபிகள்கோன் (ஸல்) அவர்களது நிகரற்ற கட்டளை

எந்த முஸ்லிமும்—அவர் இஸ்லாத்தின் கட்டளைப்படி நடப்பாராயின்—வறிஞராகவோ தரித்திரராகவோ இருக்கமுடியாது என்பது நமது மதநம்பிக்கை. ஜீவனும்சத்தைத் தேடும் விஷயத்திலும் தொழில் செய்யும் விஷயத்திலும் இஸ்லாம் போதித்துள்ள கட்டளைகளை முஸ்லிம்கள் முற்றிலும் பின்பற்றி நடப்பாராயின் தரித்திரம் தலைகாட்டாதோடி விடும் என்பதிற் சந்தேகமில்லை.

தொழில் செய்தல், நியாயமாய்ச் சம்பாதித்தல், வியாபாரம் முதலியவைகளில் முயற்சி செய்தல் பிரயத்தனப்படல் சம்பந்தமாக ஹதீது கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பவைகளை எல்லாம் ஒருங்கே எடுத்தெழுதுவதாயின் அவை தனிப் பெருங்கிரந்தமாகிவிடும். ஆதலின் இச்சிறு வியாசத்தில் அவைகளை எல்லாம் எடுத்தெழுதுவதற்கில்லை. ஆயினும் இரண்டொரு ஹதீதுகளை மட்டிலும் இங்கெடுத்தெழுதவிரும்புகின்றனம். முஸ்லிம்கள் தங்களது முயற்சிகளில் எந்த அளவிற்குஹதீது ஷரீபுகளை பின்பற்றி இருக்கின்றனர்? அல்லாஹ்த ஆலாவின் திருப்தி எந்த அளவிற்கு இருக்கின்றது? நேர்மையும் நாணயமும் எப்படி இருக்கின்றன? என்ற விபரம் இவைகளின் மூலமாகத் தெரிந்துவிடும். தவிரவும், பணம் சம்பாதிப்பதில் முஸ்லிம்களது எண்ணம் தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் மனைவி மக்களையும், ஏழை எளியாரையும், அனைதைகளையும், ஆதரவற்றவர்களையும் காப்பாற்றுவதாக இருக்கிறதா? அல்லது தங்களுக்கு உயர்வையும் கௌரவத்தையும், இன்ப நுகர்ச்சியையும் அடைவதாக இருக்கிறதா? என்

பதையும் முஸ்லிம்கள் கவனிப்பார்களாக. மேலும், அவர்கள் சம்பாதித்த பணத்தை நியாயமான காரியங்களில் செலவு செய்கிறார்களா? அல்லது அநியாயமான காரியங்களில் செலவு செய்கிறார்களா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கட்டும். ஒவ்வொரு முஸ்லிமும் இந்த ஹதீதுகளைத் தங்கள் முன் வைத்துத் தங்கள் முயற்சிகளில் இவ்விஷயங்கள் எந்த அளவிற்குச் சரியாக இருக்கின்றன என்பதைக் கவனிப்பது மிகவும் அவசியமாகும்.

நபிகள்பெருமான் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதாவது :—

நீங்கள் எப்பொழுதும் நிரந்தரமாக உலகில் இருப்பவர்கள் என நினைத்து அதற்குத் தக்கவாறு உலகத்திற்காக முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். நாளைக்கே நீங்கள் மரித்து விடுவீர்கள் என்று நினைத்து மறு உலக வாழ்விற்காக முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் உலகத்தைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள். நாளைக்கே மரித்து விடுவீர்கள் என்று நினைத்து மறுமைக்காக முயற்சி செய்யுங்கள். எவர் தனது மனைவி மக்களுக்காக நியாயமான முறையில் பொருள் தேடுகிறாரோ அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்பவரது அந்தஸ்தில் அவரது அந்தஸ்திருக்கிறது. நியாயமான முறையில் நாணயமாக உலகத்தைச் சம்பாதிப்பவர் ஷஹீதுகளது அந்தஸ்தில் இருக்கின்றனர்.

ஹலாலான பொருளைச் சம்பாதிப்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும். எனது உம்மத்தோருக்கு அண்மையில் ஒருகாலம் வரப்போகிறது. அக்காலத்தில் ஜனங்களுக்குத் தங்கள் லௌகீக வைதீகக் காரியங்களை ஒழுங்கு செய்து கொள்வதற்கு திர்ஹமும் தினாரும் (வெள்ளியும் தங்கமும்) தேவையாயிருக்கும். எனவே, உங்களில் எவர் மறுமைக்காக இம்மையை விடாமலும், இம்மைக்காக மறுமையை விடாமலுமிருந்து, இரண்டையும் எடுத்துக் கொள்கிறாரோ அவர்தான் சிறந்தவராவார்.

எவர் பெருமைக்காகவும் கௌரவத்திற்காகவும் பொருள் தேடுகிறாரோ அவர்மீது அல்லாஹ்வின் கோபம் வெளியாகும் நிலைமையில் தான் அவர் அல்லாஹ்வைச் சந்திப்பார்.

எவர் யாசகம் கேட்காமலிருப்பதற்காகவும் தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் பொருள் தேடுகிறாரோ கியாமத்து நாளில் அவரது முகம் பதினைன்காம் பக்கத்து நிலாவைப்போல் இலங்கிய வண்ணம் இருக்கும். இறைவன் தனது அடியார்களுக்கு அவர்களது முயற்சிக்கும் எண்ணத்திற்கும் தக்கவாறு கூலி அளிக்கிறான்.

தைரியமுள்ள வியாபாரிக்குச் செல்வம் கிடைக்கிறது. தைரியமற்ற வியாபாரிக்குக் கிடைப்பதில்லை. எவர் முயற்சி செய்கிறாரோ அவர் தனது நோக்கத்தை அடைந்து விடுகிறார். முயற்சி செய்கிற ஒவ்வொருவருக்கும் அவருக்குத் தக்கவாறு கிடைக்கிறது.

பிரயாசை செய்யுங்கள்; ஸ்தூல சுகத்தையும் செல்வத்தையும் அடையுங்கள்

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களான ஸஹாபிகளுடன் உட்கார்ந்திருந்தார்கள். அதுபொழுது பலமும், சுறுசுறுப்பும், உழைப்பும் உள்ள வாலிபர் ஒருவர் தனது வேலையில் கவனம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் அவ்வாலிபரைக் குறித்து “ஆவோ! இம்மனிதரது வாலிபமும் வனப்பும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யப்படலாகாதா?” என்பதாகக் கூறினர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் “அப்படிக் கூறுதீர்கள். அவர் ஜனங்களிடம் யாசகம் கேட்கத் தேவை ஏற்படக் கூடாது; பிறரிடம் தேவையற்றவராகி விட வேண்டும் என்ற எண்ணத்தின் பேரில் தனது சொந்தத்திற்காக முயற்சி செய்வாராயின் அவர் அல்லாஹ்வின் பாதையில் உழைப்பவராகவே இருக்கிறார். அவர் தனது விருத்தாப்பிய மாதா பிதாவுக்காக அல்லது பல மற்ற சிறு குழந்தைகளுக்காக உழைப்பாராயின் அப்பொழுதும் அவர் அல்லாஹ்வின் பாதையிலேயே உழைப்பவராக இருக்கிறார். ஆனால், அவர் பெருமைக்காகவும் கண்ணியத்திற்காகவும் உழைப்பாராயின் அவர் ஷைத்தானின் பாதையில் இருக்கிறார்” என்பதாகக் கூறினார்கள்.

ஹஜ்ரத் உமர்பாரூக் (றலி.) அவர்களது அறிவுறுத்தல்.

சம்பாத்தியம் செய்யாமல் உட்கார்ந்து கொண்டு “நாயனே! எனக்குச் சம்பத்தைக் கொடு” என்பதாகப் பிரார்த்தனை மாத்திரம் புரிந்து கொண்டிருப்பது எந்த முஸ்லிமுக்கும்

அழகல்ல. ஏனெனில், வானத்திலிருந்து வெள்ளியும் தங்கமும் வர்ஷிக்கப்படுவதில்லை என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமாகும்.

நமது ஜீவனோபாயம்.

நாம் சம்பாத்தியம் செய்வதற்கு உத்தியோகம் பெறுதல் என்ற ஒரு வழியைத்தான் நம்பி இருக்கிறோம். அதுவும் சர்க்கார் உத்தியோகமாக இருக்கவேண்டும். சர்க்கார் உத்தியோகத்திலும் பெரும் பதவிக்குப் போய் சேரும்படியான இலாக்காவாக இருக்கவேண்டும் என்பதே.

சம்பாத்தியம் செய்தல் என்பதானது ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து உத்தியோகத்தைப் பெறுதல், உத்தியோகம் கிடைக்காவிடில் பூமியை விற்பனை செய்து அல்லது கடன் வாங்கி வயிறு வளர்த்தல் அதற்கப்புறம் கை நீட்டுதல் என்பதாகவே கருதி இருக்கிறோம். உத்தியோகம் கிடைக்கும் வரை இறைவனிடம் துஆச் செய்து கொண்டிருத்தல், விர்துகள் ஓதுதல், வேண்டுதல் செய்து கொள்ளல், அப்புறம் உத்தியோகம் கிடைத்து விட்டால் உத்தியோகத்தை மதிக்காமல் தனக்குக்கிடைத்துள்ள உத்தியோகப்பதவி தனது அந்தஸ்திற்குத் தாழ்ந்தது என்று நினைத்து, அதே கவலையில் தனது உத்தியோகப் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற முயலாதிருத்தல், வெள்ளாட்டைப் போல் பச்சையைக் கண்டவிட மெல்லாம் அலைந்து நுனிப்புல் மேய்தல், பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்களைப் பார்த்து விண்ணப்பங்களையும் சிபாரிஷ் கடிதங்களையும் அனுப்புதல் ஆகியவைகளே ஜீவனோபாயத்தைத் தேடுதற்குரிய முயற்சி என்பதாகக் கருதி இருக்கிறோம். இதுதான் இஸ்லாத்தின் போதனையா? இதுதான் முஸ்லிம்களது வேலையா? என்பதை அன்பர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

எகிப்தில் முஸ்லிம் ஆதிக்கம் வந்த வரலாறு

இவ்வுலகத்திலுள்ள ஜனத்தொகையில் ஐந்திரண்டு பாகம் முஸ்லிம்களது ஜனத்தொகையாகும். ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடமேற்கு எல்லை அதாவது மொரோக்கோவிலிருந்து இந்தியாவரை முஸ்லிம்களது தனிப்பெரும் நாடுகளே இருந்து வருகின்றன. இந்தியா, ஜாவா, சீனு ஆகிய நாடுகளில் முஸ்லிம்கள் கோடிக்கணக்கில் வாசஞ் செய்கின்றனர். ஒரு காலத்தில் ஐரோப்பாவிலுள்ள ஸ்பெயின், போர்ச்சுகல், பிரான்சின் தென்பகுதி, பால்டிக் நாடுகள் முதலாக இந்தியாவின் எல்லா நாடுகளிலும் முஸ்லிம் ஏகாதிபத்தியமிருந்தது. என்ருலும், இற்றை நாளில் துருக்கி, இராக், ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளே பூரணசுயேச்சையும், ராணுவ உரிமையும் பலமுமுள்ள நாடுகளா இருக்கின்றன. ஹிஜாஸ், யமன் தேசங்கள் பூரண சுயேச்சையுள்ள நாடுகளாக இருந்தாலும் கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவைகளில் அத்துணை பலம் பொருந்திய நாடுகள் என்று சொல்வதற்கில்லை. ஆனல் சில மாதங்களுக்கு முன்னர்தான் பூரண சுயேச்சையை அடைந்த எகிப்தைப் பற்றி முஸ்லிம் உலகம்மிகக்களிப்படைந்தது. அத்தேசம் கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவைகளில் முழுபலம் பெற்று விடவில்லை. அவைகள் பூரணப் பலம் பெற இன்னும் பல்லாண்டுகள் செல்லவேண்டும். அப்படி இருந்தும் அத்தேசம் சுயேச்சையடைந்தது என்பதைக் கேட்டமாத்திரத்தில் அடிமை தேசமாகிய இந்தியாவில் முஸ்லிம்கள் மட்டு மில்லாமல் முஸ்லிமல்லாதாரும் கூடச் சந்தோஷமடைந்தனர். அத்தேசத்துடன் உறவு கொண்டாடுவதற்கு ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் போட்டி போடுகின்றன. எல்லா தேசங்களின் திருஷ்டியும் அத்தேசத்தின் பால் விழுவதற்கு அது அமைந்திருக்கும் இடம் அத்துணை வசதியான இடமாக இருக்கிறது. அத்தேசம் அதிர்ஷ்டவசமாக இஸ்லாமிய தேச

மாக இருப்பதும், முஸ்லிம் அரசாங்கம் அங்கிருப்பதும் முஸ்லிம்களுக்குக் களிப்பையும் பெருமையையும் அளிக்கிறது. எனவே இவ்வளவு முக்கியாம்சத்தையுடைய எகிப்துதேசம் முஸ்லிம்களது ஆட்சியில் எப்படி வந்தது? அங்கு இஸ்லாம் பரவியது எங்ஙனம்? என்ற விபரத்தை இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுக்கு அறிவிப்பது மிகவும் உசிதமாகும். தவிரவும், ராஜிய விஷயத்தில் முஸ்லிம்களுக்கு எகிப்து அதிக முக்கியாம்சம் பெற்றிருப்பது போல் மத விஷயத்திலும் முஸ்லிம்களுக்கு அத்தேசம் இன்னும் அதிக முக்கியாம்சமுள்ளதாகவே இருக்கிறது. எவ்வாறெனில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது கோத்திரத்திற்கு முதற் தந்தையான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது தாயார் பீபி ஹாஜரா அவர்கள் எகிப்தில் பிறந்த சீமாட்டியாகவும், அத்தேசாதிபதியின் செல்வப்புதல்வியாகவுமிருந்து வருகிறார். ஆகவே முஸ்லிம்களுக்கு அத்தேசம் தாய்நாடாகும். அல்லாமலும், ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது சகோதரரான ஹஜ்றத் இஸ்ஹாக் (அலை.) அவர்களது புதல்வரான ஹஜ்றத் யாக்கூப் (அலை.) அவர்களது சந்தியினர் வெகுகாலம் வரை எகிப்திலேயே வாழ்ந்து வந்தனர். பின்னர் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களது காலத்தில் தான் அந்த மகாபலாட்டியமும் மகத்துவமும் பொருந்திய றஸூல் அவர்களது முயற்சியால் எகிப்தரசனிடமிருந்து அவ்வம்சத்தினர் விடுதலையடைந்தனர். எனவே, எகிப்தின் வரலாறு முஸ்லிம்களுக்கு அதிக ருசிகரமா இருக்குமென்று நம்புகிறோம். (ப. ர்.)

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 'ஹுதைபிய்யா' உடன்படிக்கைக்குப் பின்னர் உலகத்திலுள்ள பல அரசர்களுக்கும் ஸ்ரீமுகம் அனுப்பி அவர்களை இஸ்லாத்தில் சேருமாறு அழைத்தார்கள். இவ்வழைப்பு அக்காலத்திலிருந்த உரோமச் சக்கிரவர்த்தியான ஹிர்க்கலுக்கும் அனுப்பப்பட்டது. அவரது அதிகாரத்தின் கீழிருந்த எகிப்து, ஷாம் முதலிய தேசத்து சிற்றரசர்களுக்கும் அனுப்பப்பட்டது. இவர்களில் எகிப்து 'மக்கூக்கிஸ்' என்ற அரசர் அந்த ஸ்ரீமுகத்திற்கு மதிப்புக்கொடுத்து அதனை கௌரவித்து, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு வெகுமதிகளும் அனுப்பினார். ஆயினும் இஸ்லாத்தைத் தழுவிவிடவில்லை. இதுபோல உரோமச் சக்கிரவர்த்தியும் இஸ்லாத்தின் சத்தியத்தன்மையையுணர்ந்து ஸ்ரீமுகத்திற்கு அதிக கௌரவமளித்தாராயினும் இஸ்லாத்தைத்தழுவினாரல்லர். ஆனால், இதே ஹிர்க்கலுக்குக் கிழில் ஷாம்தேசத்தின் எல்லைபுறத்திலிருந்த சிற்றரசர்கள் இந்த ஸ்ரீமுகத்தை அவமதித்ததுடன் இவைகளைக் கொண்டுபோன தூதர்களில் ஒருவரைக் கொலைசெய்ததுடன், மற்றொருவரைத் தொந்தரை செய்து அனுப்பிவைத்து விட்டனர். எனவே, இவர்களது இச்செய்கைக்காக இவர்களைத் தண்டிக்க நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் படைகளை அனுப்பியபோது அந்த ஹிர்க்கல் சக்கிரவர்த்தி தமது சிற்றரசர்களுக்கு மறைமுகமாக உதவி புரிந்து அப்பால் பகிரங்கமாகவும் உதவி புரியலானார். இதன்பேரில் ஷாம் தேசத்தின் மீது முஸ்லிம்கள் பின்னும் பின்னும் படையெடுக்க நேர்ந்தது. இதன்பயனாக உரோம ஏகாதிபத்தியத்தின் கீழ்பகுதி அரசாங்கத்தின் பெரும் பாகம் முஸ்லிம்கள்பால் வீழ்ச்சியடைந்தன. ஹிர்க்கலது தலைநகரம் 'அந்தாக்கியா'விலிருந்து கான்ஸ்டான்டிநோபிளுக்கு மாற்றப்பட்டது.

முஸ்லிம்கள் தங்களது வடக்கெல்லையில் உரோமச் சக்கிரவர்த்தியையும், அவரது சிற்றரசர்களையும் முறியடித்து ஷாம், பலஸ்தீன் முதலிய நாடுகளைக் கைப்பற்றி ஏஷியா மைனரின் வடக்கெல்லைவரை சென்று விட்டதால் அறபிதேசத்திற்கு அதன் வடக்கெல்லை வழியாக ஏற்பட இருந்த அபாயம் நீங்கிவிட்டது. ஆயினும், அறபி தேசத்திற்கு ஏற்பட இருக்கிற அபாயம் முற்றிலும் நீங்குவதற்கில்லை. ஏனெனில், எகிப்து தேசத்தை அங்குள்ள சுதேசி அரசர் ஆண்டு வந்தாலும், அவ்வரசர் உரோமச் சக்கிரவர்த்திக்குக் கப்பம்கட்டுபவராகவும், அவரது கட்டளைப்படி நடப்பவராகவுமிருந்தார். அங்கு உரோமர்கள் ஏராளமாகக் குடியேறி அதனைத் தங்கள் குடியேற்ற நாடாக்கி வைத்திருந்தனர். ஆகவே, எகிப்தில் உரோமர்களுக்கிருந்த ஆதிக்கம் ஒழியாவிடில் எகிப்து வழியாக உரோமர்கள் அறபி நாட்டிற்குக் கடல் மார்க்கமாகவும் கரை மார்க்கமாகவும் தொந்தரை விளைவிக்கும் நிலைமையிலேயே இருந்தனர். இவ்வழியாக உரோமர்கள் படையெடுத்தால் ஹிஜாஸ் மாகாணத்தின் நிலைமை மிகப் பயங்கரமான அபாயத்திற்குட்பட வேண்டியதாக இருந்தது. ஏனெனில், அக்காலத்திலுள்ள இஸ்லாமிய அரசாங்கத்திற்குப் பலமான கடற்படை இல்லை. மக்கா மதீனா ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்கள் செங்கடலுக்

குக் கிழக்கில் 80—90 மைல்களுக்குள்ளாகவே இருக்கின்றன. ஆதலால், பிரசித்திபெற்ற ராஜதந்திரியும், பிரபல ஸஹாபிகளில் ஒருவருமான ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி) அவர்கள் எகிப்து தேசத்திலுள்ள உரோமர்களது பலத்தையும் செல்வாக்கையும் ஒடுக்கி, இஸ்லாத்திற்கு அங்கு செல்வாக்கேற்படும்படி செய்வதன் ஆவசியத்தைப்பற்றி அக்காலத்தில் கலீபாவாக இருந்த ஹஜ்றத் உமர்பாறுக் (ரலி.) அவர்களுக்கு ஆலோசனை கூறினர். தவிரவும், ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் வியாபாரத்தின் நிமித்தமாக எகிப்துக்குப் பலமுறை சென்று வந்திருப்பதால் ராஜீய விஷயங்களுக்கும் இதர வசதிகளுக்கும் எகிப்து தேசத்தின் முக்கியாம்சத்தையும், அங்கு உரோமர்களுக்குச்செல்வாக்கிருப்பதால் இஸ்லாமிய நாட்டிற்கு ஏற்படக்கூடிய அபாயங்களையும் நன்கு உணர்ந்திருந்தார். ஆதலின், எகிப்து விஷயத்தில் மற்றவர்களைப் பார்க்கினும் ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (ரலி.) அதிகம் தெரிந்தவர். எனவே, இவரது யோசனைகள் ஹஜ்றத் உமர் பாறுக் (ரலி.) அவர்களுக்குப் பிடித்தமாகவே இருந்தன. ஆதலால், அதனை ஏற்றுக்கொண்டார்கள். என்றாலும், சமாதானப் பிரியரான ஹஜ்றத் உமர் பாறுக் (ரலி.) அவர்கள் 4000 போர் வீரர்களைக்கொண்ட ஒரு படைக்கு ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (ரலி.) அவர்களைத் தலைமையாக்கி எகிப்துக்கு அனுப்பிவைத்தும், "எகிப்து எல்லைக்குட் பிரவேசிப்பதற்கு முன் எனது தடையுத்தரவு உமக்குக் கிடைக்குமானால் நீர் அத்தேசத்திற்குச்செல்லாமல் திரும்பி வந்துவிடவேண்டும்" என்றும் தாக்கீது செய்தார்கள்.

எனவே, இக்கட்டளைப்படி ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் 4000 போர் வீரர்களுடன் எகிப்தை நோக்கிச் சென்றார்கள். கலீபா அவர்களுக்கு இப்படையெடுப்பைப் பற்றிப் பூரண திருப்தியில்லா திருந்ததால் "எகிப்துக்குள் பிரவேசியாதிருந்தால் திரும்ப வந்து சேரவேண்டும்" என்று கட்டளையிட்டு ஒரு தூதுவரை அனுப்பினர்கள். என்றாலும், இக்கடிதம் கிடைப்பதற்குள் ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் எகிப்து எல்லையைத் தாண்டி விட்டார்கள். ஆதலால், கடிதத்தின் கட்டளைப்படி படையெடுப்பை நிறுத்துவதற்கில்லை. எகிப்து எல்லைப்புற தேசத்திற்குள் இஸ்லாமியச் சேனைகளுக்கு எதிர்ப்பு இருக்கவில்லை. பிரபல தத்துவ ஞானியும் வைத்தியாசிரியருமான ஹக்கீம் ஜாலினூஸுடைய பிறப்பிடமாகிய பர்மா என்ற நகரில்தான் முதல் முதலாக எகிப்து சர்க்கார் படைகள் இஸ்லாமியப்படைகளை எதிர்த்தன. இப்பொழுது இந்நகரம் பாழடைந்து விட்டாலும் அக்காலத்தில் இது மிகப்பிரபலமடைந்திருந்தது. ஒரு மாத காலம் வரை இவ்விடத்தில் யுத்தம் நிகழ்ந்தது. இறுதியாக உரோமப்படை தோல்வியடைந்தது. முஸ்லிம்கள் வெற்றி முழக்கத்துடன் உள் நாட்டில் பிரவேசித்துப் பல இடங்களையும் கைப்பற்றிக் கொண்டு பில்பைஸ் ...

'பிஸ்தாத்' யுத்தம்.

அக்காலத்தில் இந்த இடம் வெறும் மைதானமாக இருந்தது. நீலநதிக்கும் முத்தம் என்ற பர்வதத்திற்கு மிடையிலுள்ள இந்த இடத்தில் சர்க்கார் கோட்டையும், உரோம ஏகாதிபத்தியத்தின் உத்தியோகஸ்தர்களும், சேனைகளுமிருந்தன. இக்கோட்டையின் சுவரில் நீலநதியின் அலைகள் அடித்துக் கொண்டிருந்தன. கப்பல்கள் வருவதற்கு மிகவசதியாகவுமிருந்தது. ஆதலால், இங்கு நகரம் இல்லாவிட்டாலும் அரசாங்கக் காரியாலயங்கள் இவ்விடத்திலேயே இருந்தன. இங்கு மக்கூகிஸ் இஸ்லாமிய சேனைகளை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகளை எல்லாம் முன் ஜாக்கிரதையாகவே செய்து வைத்திருந்தார். 4000 பேர்களைக் கொண்ட சிறு சைனியம் இக்கோட்டையைக் கைப்பற்றுவதற்குப் போதியதாக இல்லாததால் தளகர்த்தர் ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் உதவிப் படையனுப்பும்படி கலீபா அவர்களுக்கு தகவல் தெரிவித்தார்கள். கலீபா அவர்கள் தகவல் கிடைத்தவுடன் 10,000 பேர்களைக்கொண்ட ஒரு படையையும் 4 தளகர்த்தர்களையும் அனுப்பி, இத்தளகர்த்தர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆயிரம் குதிரை வீரர்களுக்குச் சமம் என்று தெரிவித்தார்கள். ஹஜ்றத் ஜுபைறுப்னுல் அவாம் (ரலி.), உபாதத்துப்னுஸ்ஸாமித் (ரலி.), மிக்தாதுப்னு உமர் (ரலி.), ஸல்மத்துப்னு கலத் (ரலி.) ஆகியவர்கள்தாம் இந் நான்கு தளகர்த்தர்களாவார்கள். இவர்களில் ஹஜ்றத் ஜுபைறுப்னுல் அவாம் (றலி) அவர்களது அந்தஸ்தையும்

கௌரவத்தையும் கவனித்து அவரை ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்கள் சேனாதிபதியாக நியமித்து முற்றுகை யிடுதல் முதலிய சகல பொறுப்புகளையும் அவரிடம் ஒப்புவித்தார்கள். ஹஜ்றத் ஜுபைறுப்னுல் அவாம் (றலி.) அவர்கள் சேனாதிபதி பதவியை ஏற்றதும் முற்றுகைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஏழு மாத காலம்வரை முற்றுகை நடந்தது. இரு கக்ஷிக்கு மிடையில் இடையிடையே பல யுத்தங்களும் நிகழ்ந்தன. ஆயினும், எவருக்கும் வெற்றியும் தோல்வியும் ஏற்படவில்லை.

ஒரு நாள் ஹஜ்றத் ஜுபைறுப்னுல் அவாம் (றலி.) அவர்கள் தமது போர்வீரர்களை நோக்கிப் பிரசங்கம் செய்கையில், "சோதரீர்! இன்று யான் முஸ்லிம்களுக்காக என்னை தத்தம் செய்கிறேன்" என்று உருக்கமாகக் கூறிவிட்டு, உருவியவாளும் கையுமாக கோட்டைச் சுவரின் மீதேறினார்கள். அவரைப் பார்த்து வேறு சில ஸஹாபிகள் சுவரின் மீதேறினர். இவர்கள் சுவரின் மீது நின்று கொண்டு ஏககாலத்தில் "அல்லாஹு அக்பர்" என்று தக்பீர் முழங்கினர். இவர்களைப் பின்பற்றி முஸ்லிம் வீரர்கள் அனைவரும் தக்பீர் முழங்கினர். இம்முழக்கத்தால் பூமி அதிர்ந்ததென்னலாம். இம்முழக்கம் கிறிஸ்துவர்களைக் கலங்கச் செய்து விட்டது. முஸ்லிம்கள் கோட்டைக்குள் வந்துவிட்டார்கள் என்று நினைத்து அவர்கள் உயிர் தப்பி ஓடத்தலைப்பட்டனர். இதற்குள்ளாக சஹாபிகள் கோட்டைக்குள் ளிறங்கித் தலைவாயலைத் திறந்து விட்டனர். உடனே முஸ்லிம் வீரர்கள் கடல் மடைதிறந்தது போல் கோட்டையினுட் பிரவேசித்தனர். உரோமச் சக்கிரவர்த்திக்கு உட்பட்டவரும், எகிப்து அரசனுமான மக்கூக்கிஸ் முஸ்லிம்களிடம் சமாதானத்திற்கு மன்றாடினர். முஸ்லிம்களும் சமாதானத்தையே முதன்மையாகக் கருதுபவர்களாதலின் எவ்வித ஆக்ஷேபணையுமின்றி அங்கீகரித்தனர். என்றாலும், சமாதான ஏற்பாட்டை உரோமச் சக்கிரவர்த்தியான ஹிர்க்கல் கேள்விப்பட்டு மிகவும் கோபமடைந்தது மட்டுமில்லாமல் அறபியரை எதிர்க்க எகிப்தியர்களுக்கு ஆற்றலில்லை யென்றால், உரோமர்கள் கொஞ்சமாகவா இருக்கிறார்கள் என்று கண்டன உத்தரவு பிறப்பித்தனன். இதனால் சமாதான உடன்படிக்கை ஊர்ஜிதமாகாமல் மறுபடியும் இருதிறத்தாருக்கும் யுத்தம் மூண்டது.

அலக்ஜாண்டரியா யுத்தம்

பிஸ்தாத்தைக் கைப்பற்றியதையும், சமாதான உடன்படிக்கையை உரோமச் சக்கரவர்த்தி முறித்து விட்டதையும் ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்கள் கலீபா அவர்களுக்குத் தெரிவித்து யுத்தம் செய்வதற்கு அனுமதி வேண்டினர். எனவே, கலீபாவான ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களது அனுமதியின் பேரில் இஸ்லாமியச் சைனியங்கள் ஹிஜ்ரீ 21-ம் வருஷத்தில் அலக்ஜாண்டரியாவை நோக்கிப் புறப்பட்டன. முஸ்லிம் சைனியங்களின் புறப்பாட்டை யுணர்ந்த உரோமர்களும், எகிப்து சுதேசியர்களான கிப்தியரும் சைனியங்களை பிஸ்தாத்திலேயே தடுத்து நிறுத்திவிடவேண்டுமென்ற எண்ணத்தால் பெரும்படையுடன் எதிர்த்தனர். தெய்வ வழிபாட்டில் இருக்கும் சைனியங்களை எதிர்க்க எவரால்தான் முடியும்? உரோமர் புறங்காட்டினர். அலக்ஜாண்டரிய்யாவரை முஸ்லிம்களை எதிர்க்க எவருக்கும் துணிவுவரவில்லை.

எகிப்தரசனான மக்கூக்கிஸ் ஜிஸ்யா வரி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு முஸ்லிம்களுடன் சமாதானமாகிவிட விரும்பினன். ஆயினும் உரோமர்களுக்குப் பயந்து ஒன்றும் செய்ய முடியாதவனாயினன். முஸ்லிம்களைப் பயங்காட்டி யுத்தத்தை நிறுத்துவதற்காக மக்கூக்கிஸ் ஒரு யுக்தி செய்தான். அலக்ஜாண்டரிய்யா நகரிலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் போர்வீரர்களது உடை யணிவித்து நகரத்தின் கோட்டை முன் வரிசை வரிசையாக நிறுத்திவைத்தான். ஸ்திரீகளை அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதற்காக அவர்களை முதுகு காட்டி நிற்கும்படி செய்திருந்தான். என்றாலும், அஞ்சுபவர் முஸ்லிம்களா? பனங்காட்டு நரி சரசரப்புக்கா அஞ்சப்போகிறது? முஸ்லிம் தளகர்த்தரான ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) தூதுவர்களை அனுப்பி "உங்களது நோக்கம் எங்களுக்குத் தெரியாமலில்லை. இதுவரை நாங்கள் வெற்றி பெற்றதெல்லாம் போர்வீரர்களது எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் மூலமாகவன்று என்பதை நீங்கள் உணரவில்லை. உங்களது சக்கிரவர்த்தியான ஹிர்க்கல் எத்துணை மூர்த்தண்யமாகவும் துணிவுடனும் தளவாடங்களுடனும் எங்களை எதிர்த்தார் என்பதும், முடிவு என்னவாயிற்றென்பதும் உங்களுக்குத் தெரியவில்

லேயா ?'' என்று சொல்லியனுப்பினர். மக்கூக்கீஸ் அரசன் தூதுவர்களிடம் "உங்கள் தலைவர் கூறுவது மெய்யேயாகும். எங்களது சக்கிரவர்த்தியை கான்ஸ்தாந்தி நோபிளுக்கு மூட்டை முடிச்சுடன் அனுப்பிவிட்டவர்கள் இதே அறபியர்தாம் என்பதையானறிவேன்'' என்று ஒப்புக்கொண்டான். ஆயினும், உரோமர்கள் மக்கூக்கீஸைத் திட்டி சமாதானத்திற்கிணங்கவிடாமறற்றடுத்து யுத்தத்திற் காயுத்தஞ் செய்தனர்.

எகிப்தரசனுன மக்கூக்கீஸுக்கு யுத்தம் செய்ய இஷ்டமில்லாதிருந்தும் உரோமர்களது நிர்ப்பந்தத்தால் அவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டிய திருந்ததாலும், உரோமர்கள் முஸ்லிம்களை ஜெயிக்க முடியாதென்பதை உணர்ந்திருந்ததாலும் தமது சுதேசிகளது உயிரையும் பொருளையும் காப்பதற்காக புத்திசாலித்தனமான ஒரு நடவடிக்கையை ஏற்படுத்திக்கொண்டார். உரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்கிடையில் நடைபெறுகிற இந்த யுத்தத்தில் தாம் நடுநிலைமையாக இருப்பதாகவும், வெளிக்கு மட்டிலும் உரோமர்களுடன் சேர்ந்திருப்பதாகவும், முஸ்லிம்கள் சுதேசிகளுக்குச் சேதம் விளைவிக்கக் கூடாதென்றும் முஸ்லிம்களது தலைவரான ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்களிடம் இரகசிய உடன்பாடு செய்துகொண்டார். இவ்வுடன்பாட்டிற்குப் பின் எகிப்து சுதேசியர் முஸ்லிம்களை மூர்க்கமாக எதிர்க்கவுமில்லை, சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கு உதவியும் புரிந்தனர். அதாவது அலக்ஜாந்தரியாவை முற்றுகையிடும் முஸ்லிம் வீரர்களுக்கு உணவுப் பொருள்கள் வரும் விஷயத்தில் தடைகள் செய்யவில்லை.

அலக்ஜாந்தரியா முற்றுகை யிடப்பட்டது. பலநாள் முற்றுகை நடந்தது. சிற்சில சமயங்களில் உரோமர்கள் கோட்டைக்கு வெளியில் வந்து முஸ்லிம்களைப் பலமாகத் தாக்குவர். இவ்விதமாக இருந்ததில் ஒருநாள் இருதிறத்தாருக்கும் பலமான போராட்டம் நிகழ்ந்தது. அதுபோழ்து உரோமர்களிலுள்ள ஒரு குதிரை வீரன் முன் வந்து, என்னுடன் தனிமையில் போர் செய்யத் தைரியமுள்ளவர் முன் வரட்டும் என்று அறைகூவினன். ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்களால் அனுப்பப்பட்ட நான்கு தளகர்த்தர்களில் ஒருவரான முஸல்லமா (றலி.) அவர்கள் அவனது அறைகூவலை ஏற்றுக்கொண்டு சென்றார். ஆயினும், அவன் இவரைக் கீழே தள்ளிவிட்டது மல்லாமல், வாளால் வெட்டப்போகும் தருவாயில் முஸ்லிம் குதிரை வீரர்களிலொருவர் அவனை எதிர்த்து நரகத்திற் கனுப்பிவிட்டார். அவர் இவ்வாறு கீழே தவறி விழுந்தது தலைவர் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்களுக்குக் கோபத்தையும் விசனத்தையும் அளித்தது. இதனுல் அவரது அந்தஸ்தையும் கவனியாமல் "பெண்பிள்ளை ரத்தம் உள்ளவர்கள் போர்க்களம் வருவானேன் ?'' என்று கூறினர். அவரது இவ்வார்த்தைகள் ஹஜ்றத் முஸல்லமா (றலி.) அவர்களுக்கு வருத்தத்தைத் தாக்கூடியனவாயிருந்தாலும், இஸ்லாமிய சகோதரத்துவம், சகிப்புத் தன்மை முதலியவைகளை அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் நேரடியாகக் கற்றுக் கொண்டிருப்பதால் க்ஷமித்துக் கொண்டார்.

பிறகு, அதே யுத்தத்தில் பகைவர்களை நெருக்கி யுத்தம் செய்து முன்னேறி கோட்டைக்குள்ளும் சென்றுவிட்டனர். உரோமர்கள் மிக வீரதீர பராக்கிரமத்துடன் போர் செய்து கோட்டைக்குள் சென்ற முஸ்லிம் வீரர்களை வெளியேற்றிவிட்டுக்கதவைச் சாத்திக் கொண்டனர். அதுபோழ்து முஸ்லிம்களது தலைவரான ஹஜ்றத் அம்றுப்னு ஆஸ் (றலி.) அவர்களும், மேற்கண்ட வீரர் ஹஜ்றத் முஸல்லமா (றலி.) அவர்களும் தனிமையில் கோட்டைக்குள் சிக்கிக்கொண்டனர். இவர்கள் முஸ்லிம்களது தலைவர்களாகவும், சேனுதிபதியாகவும் இருக்கிறார்கள் என்பதையும், பிரபலஸ்தர்கள் என்பதையும் உரோமர்கள் அறியமாட்டார்கள். ஆதலால், உரோமர்கள் இவ்விருவரையும் நோக்கி நீங்களிருவர்மட்டிலும் தனித்துப் போர் செய்து தப்பிப்போக உங்களால் முடியாது. உங்களில் ஒருவர் எங்களில் ஒருவருடன் சண்டை போடுங்கள். நீங்கள் ஜெயித்தால் உங்களை கோட்டையைவிட்டுச் செல்ல அனுமதிக்கிறோம். தோற்றால் எங்களிடம் கைதிகளாக இருக்கவேண்டும்'' என்று கூறினர்.

இந்நிபந்தனையை ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்கள் ஏற்றுக்கொண்டு உரோம வீரனைத்தாமே எதிர்க்க விரும்பினர்கள். ஆனுலும், முஸல்லமா (றலி.) அவர்கள் அதனைத் தடுத்து, தங்களுக்கு ஆபத்து வந்தால் முஸ்லிம்களனைவருக்கும் கஷ்டம். எனக்கு ஆபத்து வந்தால் அவ்வாறுன கஷ்டமெதுவு மில்லையாதலின், நான்தான் உரோ

மனை எதிர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உரோமனை எதிர்த்து ஜெயித்து விட்டார். உடனே, இருவருக்கும் வழிவிட்டுக் கொடுக்கப்பட்டதால் கோட்டைக்கு வெளியில் வந்து விட்டனர். அதுபோழ்து ஹஜ்றத் முஸல்லமா (றலி.) அவர்களைப்பற்றித் தாம் முன் சொன்ன வார்த்தைகளுக்காக ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

இவ்விதமாக வெற்றியும் தோல்வியுமில்லா திருப்பதைப் பற்றி ஒரு நாள் சேனாதிபதி அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்கள் வருத்தமுற்று, தமது போர் வீரர்களையும் தளகர்த்தர்களையும் ஒன்று கூட்டி உருக்கமாகவும், உணர்ச்சியுடனும் பிரசங்கம் செய்து, கலீபா அவர்களால் உதவிக்கு அனுப்பப்பட்ட 4 தளகர்த்தர்களில் ஒருவரான ஹஜ்றத் உபாதத்துப்னுஸாமித் (றலி.) அவர்களைச் சேனாதிபதியாக நியமித்து ஹஜ்றத் ஜுபைறுப்னுல் அவாம் (றலி.) முஸல்லமத்துப்னு முக்லத் (றலி) ஆகிய இருவரையும் முன்னணிப் படைக்குத் தளகர்த்தர்களாக நியமித்து அலக்ஜாந்தரிய்யா கோட்டையைப் பலமாகத் தாக்கும்படி செய்தார்கள். முதல் தாக்கிலேயே கோட்டை பிடிபட்டது. உடனே, கலீபா அவர்களிடம் வெற்றிச் செய்தி யறிவிக்குமாறு முஆவியத்துப்னு குதைஜ்(றலி.) அவர்களை அனுப்பி வைத்தார்.

வெற்றிச் செய்தி.

ஹஜ்றத் முஆவிய்யத்துப்னு குதைஜ் (றலி.) அவர்கள் தினந்தோறும் இரண்டு மூன்று மன்ஜில்கள் வீதம் வேகமாக மதீனாவை நோக்கிவந்தார். சரியாக நடுப்பகலில் மதீனாமுனவ்வரா வந்து சேர்ந்தார். ஆயினும், கலீபா அவர்கள் இந்நேரத்தில் களைப்பாறுவதற்காகப் படுத்திருக்கலாம் என்று நினைத்து நேராக மஸ்ஜிது நபவியைநோக்கிச் சென்றார். என்றாலும், நற்செயலாக கலீபா அவர்களது வீட்டு வேலைக்காரப் பெண் இடைவழியில் இவரது வாகனத்தைப் பார்த்து, தூர தேசத்திலிருந்து வருகிற பிரயாணியாக இருக்கவேண்டுமென்று குறிப்பாலுணர்ந்து அவரை நெருங்கி "நீங்கள் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்?" என வினவினள். அவர் அலக்ஜாந்தரிய்யாவிலிருந்து வருவதாகப் பதில் கூறியவுடன் ஹஜ்றத் உமர்பாறுக் (றலி.) அவர்களிடம் சமாச்சாரத்தை அறிவித்து, உடனே திரும்பவந்து "கலீபா அவர்கள் தங்களை அழைக்கிறார்கள்" என அவருக்குத் தெரிவித்தனள். கலீபாவாகிய ஹஜ்றத் உமர்பாறுக் (றலி.) அவர்கள் இவ்வளவு நேரம் கூடத்தாமதம் செய்யவில்லை. தூதுவரைப் பார்ப்பதற்காகத் தாமும் புறப்பட ஆயத்தமானார்கள். அதற்குள்ளாக தூதுவர் சென்று வெற்றிச் செய்தியை அறிவித்தார். கலீபா அவர்கள் வெற்றியைக் கேட்டமாத்திரத்தில் அல்லாஹுதஆலாவுக்கு நன்றி செலுத்தி ஸுஜூது செய்து, பின்னர் மஸ்ஜிதுக்கு வந்தார்கள். ஊரிலுள்ளவர்களுக்கும் தகவல் அறிவிக்கப்பட்டது. பிறகு, தமது விருந்தினரான முஆவியத்துப்னுக் குதைஜ் (றலி.) அவர்களை அழைத்து கொண்டு தம்முடன் உணவருந்தச் செய்தார்கள். உணவருந்திக் கொண்டிருக்கும்போது ஹஜ்றத் உமர்பாறுக் (றலி.) அவர்கள் அவரைநோக்கி தாங்கள் என்னிடம் ஏன் நேரடியாக வரவில்லை? என்று வினவினார்கள். அதற்கவர் "இதுகடுமையான வெய்யல் நேரமாக இருப்பதால் தாங்கள் சிரமபரிகாரம் எடுத்துக் கொள்வதற்காகப் படுத்திருக்கக் கூடும்" என நினைத்தேன் என்றார். இதனைக் கேட்டு ஹஜ்றத் உமர் பாறுக் (றலி.) அவர்கள் "அன்றோ! தாங்கள் என்னைப்பற்றி இப்படியா நினைத்தீர்கள்? நான் பகற்பொழுதில் படுத்துக் கொண்டால் கிலாபத் பதவியின் பளுவைச் சுமப்பவர் எவர்?" என்று கூறினார்கள்.

இஸ்லாமியப் பிரசாரம்

அலக்ஜாண்டரியா வீழ்ச்சிக்குப் பின் உரோமர்களது பலமான எதிர்ப்பு நீங்கிவிட்டது. சேனைகள் பல பாகமாகப்பிரிக்கப்பட்டு நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டன. ஆங்காங்கிருந்த உரோமர்களது சிதறிய படைகள் சிற்சில எதிர்ப்புகளுடன் பணிந்தன. நாட்டில் அமைதி ஏற்பட்டது. ஹஜ்றத் உமர் பாறுக் (றலி.) அவர்களது உத்தரவுப்படி கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதன் விபரம் வருமாறு:

கைதிகள் நடுவில் நிறுத்தப்பட்டனர். முஸ்லிம்கள் ஒரு பக்கமும் கிறிஸ்துவர்கள் மறுபக்கமும் கூடி இருந்து கொண்டனர். கலீபா

அவர்களது பிரகடனம் படிக்கப்பட்டது. இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாகி விடவோ அல்லது தங்கள் மதத்தில் ஸ்திரமாக இருந்து கொள்ளவோ கைதிகளுக்கும் மற்றவர்களுக்கும் பூரண உரிமை இருக்கிறது; இஸ்லாத்தைத் தழுவுபவர்களுக்கு முஸ்லிம்களுக்குள்ள சகல உரிமைகளும் அளிக்கப்படும்; அப்படித் தழுவாதவர்கள் ஜிஸ்யாவரி கொடுத்துச் சுகமாக இருக்கலாம்'' என்றறிவிக்கப்பட்டது. கைதிகள் தங்கள் இஷ்டம்போல் இஸ்லாத்தைத் தழுவவும் செய்தனர், தழுவாமலுமிருந்தனர். அவர்களுக்கு எவ்வித நிர்ப்பந்தமும் விளைவிக்கவில்லை. ஆனால், கைதிகளில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுவதாகக் கூறும்போது "முஸ்லிம்கள் சந்தோஷத்தால் தக்பீர் முழக்கத்துடன் ஆரவாரம் செய்வதும், தங்கள் பழைய மதத்திலேயே இருப்பதாக அறிவித்தால், வருந்திக் கண்ணீர் வடிப்பதுமாக இருந்தனர். இது போல கிறிஸ்துவர்கள் கைதிகளில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுவதாகக் கூறும்போது வருந்துவதும், தங்கள் பழைய மதத்தில் ஸ்திரமாக இருப்பதாகக் கூறும்போது ஆரவாரம் செய்வதுமாக இருந்தனர்.

இவ்விதமாக அத்தேசத்தில் இஸ்லாம் பரவவாரம்பித்தது. முஸ்லிம்கள் அங்கு இருந்த ஒழுங்கு, நேர்மை ஆகியவைகளைப் பார்த்த சுதேசியர் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவ வாரம்பித்தனர். இதன் பயனாய் எகிப்து தேசம் பெருவாரியான மெஜாரிட்டியுடன் முஸ்லிம் நாடாக இன்னும் விளங்கி வருகிறது. அன்று அங்கு ஏற்பட்ட இஸ்லாமிய ஆதிக்கம் இன்றுவரை இருந்து வருகிறது. இடையிடையே சிற்சில சமயங்களில் அயல் நாட்டாருக்குச் சொற்ப செல்வாக் கேற்பட்டாலும், இஸ்லாத்தின் செல்வாக்கு அங்கு இல்லாமற் போகவே இல்லை.

ஸூயஸ் கால்வாய்

ஹிஜ்ரீ 18-ம் வருஷத்தில் அறபி நாட்டில் பஞ்சமேற்பட்டதால் அக்கம்பக்கத்து இஸ்லாமிய நாடுகளிலிருந்து அறபி தேசத்திற்கு உணவுப் பொருள்கள் தருவிக்கப்பட்டன. இம்முறையில் எகிப்திலிருந்தும் பஞ்ச நிவாரணத்திற்கு உணவுப்பொருள்கள் அனுப்பப்பட்டன. ஆனால், அக்காலத்தில் கரைமார்க்கத்தில் அவைகள் சீக்கிரம் வந்து சேருவதற்கு முடியவில்லை. இதனால், ஹஜ்ரத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் எகிப்திற்கும் அறபிக்கும் சீக்கிரத்தில் போக்குவரத்து ஏற்படுவதற்கான மார்க்கத்தை ஏற்படுத்த முயன்றார்கள்.

பிரபல ராஜதந்திரியாகவும், எகிப்து கவர்னராகவுமிருந்த ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்களை இது சம்மந்தமாக மதீனாவிற்கு வரவழைத்துக் கலந்து பேசப்பட்டது. எகிப்திலுள்ள வேறு பல சுதேசிகளும் இவ்வாலோசனையிற் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டனர். நீலநதிக்கும் செங்கடலுக்கு மிடையில் கால்வாய்வெட்டி இரண்டையும் இணைத்து விடுவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. போட்டதிட்டத்தின்படி 6 மாதகாலத்திற்குள் 69 மைல் நீளமுள்ள இக்கால்வாய் வேலை பூர்த்தியடைந்தது. முதல் வருஷத்திலேயே 20 பெரிய கப்பல்கள் இக்கால்வாய்வழியாக நீல நதியிலிருந்து செங்கடல்வந்து ஜித்தா துறைமுகத்திற்கு வந்தன. இக்கால்வாயின் மூலம்எகிப்திற்கும்அறபிநாட்டிற்கும் வியாபார சம்மந்தம் விருத்தியடைந்தது. இக்கால்வாய் பனூஉமய்யாக்கள் கலீபாவாக இருந்தகாலத்திலுமிருந்தது. அப்பாஸிய்யாவம்சத்தினர் ஆட்சி காலத்திலும் இக்கால்வாய் இருந்து பின்னர் நாளடைவில் ஆங்காங்கு இடிந்து தூர்ந்து விட்டது. ஆயினும் அதன் அடையாளங்கள் இன்னமும் இருக்கின்றன. அக்கால்வாய் முற்றிலும் ஒழிந்து போகவில்லை.

இக்கால்வாயை வெட்டும் ஆலோசனை நடந்த போது எகிப்து கவர்னரான ஹஜ்றத் அம்றுப்னுல் ஆஸ் (றலி.) அவர்கள் செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைத்துவிடுவதற்காகத் திட்டம் போட்டு, கால்வாய் வெட்ட வேண்டிய இடம் முதலியவைகளையும் நிர்ணயித்தார். 70 மைல் தூரமுள்ள கால்வாய் வெட்டத் திட்டம் போடப்பட்டது. என்றாலும், அக் காலத்திலுள்ள ராஜிய நிலைமை இடம் தரவில்லை. உரோமர்களின் கப்பற்படை இக்கால்வாய் மார்க்கமாகக் செங்கடலுக்குள் சுலபமாகவந்து ஹாஜிகளுக்கு உபத்திரவம் செய்ய ஹேதுவுண்டு என்ற காரணத்தால் இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அக்காலத்தில் இத்திட்டம் அமல் நடத்தப்பட்டிருப்பின் சூயஸ் கால்வாயை வெட்டியபேறு ஸஹாபிகளுக்குக் கிடைத்திருக்கும். ஆயினும், எகிப்து அரசாங்கத்தின்மூலம் அத்திட்டம் இப்பால் அக்கால்வாயை வெட்டுவதற்கு அதிக உதவியாக இருந்தது.

நெப்போலியன் போனபார்ட்

அன்று ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் காலத்தில் இஸ்லாமியநாடாகமாரிய எகிப்து இஸ்லாமிய அரசியலில் பலமாறுதல்களுக்கும் காரணமாக இருந்து வந்து, இறுதியாக 1498-ம் வருஷத்தில் நெப்போலியன் போனப்பார்ட் என்பவரால் அலக்ஜாண்டரியாவில் தோற்கடிக்கப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகத் தனது ஆதிக்கம் அனைத்தையும் பிரஞ்சுக்காரர்களிடம் ஒப்புவித்தது. ஆயினும், அங்குள்ள மக்கள் பெரும்பாலர் முஸ்லிம்களாக இருந்ததாலும், அந்நியர் ஆதிக்கத்தை அறியாதவர்களாக இருந்ததாலும் தங்கள் சுயேச்சையின் பொருட்டு இறுதிவரை போராடி பிரஞ்சுக்காரர்களை அத்தேசத்தைவிட்டுத் துரத்திவிட்டனர்.

பின்னர், கலீபாவாக இருந்த துருக்கி சுல்த்தான்களின் ஆதிக்கமும் தங்களுக்குக் கூடாதென துருக்கியுடனும் போர் தொடுத்து அவர்களை விட்டுவிலகுவதில் வெற்றிபெற்றூர்களாயினும், இந்தியாவின்மீது தனக்கிருக்கிற ஆதிக்கம் இதனல் பாதகமடையுமென்பதை யுணர்ந்த பிரிட்டன் குறுக்கிட்டு எகிப்தியரின் அபிலாஷைக்கு மண்போட்டது. பிறகு, முஸ்தபா காமில் பாஷா என்பவர் தோன்றி சுதந்திரப் போர் தொடுத்து ஷஹீதானூர். அப்புறம் முஹம்மது பரீத்பேக், ஜக்லுல்பாஷா ஆகியவர்கள் இக்கிளர்ச்சிக்கு தலைமை வகித்து நடத்தினர். இறுதியாக முஸ்தபா நஹாஸ் பாஷா என்பவரது தலைமையில் அங்குள்ள அரசியல் கக்ஷியினர் ஒன்றுபட்ட பின்னர் பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் சமீபகாலத்தில் ஒரு ஒப்பந்தமேற்பட்டு, எகிப்தின் சுயேச்சை பிரிட்டனல் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், பிரிட்டனின் ஆதரவில் சர்வதேச சங்கத்திலும் சுயேச்சையுள்ள ஒரு நாடாக கூடிய சீக்கிரத்தில் எகிப்து சேர்ந்துவிடும் தருவாயிலிருந்து வருகிறது. அறபி நாடுகளில் எகிப்தில் தான் முதல் முதலாக ஐரோப்பியர் ஆதிக்கம் ஏற்பட்டது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேம். எகிப்து ஐரோப்பாவிற்கு அடங்கிய பிறகுதான் அல்ஜீரியா, டுனிஸ், மொரோக்கோ ஆகிய நாடுகள் பிரஞ்சுக்காரருக்கும், திருப்போலி, புர்க்கா ஆகிய நாடுகளில் இத்தாலியருக்கும் ஆதிக்கமேற்பட்டது. எகிப்திலுள்ள இச்சுதந்திர இயக்கம் இத்தேசங்களிலும் பரவி இருக்கிறது. இன்ஷா அல்லாஹ் எகிப்தியர் தங்கள் நோக்கத்தில் வெற்றியடைந்ததுபோல் ஏனைய இஸ்லாமிய தேசங்களும் தங்கள் சுதந்திரக் கிளர்ச்சியில் வெற்றிபெற றஹ்மான் அருள் புரிவானக.

முஸ்லிம்களுக்குள் பிளவை யுண்டுபண்ணுபவர்கள்

(ஜனப் சௌத்ரீ குலாம் ஹைதர்கான்)

ஒரு காலத்தில் யான் லாகூர் அஹ்மதீ ஜமா அத்தாரது மதப்பிரசாரத் திட்டமும் அவர்களது முயற்சியும் பாராட்டத்தக்கவையெனப் போற்றிக் கொண்டிருந்தேன். ஆனல், இந்த ஜமாஅத்தின் சகல முயற்சிகளும் தங்கள் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே பிணைக்கப் பட்டிருக்கின்றன என்ற விபரம் எனக்கு இறுதியாக வெளியாயிற்று. "நீங்கள் மிகவும் நெருக்கமான வட்டத்தை விட்டு வெளியேறி, அல்லாஹ்வும் அவனது றஸூலும் இயற்கை மதத்திற்காக ஏற்படுத்தி இருக்கிறதும், உலகமெங்கணும் பரவி இருக்கிற 70 அல்லது 80 கோடி மக்களைக் கொண்டுள்ளதுமான அகில உலக இஸ்லாமிய சகோதரத்துவத்தில் சேர்ந்துகொள்ளாத வரையில் இம்மை மறுமைப் பேறுகளை நீங்கள் ஒரு போதும் அடைய முடியாது" என்று அந்த ஜமாஅத்தாரின் பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர்களிடம் யான் பல முறையும் கூறியுள்ளேன். அவர்கள் தங்கள் ஜமாஅத்தாருக்கு அஹ்மதீ என்றும், மற்ற முஸ்லிம்களுக்கு அஹ்மதீயல்லாதாரென்றும் பெயர் வைத்துப் பாகுபாடு

செய்துக் கொண்டிருக்கின்றனர். ஆனல், ஒன்றரைச் செங்கல்லால் கட்டப்பட்ட மிர்ஜாயிகளது மஸ்ஜிது முஸ்லிம்களது மஸ்ஜிதுகளுடன் எவ்விதச் சம்மந்தமும் கொண்டதல்லவென்ற உண்மை நடுப்பகல்போல் வெளியாகிவிட்டது. அஹ்மதியா ஸில்ஸிலாவின் ஸ்தாபகரும், அவர்களது பீருமான மிர்ஜாகுலாம் அஹ்மது தமது சிஷ்யர்களுக்கு ஒரு முக்கிய கட்டளை விதித்துள்ளார். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தாவாக்களுக்கு முன் தலைவணங்காதவரையில் முஸ்லிம் பொதுஜனங்களைக் காபிர்களென மதிக்க வேண்டும் என்பதாகக் கூறியுள்ளார். எனவே எல்லா மிர்ஜாயிகளும், லாகூர் அஹ்மதியும், காதியானீ அஹ்மதியும் எவ்வித வித்தியாசமுமின்றி இக்கட்டளையை மிகப்பலமாகப் பின்பற்றி அனுஷ்டித்து வருகின்றனர்.

மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானீ "வாக்களிக்கப்பட்ட மஸீஹ்" என்ற தாவாவுடன் மட்டிலும் நிற்கவில்லை. "வில்லி", "புரூஜி" என்ற ஏமாற்று வார்த்தைகளின் திரைமறைவில், இருலோகத்திற்கும் சர்தாரான எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்.) அவர்களுக்குச் சமமான அந்தஸ்துள்ளவரென்றும் தாவாச் செய்து இஸ்லாமிய உலகில் குழப்பங்களின் தலைவாயலைத் திறந்து வைத்துவிட்டார். ஒரு புறம் மதீனவாழ் நாயகருக்கு அடிமை என்று கூறிக்கொண்டு மறுபுறம், சென்றுபோன எல்லா நபிமார்களைப் பாக்கினும் எனது அந்தஸ்து மிகவும் உயர்ந்ததெனத் தம்மைப் பற்றிய உயர்வை வாதித்துக்கொண்டிருந்ததுதான் இதில் மிக ருசிகரமான விஷயம்.

மேலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிழலின் கீழில் 'ஜிஹாது' போன்ற முக்கிய பிரச்சினையை என்றென்றைக்கும் நிரந்தரமாக ஹராமாக்கி வைத்துவிட்ட குலாம் அஹ்மதுடைய புத்திசாலித்தனத்திற்கு இதனைப் பார்க்கினும் வேறு அத்தாட்சிவேண்டுமா? அதிலும், அடிமைத்தனம் என்ற அசங்கிதத்தினுள் சிக்கி இருக்கின்ற இந்திய முஸ்லிம்களுக்குள் மட்டும் ஜிஹாதைப் பற்றிய அவரது தடையுத்தரவு பிறப்பிக்காமல் உலக முஸ்லிம்களுக் கெல்லாம் பிறப்பித்திருக்கிறுர். இம்மட்டுடன் நில்லாமல் "ஜிஹாது செய்வது ஹறாம் என்றுள்ள எனது பிரசுரத்தை இஸ்லாமியதேசங்களில் மிகவும் ஏராளமாக விநியோகித்திருக்கிறேன்; என்னுடைய இந்த ஊழியத்திற்காக என்னை அரசாங்கம் பாராட்டவேண்டும்" என்பதாகவும் தமது பிரிட்டிஷ் எஜமானர்களுக்கு கூறி இருக்கிறுர். அஹ்மது (ஸல்.) அவர்களுக்கு அடிமை என்று கூறிக்கொண்டு, அஹ்மது (ஸல்.) அவர்களது மார்க்கத்தை விட்டுப் பகிரங்கமாக விலகுவது அஹ்மது (ஸல்.) அவர்களுக்கு விரோதமாகக் கலகம் செய்வதாக ஏற்படமாட்டாதா? கிறிஸ்துவ அரசாங்கங்கள் ஜிஹாது செய்வதைக் கிரியாம்சையில் செய்து இஸ்லாமிய அரசாங்கங்களது ராஜீய பொருளாதார உரிமைகளை அழித்து நாசம் செய்வது குற்றமல்ல வென்று கருதி இருக்கும்போது இஸ்லாமிய அரசாங்கங்கள் தங்களது சுதந்திரத்தையும் சுயேச்சையையும் காத்துக்கொள்வதற்காக ஜிஹாது செய்வதைத் தடைசெய்யலாமா? மிர்ஜாசாகிப் உண்மையாகவே சமாதானத் தூதராக இருப்பின், மனித ரத்தம் சிந்தி ஜிஹாது செய்வது மனித வெற்றிக்கு விரோதமாக இருப்பதாக அவர் உண்மையாகவே கருதி இருந்தால் அவர் முஸ்லிம்களது வீர உணர்ச்சியை மாத்திரம் தணித்துவிட ஏன் அவர் முயற்சிஎடுத்துக்கொண்டார்? உலகத்தை அடிமைப்படுத்துவதற்காக மனிதத்தன்மையை ரத்தக்கடலில் மூழ்கும்படிச் செய்துகொண்டிருக்கிற கிறிஸ்துவ அரசாங்கங்களுக்கு சமாதானத்தையும் அமைதியையும் பற்றி ஏன் அவர் ஸ்ரீமுகம்விடுவிக்கவில்லை. எனவே, முஸ்லிம்களிடம் இருக்கிற தற்காப்பு பலத்தையும்கூட இல்லாமற் செய்துவிட விரும்புகிறுர் என்பது இதிலிருந்து தெரியவருகிறது. இந்த வகையில் குலாம் அஹ்மதுவின் மஸீஹிபத்தும் கிறிஸ்துவ உலகிற்கு அருளாகவும், முஸ்லிம் உலகிற்கு இருளாகவுமிருக்கிறது.

இன்று இஸ்லாமிய உலகில் மாறுதலேற்பட்டு வருவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. இஸ்லாமிய அரசாங்கங்கள் தங்களுக்குள்ளிருந்த பலஹீனங்களை நீக்கிக் கொள்ளவும், தங்களது ராணுவபலத்தைப் பெருக்கிக் கொள்ளவும் கவலை செலுத்தத் தொடங்கி இருக்கின்றன. காதியானீ நபியின் கட்டளையானது துருக்கி, ஈரான், அப்கானிஸ்தான், இராக், ஹிஜாஸ் ஆகிய நாடுகளுக்கு அடிமைச் செய்தியல்லவா? எந்த சமுகமாவது ஜிஹாது இல்லாமல் உயிர் வாழ முடியுமா?

"ஜமீன்தார்"

மிர்ஜாவின் வாக்குமாறுந் தன்மை

"விசுவாசங் கொண்டவர்களே! உறுதி மொழிகளை நிறை வேற்றுங்கள்" என்பதாக இறைவன் தனது திருமறையின் கண் கூறியுள்ளான். "(உண்மை) விசுவாசி வாக்களித்தால் (அதனை) நிறை வேற்றுவார்" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். இஸ்லாத்தைச் சீர்திருத்தியமைக்கவும், முஸ்லிம்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் முஜத்திதாகவும் மஹ்தியாகவும் வந்தார் என்பதாக லாகூர் அஹ்மதியர்களால் பிரசித்தப்படுத்தப் படுபவரும் நபியென்றும் றஸூல் என்றும், மர்ய மென்றும் இப்னு மர்ய மென்றும் தாவச் செய்தவருவான குலாம் அஹ்மது காதியானீ அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மாறி விட்டதற்குக் கணக்கே இல்லை என்றாலும், அவர் வாக்குறுதி மாறுந்தன்மையுள்ளவர் என்பதை ஜனங்கள் உணருவதற்காகவும், வாக்குறுதியை மாறுபவர் உண்மை முஸ்லிமாக இருக்க முடியுமா என்பதை நிதானித்துக் கொள்வதற்காககவும் அவருடைய வாக்குறுதிகளில் பதினைந்தையும் அவைகளை அவர் மீறியதையும் "ஜமீந்தார்" பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதுகிறோம். நேயர்கள் அவைகளை ஊன்றிக்கவனித்து அதைப்பற்றி நிதானித்துக் கொள்வார்களாக (ப. ர்.)

(1) "பராஹீனே அஹ்மதியா" என்ற புத்தகத்தை வெளியிடுவதற்காக மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானீ பொது ஜனங்களிடமிருந்து 3-ஆயிரம் ரூபாய்களுக்கு அதிகமாக முன்பணம் வாங்கினர். இவ்வாக்குறுதிப்படி அவர் முன்பணம் அனுப்பியவர்களுக்கு பிரஸ்தாபப் புத்தகத்தைக் கொடுக்கவுமில்லை, பணத்தை வாப்பஸ் செய்யவுமில்லை. மிர்ஜாகுலாம் அஹ்மதால் எழுதப்பட்ட "பத்ஹே இஸ்லாம்" என்ற புத்தகத்தில் இவ்விஷயத்தைக் காணலாம்.

(2) நஸீபைனுக்குக் கமிஷன் அனுப்புவதற்காக 6-ஆயிரம் ரூபாய்களை வசூல் செய்தார். ஆனல், நஸீபைனுக்குத் தூதுவக் கூட்டத்தினர் (கமிஷன்) எவரையும் அனுப்பவில்லை. இவ்விஷயம் அவரால் வெளியிடப்பட்ட 10-10-1892-உ விளம்பரத்தில் காணப்படுகிறது.

(3) காதியானில் அவரால் கட்டப்பட்ட மினரத்துல் மஸீஹுக்காக 10-ஆயிரம் ரூபாய் நன்கொடை வசூல் செய்தார். ஆனல், அதில் மூன்றிலொருபாகம் செலவாகுவதற்குள் மினராக் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது, இவ்விபரம் 28-5-1900-உ விளம்பரத்தில் காணப்படுகிறது.

(4) "பராஹீனே அஹ்மதியா என்ற புத்தகம் 100-பாகங்களுள்ள பெரிய புத்தகமாக இருக்கும் என்று அவர் வாக்களித்திருந்தார். பிறகு, இது 300-பாகங்களுள்ளதாக இருக்கும்; இதில் 300-ஆதாரங்கள் இருக்கும் என்று விளம்பரம் செய்தார். ஆனல்; அவரது இவ்வாக்குறுதியை அவர் நிறைவேற்றாமல், 35-பாகங்களில் அதனைப் பிரசுரித்துவிட்டார். இவ்விபரம் "பராஹீனே அஹ்மதியா" என்ற புத்தகத்தின் முதலாவது, மூன்றுவது பாகங்களில் காணப்படுகின்றன.

(5) "இந்த முறையில் முன்பணம் கொடுத்துப் புத்தகத்தை விலைக்கு வாங்கி உதவிய கனவான்களது பெயர்கள் இடமின்மையால் எழுதப்படவில்லை. நான்காவது பாகத்தில் உசிதம்போல் செய்யப்படும்" எனக் கூறிவிட்டு அவ்வாறு செய்யவில்லை. இவ்விபரம் மூன்றுவது பாகத்தின் 3-ம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

(6) "நாமும் நமது புத்தகமும், ஆரம்பத்தில் அதனை எழுதியபோது அது ஒருவிதமான நிலையிலிருந்தது. அப்புத்தகத்தை விலைக்கு வாங்கி உதவி புரிவதில் ஏழை ஜனங்கள் தான் இருக்கின்றனர். ஏகத்துவத்தின் ஹல்றத்தில் நாட்டமுண்டாகிவிடுமாயின் எவரேனும் ஒரு பணக்காரரின் இருதயத்தை இக்காரியம் பூர்த்தியடைவதற்காகத் திறந்துவிட முடியும்." இது பராஹீனே அஹ்மதிய்யாவின் 4-வது பாகத்தி

னுள்ள கடைசிப் பக்கத்திலிருந்து சுருக்கி எடுக்கப்பட்டது.

(7) " இப்பொழுது நூல்கள் எழுதும் முறை இல்ஹாம்களின் காரணமாக வேறுவிதமாக மாறிவிட்டது. ஆகவே, பாராஹீனே அஹ்மதியா 300 பாகங்களுடையதாகவே அவசியம் இருக்குமென்று இனி நாம் எவ்வித வாக்குறுதியும் செய்யமுடியாது " இவ்விபரம் "ஸுர்மயே ஆரியா" என்ற புத்தகத்தின் முதல் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அவர் 300 பாகங்களில் அப் புத்தகத்தை வெளியிட வேண்டியதற்கு பதிலாக 35 பாகங்களில் அதனை வெளியிட்டு முடித்து விட்டார்.

(8) "ஸிராஜுன் முனீர்" என்ற பிரசுரம் அச்சிடுவதற்கு 1,400 ரூபாய் செலவாகும். புத்தகம் தேவையுள்ளவர்கள் ஆர்டர் அனுப்பினால் அச்சிடவாரம்பிக்கப்படும். அதன்கிரயம் ஒரு ரூபாய்தான். "ஷக்னயேஹக்" என்ற புத்தகத்தின் டைட்டில்பேஜில் இதனைஅவர் 1886-ம் வருஷத்தில் வெளியிட்டார்." இதற்குப்பின் அவர் 1897-ம் வருஷத்தில்—21 வருஷங்களுக்குப்பிறகு "ஸிராஜுன்முனீர்" என்றபெயரால் 47 பக்கங்களில் ஒரு சிறிய புத்தகத்தை எழுதிப் பிரசுரித்தார். அதனை அச்சிடுவதற்கு பிரதியொன்றுக்கு 2-2½ அணாவிற்குமேல் அதிகம் செலவாகி இருக்காது.

(9) "காதியான் வாசிகள் யஜீதுக் கூட்டத்தாராக இருக்கிறார்கள். கொடும் பகையாக இருக்கின்றனர். ஆதலின், அதனை ஹிஜ்றத்துச் செய்து விடப் போகிறேன்" என்பதாக "ஷக்னயே ஹக்" மூன்றாவது பக்கத்தில் மிர்ஜாகுலாம் அஹ்மது எழுதினர். ஆனால், அவர் ஹிஜ்றத்துச் செய்யவு மில்லை, வேறு ஊரில் குடியேறவுமில்லை.

(10) "முபாஹலா"ச் செய்வது ஜாயிஸ் என்பதாக இந்த முட்டாள் ஜனங்களான மௌலவிகள் சொல்கின்றனர். அதற்கு இப்னு மஸ்ஊதுடைய ஹதீதை ஆதாரமாகக் காண்பிக்கின்றனர். இது இப்னுமஸ்ஊதின் தவறு. அவர் நபியாக இருக்க வில்லை. முபாஹலாச் செய்வது ஜாயிஸ் இல்லை. இவ்விபரம் " இஜாலத்துல் ஔஹாம் " பக்கம் 596—637-களிலும், " ஆயினயே கமாலாத்து " பக்கம் 256-லும் காணப்படுகிறது.

(11) இவ்விபரங்களைக் கூறிய பின் இனி உலமாக்களுடன் நேருக்கு நேர் விவாதிக்க மாட்டேன் என்பதாக முடிவு செய்து விட்டேன் என்பதாக குலாம் அஹ்மது 1896-ம் வருஷத்தில் எழுதிய " அஞ்ஜாமே ஆத்தம் " பக்கம் 282-ல் எழுதி இருக்கிறார். அதற்கப்புறம் அடியிற் கண்டவாறு விளம்பரம் செய்தார்:—

" இதற்குப் பின் எவன் என்னுடன் முபாஹலாச் செய்யவரவில்லையோ அவன் அல்லாஹ்வின் லஃனத்து, மலக்குகளின் லஃனத்து, ஸாலிஹீன்களது லஃனத்து ஆகியவைகளுக்குக் கீழில் இருக்கிறான் என்பதாக நான் விளம்பரம் செய்து விட்டேன் " என்பதாக 1897-ம் வருஷத்தில் வெளியிட்ட " அஞ்சாமே ஆத்தம் " அனுபந்தம் 19-ம் பக்கத்தில் எழுதி இருக்கிறார்.

(12) " எனது நண்பர்களே! எனது கடைசி வஸிய்யத்தைக் கேளுங்கள். கிறிஸ்துவர்களுடன் விவாதம் செய்யும் முறையை மாற்றிக் கொள்ளுங்கள். இயேசு மரித்து விட்டார் என்பதைத் தவிர வேறு எந்த விவாதத்தையும் அவர்களிடம் செய்யவேண்டாம். இவ்விபரம் 1800-ம் வருஷத்தில் பிரசுரமான " இஜாலயே ஔஹாம் " பக்கம் 560-561-ல் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், 1893-ல் இவ்வுபதேசத்திற்கு நேர்மாறாக அதே குலாம் அஹ்மது அமிர்தசரஸில் ஆத்தம் பாதிரியிடத்தில் 15 நாள் வரை கிறிஸ்துவ மதத்தைப் பற்றி தர்க்கவாதம் செய்துகொண்டிருந்தார்.

(13) " நான் நாளை ஜும்ஆவுக்கு மஸ்ஜிதில் வஅலு சொல்லுவேன் " என்று அலிகாரில் மௌலவீ முஹம்மது இஸ்மாயில் சாகிபிடத்தில் மிர்ஜாகுலாம் அஹ்மது வாக்குறுதி செய்துவிட்டு, அப்புறம் வஅலுசொல்ல மறுத்து விட்டார். வஅலு சொல்லப்படாதென்று தனக்கு இல்ஹாம் வந்திருப்பதாக அதற்கு சாக்குப்போக்கும் கூறிவிட்டார். இவ்விபரம் " பத்தஹுல் இஸ்லாம் " என்ற புத்தகம் 3-ம் பக்கத்தில் காணப்பட்டிருக்கிறது.

(14) " ரிஸாலா அர்பயீன் " என்ற பிரசுரம் 40 புத்தகங்களாக வெளியிடப்படும் என்பதாக மிர்ஜாஜீ விளம்பரம் செய்தார். ஆனால், வாக்குறுதிக்குமாறாக 4 பாகங்களை வெளியிட்டுவிட்டு இந்த நான்கு பாகங்களை 40 பாகங்களாக நினைத்துக் கொள்ளுங்கள் என்பதாக அர்பயீன் நான்காவது பாகத்தில் கூறி இருக்கிறார்.

(15) மௌலவீ குலாம் தஸ்தகீர் (றஹ்.) அவர்களுடன் முபாஹலாச் செய்வதாக குலாம் அஹ்மது எழுத்து மூலம் வாக்குறுதி செய்

சென்னை-600 008

தார். இவ்வாக்குறுதியை மெய்யென்று நம்பி மௌலானா அவர்கள் தமது குடும்பத்தாருடன் லாகூர் நகரில் 15 நாட்கள் வரை காத்திருந்தார். ஆனால், மிர்ஜாவோ தமது வாக்குறுதிப்படி வீட்டைவிட்டு வெளிபேறவே இல்லை.

(16) ஹஜ்றத் பீர் முஹர் அலீஷாஹ் கோல்டவி அவர்களுடன் முபாஹலாச் செய்வதாகவும் விவாதம் புரிவதாகவும் வாக்களித்து அதற்கெனத் தேதியும் இடமும் கூடக் குறிப்பிட்டுவிட்டார் குலாம் அஹ்மது. ஆனால், மிர்ஜா தமது வாக்குதத்தத்தை நிறைவேற்றவில்லை. ஹஜ்றத் பீர் சாகிப் அவர்கள் லாகூரில் பல நாட்கள்வரை காத்திருந்து மிர்ஜாவை அழைத்துக்கொண்டே இருந்தார். மிர்ஜாவோ வெளியேறவே இல்லை. கடைசியாக மிர்ஜா, "பீர் சாகிப் அவர்களைப் பற்றி எல்லைப்புற வாசிகள் பீர்சாகிபுடன் இருந்தனர்" என்று புகார் கூறி விட்டார். பீர்முஹர் அலீஷாஹ்சாகிபுக்கு கடைசி முடிவு என்ற பிரசுரத்தின் 2-வது பக்கத்தைப் பார்த்தால் இவ் விபரம் தெரியவரும். இது 28—8—1900வ பிரசுரிக்கப் பட்டது.

(17) குலாம் அஹ்மது தம்முடைய "ரிஸாலாஅர்பயீனி"ல் முஹம்மது யூசப் சாகிப் ஜில்லாதாருக்கு ஒரு அறிக்கை விடுத்து "அல்லாஹ்வின்மீது பொய்யாக இட்டுக்கட்டிக் கூறுபவர் எவரேனும் 23 வருஷ காலத்திற்கு மேல் அதிகமாக உலகில் ஜீவித்திருந்ததாக ருஜூச் செய்பவருக்கு யான் 500 ரூபாய் ரொக்கப்பரிசளிப்பேன்." என்பதாகக் கூறி இருக்கிறார். ஜனாப் முகம்மது யூசப் ஜில்லாதார் அவர்கள் இதற்குப் பிரதி யுத்தரமாக "கத்தஉல் வத்தீன்" என ஒரு புத்தகம் எழுதி அதில் அல்லாஹுத ஆலாவின்மீது பொய்யாக இட்டுக்கட்டியவர்களில் 23 வருஷங்களுக்கு அதிகமாக ஜீவித்திருந்தவர்களது பெயர்களை ஒரு ஜாப்தாவாகக் குறிப்பிட்டார். இதனை மிர்ஜாஜீ பார்த்துப் பெருமூச்செரிந்தாராயினும் வாக்குத் தத்தத்தின்படி 500 ரூபாய் பரிசளிக்கவில்லை.

நாம் மேலே எடுத்தெழுதிய 17 சமாச்சாரங்களைத்தவிர்த்து இவைபோன்றவைகள் எத்தனையோ இன்னுமிருக்கின்றன. இடமின்மையால் அவைகளை எழுதவில்லை. வாக்குறுதிக்குமாறு செய்வது இற்றை நாளில் சகஜமாகிவிட்டதால் இதனைப் பெரிதாக மதிங்காதிருக்கக் கூடும். என்றாலும் இவர் செய்திருக்கிற இக்காரியங்களில் பொது ஜனங்களிடமிருந்து பணத்தை அடிக்கும் சூழ்ச்சி வெளியாகிறதென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக. (ப - ர்)

கிறிஸ்தவர்களுக்கோர் மெஞ்ஞானபனம்

தென்காசி, நவ் முஸ்லிம் ஷௌகத் அலீ ஸாஹிப் வரைவது

என தருமை கிறிஸ்தவ நண்பர்களே!

இப்பூ உலகிலுள்ள எம்மார்க்கமும், கடவுள் ஒருவனுண்டு என்று சொல்வது மத சித்தாந்தம். ஆனால் இந்துக்களோ பலதெய்வங்களுண்டு என்பதாகவும், தெய்வங்கள் பல அவதாரங்கள் எடுத்ததாகவும் கூறுகின்றனர். இத்தன்மைபோல் நீங்களும் அவ்வாறாக விசுவாசிப்பது தகுதியா? உங்கள் பைபிளின் கூற்றுப்படி கர்த்தர் மோசேய்க்கு சீனாய் மலையில் கொடுத்த முதலாம் கர்ப்பனை என்ன? "ஒரே தேவன் உண்டு; அவரைத் தவிர வேறு தேவனில்லை" யாத்திராகமம், 20 : 3.)

இப்படியிருக்க, மூன்று தேவர்கள் உண்டு என்று விஸ்வாசப் பிரமாணத்தில், கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கின், இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களாகிய உங்களுக்கும் வித்தியாசமென்ன? நீங்கள் திருத்துவம் என்று சொல்லும்போது இந்துக்கள் திருமூர்த்தி என்றும், அது சிற்று விளையாட்டு என்றும் கூறுகிறார்கள் அல்லவா? இது நிற்க,

உங்கள் கொள்கைப்படி தேவன் கிறிஸ்துவை வணங்காக் கழுத்துள்ள இஸ்ரவேல் வீட்டாருக்காக உலகத்திற்கு அனுப்பினார்? அல்லவா (மத். 15: 24; மத்தேயு. 10: 5—6;)

" அதற்கு அவர் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல வென்றார் " என்பதாகவும், தாமே சொல்லியிருக்கிறார் அல்லவா ? மேலும் இஸ்ரவேலரை ஒரே கடவுளை வணங்கவும், அவர்களை நல்வழியில் நடத்தவும், முன்மாதிரி காட்டவும், போதிக்கவுமே அல்லாஹுதஆலா, ஈஸா நபியை உலகத்திற்கு அனுப்பினன் என்று குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் நீங்கள் கீழே காட்டும் உங்கள் வேதபைபிள் வசனங்களை உற்று உணர்ந்து பார்ப்பீர்களானல், கிறிஸ்து என்ற ஈஸா நபியை அல்லாஹுதஆலா உலகத்திற்கு ஒரு தீர்க்கதரிசியாகத்தான் அனுப்பினன் என்று நம்பி விசுவாசிப்பீர்கள்.

இயேசுகிறிஸ்து தேய்வம் அல்ல என்று தேரிவிக்கும் உங்கள் வேதபைபிள்வசனங்கள்.

1. தேவதூதர்கள் சாக்ஷி

(இவர் பிறந்ததினலே) உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. (லூக். 2 , 14 ;)

2. தேவனே சாக்ஷி

பரிசுத்த ஆவியானவர் புரு ரூபம் கொண்டு அவர் மேல் இறங்கினர். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி நீர் என்னுடைய நேச குமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்றார். (லூக். 3. 22)

3. தேவனே சாக்ஷி

இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவி கொடுங்கள். (மத். 17 : 5)

4. கிறிஸ்துவே சாக்ஷி

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜியத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே, என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத். 7 : 21 ;)

அன்னளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே உமது நாமத்தினலே தீர்க்கத் தரிசனம் உணர்ந்தோம் அல்லவா ? உமது நாமத்தினலே பிசாசுகளைத் துரத்தினேமல்லவா ? உமது நாமத்தினலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா ? என்பார்கள். (மத். 7 : 22.)

" அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத். 7 : 23.)

" அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன். தேவன் ஒருவன் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினல் கர்ப்பனைகளைக் கைக்கொள் என்றார்." (மத். 19 : 17)

" அவர் அவர்களை நோக்கி என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள். நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள். ஆனலும், என் வலது பக்கத்திலும், என் இடது பக்கத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினல் எவர்களுக்கு ஆய்த்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார். (மத். 20 : 23)

" அந்த நாளையும் அந்த நாளிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியார். குமாரனும் அறியார், பர லோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்." (மாத். 13 : 32 ; மத். 24 : 36)

" பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வருகிறவனை நான் புரம்பே தள்ளுகிறதில்லை." (யோ. 6 : 37)

" என் சித்தத்தின்படி யல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்." (யோ. 6 : 38)

" ஆதலால், இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் மனுஷ குமாரனை உயர்த்தினபின்பு நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல் என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்." (யோ. 8 : 28)

" என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார். பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்க விடவில்லை என்றார்." (யோ. 8 . 29)

" பிதாவினல் பரிசுத்தமாக்கப்படும் உலகத்தில் அனுப்பப்பட்டிருக்கிற நான், என்னை

தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலேயே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" (யோ. 10 : 36;)

"என்னில் அன்பா யிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடை தாயிருக்கிறது." (யோ. 14 : 24)

"பிதாவே! உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும், என்னுடைய சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆக்கடவது. என்று ஜெபம் பண்ணினார்." (லூக். 22 : 42)

"அப்பொழுது இயேசு, பிதாவே! இவர்களுக்கு மன்னிப்பளியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்." (லூக். 23 : 34)

"ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு 'ஏலி ஏலி லாமா, சபக்தனி' என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! என் என்னைக் கைவிட்டீர் என்பது அர்த்தமாம்." (மாற். 15 : 34 ; மத். 27 : 46)

"இயேசு, பிதாவே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிடச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனைவிட்டார்." (லூக். 23 : 46 ;)

இதைப்போன்ற வசனங்கள் இன்னும் அனேகமுண்டு. ஆனால் ஒருபானை சோற்றுக்கு ஒருபருக்கை பதம் போல் இம்மட்டில் நிறுத்துகிறேன்.

ஆகையால் கிறிஸ்தவ நண்பர்களே! மேலே காட்டிய உங்கள் வேத பைபிளின் வசனங்களைக் கவனிக்கும்போது, தேவன் கிறிஸ்துவை இஸ்ரவேலருக்கு நல்வழியைப் புகட்ட உலகத்திற்கு அனுப்பியிருக்க, நீங்கள் கிறிஸ்துவை, தேவன்தான் மறுபிறப்பாக உலகத்திற்கு கன்னி மரியாள் வயிற்றில் பிறந்து வந்தார் என்று சாதிக்கிறது தப்பிதத்திலும் தப்பிதமல்லவா! இந்துக்கள் மறுபிறப்பு உண்டு, தங்களுடைய திரு மூர்த்தி தெய்வங்களே பல அவதாரமாக மறுபிறப்புப் பிறந்து வந்திருக்கிறார்கள் என்று சாதிக்கிறார்கள் அல்லவா? அதுபோல நீங்களும் தேவன் கிறிஸ்துவாக மறுபிறப்பாய்ப் பிறந்தார் என்று சொல்லுவது எவ்வளவு தப்பிதம்! இது எல்லாப்பாவத்திலும் மஹா பிரமாண்டமான பாவ மல்லவா? இது விஷயத்தை நன்கு உணர்ந்து பாருங்கள்.

மேலும், இஸ்லாம் மார்க்கம் இயேசு கிறிஸ்து என்ற ஈஸா நபியை மஹா பரிசுத்தமான கர்த்தா—தூதுவர் என்று விசுவாசிக்க வேண்டும் என்று கண்டிப்பாய் உணர்த்துகிறது. இது விஷயம் இப்படியிருக்க,

கிறிஸ்தவர்களாகிய நீங்கள், உங்கள் பையிளிலே சொல்லப்பட்ட இறுதி நபியாகிய முஹமது நபி நாயகம் (ஸல்.) அவர்களை நம்பாமலும், உங்கள் வேதபைபிளில் முஹம்மது என்றுவந்த வார்த்தையை நீக்கியும், பழைய ஏற்பாட்டிலுள்ள நபிமார்கள் சொல்லிய தீர்க்கதரிசனத்தைக் கைக்கொள்ளாமலும், நம்பாமலு மிருக்கிறீர்களே! அதாவது, உங்கள் பைபிள் ஆபகூக் புஸ்தகம் 3 : 3 வசனத்தில் தேவன் தேமானிலிருந்தும், அஹ்மது (முஹம்மது) பாரானிலிருந்தும் வந்தார் என்று எழுதியிருந்ததை மாற்றி, தேவன் தேமானிலிருந்தும் பரிசுத்தர் பாரானிலிருந்தும் வந்தார் என்று திருத்தியிருக்கிறது. இது விஷயத்தை எதில் அறியலாம் என்றால், ஹிஜிரி 1274-ம் ஹூ அச்சிடப்பட்ட மதாரி ஜுன்னுபுவா, 1-ம் வால்யம் 100-ல் காட்டியபடி உங்கள் கிறிஸ்துவே முஹம்மது நபிநாயகம் (ஸல்.) வருவார் என்று சொல்லியிருக்கிறாரே நீங்கள், இவ்விஷயத்தில் உங்கள் பைபிள் வேதவசனங்களை நன்கு அறிந்து உணர்ந்து பார்ப்பீர்களானால் எது உண்மையைக்காட்டும் மார்க்கம் என்று நன்கு அறிவீர்கள்.

அன்பின் கிறிஸ்தவர்களே! நீங்கள் நன்றாய் யோசித்துப்பாருங்கள். 1-வது தீர்க்கத்தரிசிகளின் காலங்களில் ஏற்பட்ட ஆவியும், 2-வது கிறிஸ்து உயிரோடிருந்த காலங்களில் ஏற்பட்ட ஆவியும், 3-வது கிறிஸ்துவின் சிஷ்யர்களின் காலங்களில் ஏற்பட்ட ஆவியும் எப்படிப்பட்டது? என்ன ரூபம்? கிறிஸ்து ஞானஸ்நானம் பெறும்போழ்து ஆவியானவர் புறா ரூபம் எடுத்து வந்தார் என்று மத்தேயு சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது நிற்க,

யோவான் 16, 7—15 முடிய ஷை வசனங்களில் சொல்லப்பட்ட ஆவி எத்தன்மையானது. இந்த பரிசுத்த ஆவியானவர் முன் சொன்ன ஆவிக்கு விகற்பமாயிருக்கிறதா? இல்லையா? நன்றாய் ஆராய்ச்சிபண்ணிப் பாருங்கள். நீங்கள் கொண்டது கொள்கை என்று இருக்க வேண்டாம். யோவான் 16: 7—15-ல் சொல்லி

யிருக்கிற பரிசுத்த ஆவிக்கு, கண், காது, வாய், மூக்கு முதலிய ரூபமுள்ள மனுஷராய்த் தோன்றுகிறதல்லவா? மேலும், பின்னால் காட்டிய வேதவசனங்களையும் கவனியுங்கள். மெய்யாகவே முஹம்மது நபிநாயகம் (ஸல்.) அவர்களே கடைசி தீர்க்கதரிசி-நபியாக உலகத்திற்கு வந்து உலக மக்களுக்கு வேண்டிய நல்வழியை உண்டுபண்ணியும் தான் நடந்து காண்பித்தும் சீர்திருத்தம் செய்தார்களென்ற விஷயம் உண்மையும் சத்தியமுமே.

(தொடரும்)

தீண்டாதார்களுக்கோர் மீட்பின் செய்தி

(நவ்முஸ்லிம் ஷௌகத் அலீ சாகிப் வரைவது).

எனதன்பான நண்பர்களே!

ஆதியும் அந்தமுமற்ற ஆண்டவன் மண்ணினால் ஆதம் என்ற ஒரு மனுஷரை சிருஷ்டித்து, அவரினின்றும் ஹவ்வா (ஏவாள்) என்ற ஒரு மாதையும் உண்டாக்கி அவர்களை இப்பூ உலகில் சஞ்சரித்து மனுமக்களைப் பெற்று பூமியை நிரப்பும்படிச் செய்ததாக கிறிஸ்து மார்க்கச் சித்தாந்தங்களிலும், இஸ்லாம்மார்க்கச் சித்தாந்தங்களிலும் காண்கின்றோம். இந்த இரண்டுபேர்களாலேயே மனுமக்கள் பெருகினர். இவ்விதமாக ஒரு வயிற்றிலிருந்து வந்த மனுக்குலத்திற்குள்ளேயே தற்காலம் நாம் எண்ணக்கூடாத ஜாதிகளையும் ஜாதி துவேஷத்தையும் காண்கின்றோம். உதாரணமாக, பள், பறை முதலிய ஜாதிகளிலும், பலவகையாக பிரிவினை ஜாதிகளும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது பள் தொட்டு பதினாறு ஜாதிகள் என்றும், நெல் வகையை எண்ணினாலும் பள் வகையை எண்ண முடியாது என்றும் பஞ்சம குலத்தார்கள் பேசிக் கொள்வதுண்டு.

உண்மையை உணரும் உத்தமர்களே!

பஞ்சமர்கள் என்றும், தீண்டாதார்கள் என்றும் கேவலமானப் பெயர்களை வைத்து, உங்களை நீசர்களைப்போல், உயர் குலத்தார் என்று சொல்லப்படுகிறவர்கள் நடத்துகிறார்களே! இவ்விஷயங்களை மனதில் உணருகிறீர்களா? அவர்கள், தங்களது தாயின் வயிற்றில் பத்து மாதம் இருந்து வந்தவர்களைப் போலவும், நீங்கள் உங்கள் தாயின் வயிற்றில் பத்து மாதத்திற்கு குறைய இருந்து வந்தவர்களைப்போலவும் பாவிக்கின்றனரே? அவர்களுக்கு ஆண்டவனால் அமைக்கப்பட்ட அவையவங்களில் ஒன்று அதிகமாக இருப்பது போலவும் நுங்களுக்கு ஒன்று குறைவாயிருப்பது போலவும், அவர்களுடைய ரூபசாயல் வேறு, உங்களுடைய ரூபசாயல் வேறாகவும் நீங்கள், லக்ஷணக் குறைவு உள்ளவர்களென்பதாகவும் எண்ணங் கொண்டு அல்லவா உங்களை இந்துக்கள் கேவலமாக மதிக்கின்றனர். கேவலம் பன்றி, நாய், கழுதை முதலிய கேவல மிருகங்களுக்கிருக்கக்கூடிய சுதந்தரங்கூட கடவுளால் சகல வஸ்துக்களைவிட சிரேஷ்டர்களாக சிருஷ்டிக்கப்பட்ட மானிடர்களின் ஒரு பாகத்தினராகிய உங்களுக்கு, தற்கால உலகில், சம உரிமையான சுதந்தரம் இல்லாத்ததைப்பற்றி யாரை நோவுகிறது? உங்களைப் படைத்த கடவுளையா? அல்லது, உங்களை ஈன்ற பெற்றோரையா? அல்லது, நீங்கள் கைக்கொண்டிருக்கிற மதத்தையா?

தன்னை மறந்தவர்களே!

உங்களையே நீங்கள் நோக்கிப் பாருங்கள். ஏனென்றால், உயர்குலம் என்று சொல்லப்படுகிறவர்களைவிட எவ்விஷயத்தில் நீங்கள் குறைவுள்ளவர்கள்? ஏன் உங்களுக்கு புத்தி விசாலமாக இல்லை? தற்காலம் இருக்கிற நாகரீகத்தை அறியவில்லையா? சில காலங்களுக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவில் "இந்திர குலாதிப வேளாள ஐக்கியசங்கம்" என்று ஏற்படுத்தி பஞ்சம ஜாதியை மேன்மையடையச்செய்யவேண்டுமென்று பிரயாசை எடுத்தீர்களே எங்கே மேன்மை யடைந்தீர்கள்? எங்கே ஜாதி துவேஷம் போய்விட்டது? பழைய கருப்பண்ணன் கருப்பணன்தானே!

கிறிஸ்து மார்க்கத்தை எடுத்துக்கொள்வோம். இதில் சேர்ந்தால் ஜாதிதுவேஷம் நீங்கும் என்று பார்த்தாலோ, அதிலும் ஊழல் அதிகமாகவே இருக்கிறது. இது விஷயங்களை "கிறிஸ்தவர்களின் ஒழுங்கின்மையும், முஸ்லிம்களின் ஒழுக்கமும்" என்ற எனது வியாசகத்தில் நன்கு அறியலாம். உயர்குலம் என்ற ஒரு பாகத்தினரால் நெருக்கப்படுகிற நண்பர்களே! விழியுங்கள்!! விழியுங்கள்!!! தாங்கள் இருந்துவரும் சமதத்துவமில்லாத மார்க்கத்தைவிட்டு விலகுங்கள்! விலகுங்கள்!! உங்களுக்குச் சமத்துவத்தையும், க்ஷேமத்தையும், பட்சபாதமில்லாமல் ஈயும் பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவ முன்வாருங்கள்! வாருங்கள்!! அவ்வாறு தழுவினுல் பயப்பிராந்தி நீங்கிவிடும்; அதைரியம் ஓடிவிடும்; கோழைத்தனம் அகன்றுவிடும். இக்காலத்தை இழந்துவிடாதீர்கள். இதுவே நல்ல காலம். இரக்ஷண்யம் அடைவதற்கு தகுந்த உத்தம நாள். இஸ்லாத்தின் திருக்கலிமா சொல்லி முஸ்லிம் ஆகுங்கள். உங்களை முன்னுல் கேவலமானவர்களென்று பாவித்து வந்தவர்கள் இஸ்லாம் ஆன பின் உங்களைத் தீயர்களாய் எண்ணுவார்களா? "ஒத்திக்கோ, ஒத்திக்கோ" என்று சொல்லுவார்களா? அடிமையைப்போல் நடத்துவார்களா? முடியாது! முடியாது!! ஒருக்காலும் முடியாது!!! பூட்டுப் போட்டிருந்த உங்கள் வாய்கள் திறந்துவிடும். விலங்குப் போடப்பட்டிருந்த உங்கள் கால் விலங்குகள் முறியப்பட்டு எவ்விடமும் போக சுயாதீனம் பெற்றுவிடும். இதை நன்கு உணர்ந்து பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவுங்கள். உங்களுக்கு வீரம், சூரம், ரோஷம் இருக்குமானுல், அகில உலக முஸ்லிம் சபையில் சேர்ந்து, எல்லா சுதந்தரத்தையும் பெற்று, குதூகுலத்துடன் உலகின் சகல துறைகளிலும் ஈடுபட்டு நடந்து வரலாம் என்பதைச் சிற்றறிவுள்ள யான், அன்பாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். சமையம் வாய்க்கின், நேர் முகமாகவும், துண்டுப்பிரசுர மூலமாகவும் சத்திய உபதேச நன்மொழிகளைத் தெரிவித்துக் கொண்டிருப்பேன், எல்லாவற்றிற்கும் கடவுள் போதுமானவன். வஸ்ஸலாம். இஸ்லாம் ஓங்குக! சத்தியம் ஜெயமடைக!!

சிறுவர் பக்கல்

(வடகரை மாணவர் பா. அப்துல் ஹமீது வரைவது.)

முற்கால வேந்தர்களில் 'மாலிக்' என்பவரும் ஓர் பிரக்யாதிபெற்ற வேந்தர். இவருக்கு பல்வேறு பணியாளர்களும், துணைத் தோழர்களும் உண்டு. அத்துணைத் தோழர்களில் ஹக்கீம் என்பவர் ஒருவர். இப்பின்னையவர் அரசர் சமூகத்தே வீற்று, அவர் இடும் ஆக்ஞைபால் சிரம் சாய்ப்பதே இவர் பணி. ஆகலான், இவர் வாழ்க்கைமாட்டு, சுகம் என்னும் வாடையையே நுகர்ந்தாரில்லை. தினே தினே அரச ஆணையை பிறழ்வதால் கிடைபெறும் அவதியை அஞ்சி, திடுக்கத்தாலேயே உயிர் வாழ்ந்து வந்தார்.

ஒரு தருணம், ஆதவன் ஆழியிற் ஆழ்ந்த பின்னர், கதிரவனின் கடும் பிரகாசத்தாற் கண்கள்கூச, சயனிப்பறையில் துயில் புரியாது, ஆகாயத்தை நோக்கியவாறே பல்வேறு சிந்தனையிலாழ்ந்தார். இறுதிற், அற்றையிவிருந்து அரசர்பணியை துறந்தார்; தெய்வப் பணியை தெரிந்துக் கொண்டார். ஜெபமாலையை கரத்திற் பிடித்தார். சுருங்கக் கூறுமிடத்து, ஸ்தோத்திரக்கூடத்திற்(மஸ்ஜிது) கேகி, ஆங்கு தெய்வசிந்தனையிலேயே யீடுபட்டுவிட்டார். நாட்கள் பல கடந்தன. திடுமென, தன் சமூகம் வீற்றிருப்போரைக் காணுது, மாலிக் மனக் கிலேச மடைந்தார்; மதிமயங்கினுர். பின்னுங் காங்கு பணியாளர்களை யனுப்பி, ஹக்கீமை தன்பால் கொணருமாறு ஆக்ஞாபித்தார்.

பணியாளர்கள், அரசக்கட்டளையை சிரமேற்கொண்டுபண்ணனெடு நாட்கள்வரை தேடியலைந்தும் கிடைக்கப் பெற்றுக்கொண்டார்களில்லை.

இறுதியிற் வேந்தன் வேவுகாரனிலொருவன், ஹக்கீம் மஸ்ஜிதில் வீற்றிருக்கக்கண்டு, அவர் பால் அண்மி, அரசர் அழைமொழியை அறைந் தான். எனவே, ஹக்கீமை மாலிக்கின் சமூகம் கொணரப்பட்டது. சமூக சாபல்யரைக் கண்ட வேந்தன் உற்சாகத்தாற் உடற்பூத்து, உவகை விம்ம, கட்டி ஆலிங்கனம் செய்தான்.

அப்பால், ஹகீமைநோக்கி "அன்ப! நினக்கு யான் யாது இடுக்கண் இழைத்தனன். நீர் இவ்வாறு துறவு பூண்டனை?" என விளம்ப, "அரசே! யான்நுங்கள் பணியை துறந்து, தெய்வப்பணியை தெரிந்துக்கொண்ட தற்கு, நான்கு காரணங்களுண்டு. அவையிற் 1-வது: நீவீர் நுமது சிம்மாசனத்தே வீற்று இருக்கும் அதுபோழ்து, என்னை தங்கள் சமூ கத்திற் நின்றுக்கொண்டிருக்குமாறு சட்டம் பிறப்பித்துள்ளீர்கள். ஆனல் இறைவனே! அவன் சமூகத்திற் (தொழுகையிற்) நிற்குமா றும், உட்காருமாறும், சட்டம் பிறப்பித்துள் ளான். 2-வது: தாங்கள் உணவருந்துகிறீர்கள். யான் உணவருந்தாது நுங்கள் சாப்பாட்டிற்கு ஆவனவற்றை புரிகிறேன். இறைவனே! அவன் உணவருந்துகிறுனில்லை. ஆனல் எனக்கு உணவு ஈவதில் கண்ணேட்ட மாய் இருக்கிருன். 3-வது: தாங்கள் துயில் புரிகிறீர்கள். தங்களுக்கு யாரும் இட ரிழையாதிருக்க யான் காவற்புரிகிறேன். இறை வனே! அவன் துயிற்புரிகிருனில்லை. ஆனல், யான் துயில்புரியும்போழ்து யெனக்கு ஏதும் இடரணுகாது காவற்புரிகிருன். 4-வது: யான் தங்கள் சமூகத்திற் மாறுென்று இழைத்திடின் அக்கணமே சிரம் கொய்யப்பட்டு போமென்ப தைக் கருதி, தினே தினே திடுக்கத்தாலேயே உயிர் வாழ்கிறேன். ஆனல் இறைவனே! யான் தினமொன்றிற்கு கணக்கற்ற பாவக்கிரி யைகளைப் புரிந்திடினும், அவையனைத்தையும் க்ஷமிக்கும் ஓர் கிருபா மூர்த்தியாய் இருக்கி ருன். வேந்தே? இதனுற்ருன்யான் நுங்கள் வழி பாட்டை தகர்த்து, தெய்வ வழிபாட்டை தெரிந்துக் கொண்டேன். எனவே அரச! என்பால் சினங்கொள்ளற்க!" என வெகு சாதுர்யமாக பதிலிறுத்தார். பின்பு துறவு பூண்டு, தெய்வசிந்தனையிலேயே ஆழ்ந்தார்.

அருமை சிறுர்காள்!

ஹக்கீமின் புத்தி நுட்பத்தையும், தெய்வ சிந்தனையையும்பார்த்தீகளா? ஓர் அரசர்க்கு அதி யார்வ உழுவற் பிரியராய் இருந்தும், அவருக்கு வழிப்படாது, சன்மார்க்கபக்தராய் திகழ ஆவல் கொண்டு, இறைவனுக்கே தியாகஞ் செய்ய இடுப்புனைந்த அவரது ஹ்ருதய சுத்தியை கண் ணேக்கினீர்களா? எனவே நாமும், நமதெதிர் கால வாழ்க்கை மாட்டு, நல்லொழுக்க சீலர்களா யும், நன்மார்க்க சாரணர்களாயும், முற்படல் அத்தியாவசியமன்றே! ஆகவே, அதற்காவன கிரியைகளில் ஈடுபட்டுழல முன்னெழுங்கள்.

வஸ்ஸலாம்.

தருமத்தின் மகிமை

(வடகரை மாணவர் பா. அப்துல் ஹமீத் வரைவது)

ஓ! நபியே பிச்சை கேட்போனை விரட்டாதீர்!

(அல்குர்ஆன்.)

நம்மவர்காள்!

மேலே இடம் பெற்றுள்ள இறைவசனம் "ளுஹா" என்னும் அத்தியாயத்திற் ஒரு சிறு வசனமாகும். இது இரங்கிய காரணம் யாது? இதன் படிப்பினை என்ன? என்பதை கீழே சற்று ஆராய்வோம். ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள், முஸ்லிம் கலீபாக்களில் மூன்ருவது கலீபாவாகும். இவர்கள் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள்பால் அளவற்ற பிரீதியாளர். நபிகள் கோமான் அவர்கள் புதல்விகளை ஒன்றன்பின் ஒன்ருய் மணம் முடித்துக் கொண்டார்களாதலால் இவர் கட்கு இரு ஒளியாளர் என்ற கெளர்வ பட்டமும்

உண்டு. இவர்கள் ஆட்சி காலத்து, நம்மவர் மாட்டு ஓர் அரும் சேவை செய்து போந்தார்கள். எனவே, நாம் எக்காலத்தும் இவர்கள் பால் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அச்சேவையாவது:—

முற்காலத்து அராபியர்களில் வெகு பலர்கள் எழுத்து வாசனை என்பதையே நுகர்ந்திருக்க மாட்டார்களாதலால், அக்காலத்தில் நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள்மீது இரங்கும் வஹியை ஸஹாபாக்களில் பலர், மனனம் செய்துகொண்டே வந்தார்கள். இவ்வாறு மனனம் செய்தவர்களில் பலர் நபிகள் கோமான் காலத்திலேயும், அதற்குப் பின்னரும், மரித்துக்கொண்டும் வந்தார்கள்.

இறுதியிற், உதுமான் (ரலி.) அவர்கள் ஆட்சி வந்த காலத்து "இவ்வாறு மரித்துக்கொண்டே யிருப்பின், பிற்காலத்தவர் எவ்வாறு இறைமறையை கையாள்வது? வெகு சீக்கிரத்தில் இஸ்லாத்தின் சட்ட அமுல்கள் சறுகிக் கொண்டல்லவா போகும்" என நினைத்து அவ்வாறு மனம் செய்த ஹாபிஜீன்கள் யாங்காங்கு உளரோ, அவர்கட்கு பல விதத்திலும் ஈண்டுவருமாறு லிகிதம் விடுத்து, எல்லோரையும் ஒருங்கே சேமித்து, ஒன்றன்பின் ஒன்றாய் 30-ஜுசுக்களை ஒழுங்கு திரட்டி "இதுதான் தெய்வ திருவசனமாகும், இனி யார் யார் தெய்வத் திருமறை என கொண்டுவருவரோ அவையனைத்தும் சுத்தப் புறட்டு" என அக்கால வாசிகட்கு எடுத்தோதியும்போனார்கள். இதனாற் "ஜாமி உல்குர்ஆன்" (குர்ஆனை சேகரித்தவர்) என மற்றொரு கௌரவ பட்டத்தையும் அவர்கட்கு வழங்கி வருகிறோம்.

எனவே இச்செல்வச் சீமான், நன்னபிகள் கோமான் (ஸல்.) அவர்கள்பால் பூண்டுள்ள பிரீதிமேலீட்டால், ஒருபோழ்து, விலை உயர்ந்த பேரீச்சங்கனிகளை எடுத்தேகி எம்பெருமான் (ஸல்.) அவர்கள் சமூகத்திற் சமர்ப்பித்து, சாந்தி கூறி, "இறைவன்றாதே! தங்கட்கு உயர்ந்த பேரீச்சங்கனிகளைக்கொண்டு ஒரு நாளைக்கு உணவருந்தச் செய்யவேண்டு மென்பது எனது அவா. பன்னெடு நாட்களாய் எதிர்பார்த்தும் அதற்குத் தகுந்த சந்தர்ப்பம் இன்றே கிடைக்கப் பெற்றேன். ஆதலால், தாங்கள் இதை முழுமனப் பிரீதியுடன் ஏற்றுக் கொள்வீர்களாக!" என வேண்டி நின்றார்கள். தோழரின் தூமொழியை செவிமடுத்த வள்ளலும் தன் தோழர் கொணர்ந்த வெகுமதியை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள்.

முஸ்லிம் கலீபா, அவ்வறையைவிட்டு, அப்பாற் கடந்த அக்கணத்தே, ஆங்கு ஓர் யாஜகர் தோன்றி, நபிகள் கோமான் (ஸல்.) அவர்களை முன்னோக்கி, "கொடை வள்ளலே! எனக்கு பேரீச்சங்கனி புசிக்கவேண்டு மென்பது நெடு நாள் ஆவல், ஆனாலும் என்பாற்வேண்டிய கிரயமின்மையாற், எனதவாவை பூர்த்தி செய்ய முடிகிறதில்லை. எனவே, இவ்வேழை பாற் தயை கூர்ந்து, என்னவாவை பூர்த்தி செய்வீர்களாக!" என பராவினர். யாஜகரின் பரிதாப புலம்பலை செவிமடுத்த கருணை வள்ளலும் தன் பாலுள்ள கனிகள் அத்துணையையும் ஏழைக்கு யீந்துவிட்டார்கள்.

இவையனைத்தையும் தம் விடுதியிற் வீற்று செவிமடுத்த செல்வச்சீமான் உதுமான் (றலி.) அவர்கள் அந்த யாஜகரும் அவ்விடத்தை விட்டு திரும்பக் கண்டு, "இவ்வித்துணை விலையுயர்ந்த கனிகள், இக்காலை, தேடியலைந்தாலும் கிடைத்துக்கொள்ள முடியாதாகையால், இதை எவ்விதத்திலேனும் திரும்பவும் நபிகள் பெருமானருக்கே, எண்பிக்க வேண்டுமென மனத்திலெழுப்பினார்கள். உடனே யாஜகர்பால் அண்மி, "பெரியீர்! தாங்கள் இப்பழங்களை விலைக்குக் கொடுக்க முடியுமா?" யென கேள்வி விடுத்து, யாஜகராலும் ஆமோதிக்கப்பட்டு, கிரயத்திற்கு வாங்கி, மீண்டும் நபிகள் கோமான் (ஸல்.) அவர்கள் சமூகத் தெடுத்தேகி "இறைவன்றாதே! யான் இதை கிரயத்திற்குக் கிடைக்கப் பெற்றேன். ஆதலான் தாங்கல் தயவு செய்து ஏற்றுக் கொள்வீர்களாக!" எனக் கூறிச்சென்றார்கள்.

மறுபடியும் யாஜகர் வாங்கிச் செல்வதும், உதுமான் (ரலி.) அவர்கள் திரும்பவாங்கிக் கொண்டுவருவதும், இவ்வாறு மும்முறை நடந்த பின்னர், நான்காம் முறையும் அதே யாஜகர், கொடை வள்ளல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பால் அண்மி பிச்சை யிடுமாறு வேண்டி நின்றார். உடனே அவர்பால் நபிகள் (ஸல்.) சினம் பூண்டார்கள். யாஜகரை நோக்கி, "ஓ! யாஜகரே! நீவிர் இவ்வாறு யாஜகம் செய்வதிலேயே யீடுபட்டு, மேலும் இதிலேயே, ஓர் வியாபாரம் செய்ய முற்பட்டுவிட்டீர் போலும். நுமது கையில் உள்ள தொகைக்கு பேரீச்சம் கனி வாங்கி சாப்பிடுவீராக!" எனக் கடிந்தார்கள்.

அதே க்ஷனத்து இறைவன் தன் தூதரை நோக்கி, "ஓ! முஹம்மதே! தருமத்தை கையாள்வதே நுமது வேலே. ஆனால், பிச்சையையே தொழிலாய் பூண்டு அதையே ஓர் வியாபாரமாய் கையாள்பவருக்கு தக்க வினை விடுத்து அதற்காவன சிகித்ஸை செய்வதற் கருகதையாளர் நீரன்று. அதற்கு யானே அருகதையாளன்" என்னும் பொருட்படக் கூடிய தோரணையில், ("ஓ! முஹம்மதே பிச்சைக் கேட்போரை விரட்டாதீர்" என, மேற்கூறிய இறை உரையை இயம்பியுள்ளான். என்னே! தருமத்தின் மகிமை!

ஆகவே சோதரீர்! மேல் இடம் பெற்றுள்ள தெய்வத் திருவசனத்தை சிரமேற்றாங்கி ஏழை எளியவர்பால் இரக்கம் பூண்டு, ஓர் தர்ம சீலராய் திகழ முற்படுவோமாக. யாஜகர் பால் கடிந்து வெறுண்டோடச் செய்து இறைவனின் கோபாக்கினிக்கு ஆளாகாது, "தருமமே நோய்களை தட்டக்கூடியதாகும்" என்னும் நபிகள் கோமானின் பொன் மொழியை அகத்திற் பதிப்போமாக! வஸ்ஸலாம்.

காதியானீ மிர்ஜாவின் நபித்துவ தாவாக்களுக்கு ஏற்பட்ட காரணங்கள்

(மௌலவீ ஹபீபுல்லா சாகிப் வரைவது)

மிர்ஜாயீ வகுப்பின் ஸ்தாபகரான மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ கி. பி. 1839-ல் அதாவது ஹிஜ்ரீ 1255ல் பிறந்தார். அவரது மாதாவின் பெயர் கிராக் பீபி என்பது. இவர் மௌலவீ பஜ்லே இலாஹீ, மௌலவீ பஜ்லே அஹ்மத், மௌலவீ குல்அலிஷாஹ் ஆகியவர்களிடம் திரு குர்ஆன், சில பார்ஸீ கித்தாபுகள், ஸர்பு கித்தாபுகளிற் சில, நஹ்வு, மன்திக் ஆகியவைகளைக் கற்றார். தமது தந்தை ஹக்கீம் குலாம் முர்த்தஜா சாகிபிடத்தில் சில வைத்தியப் புத்தகங்களையும் கற்றார். இவை 1906-ம் வருஷம் லாகூர், பத்று பிரசில் அச்சிடப்பட்ட "பராஹீனே அஹ்மதிய்யா "என்ற புத்தகத்தில் ஹஜ்றத் மஸீஹே மௌஊதின் சரித்திரச்சுருக்கம் என்ற விபரத்திலும், "கித்தாபுல் பரிய்யத்" என்ற புத்தகத்தின் 148-149-150-வது பக்கங்களிலுள்ள ஓரக் குறிப்புகளிலும், மிர்ஜா பஷீறுத்தீன் அஹ்மது எம். ஏ. என்பவர் (கலீபா) எழுதிய "ஸீரத்துல் மஹ்தி" என்ற புத்தகத்திலும் காணப் படுகின்றன. மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானீ தாம் அல்லாஹு தஆலாவினால் ஏவப் பட்டவர் என்றும், வாக்களிக்கப்பட்ட மஸீஹென்றும், மஸீஹைப் போன்றவரென்றும், மஹ்தியென்றும், பாரசீக ஆண் பிள்ளை என்றும், ஹாரிதென்றும், கிருஷ்ண அவதாரமென்றும், முஹத்தி தென்றும், முஜத்திதென்றும், இமாமுஜ்ஜமான் என்றும், இப்னுமர்யமைப் பார்க்கினும் சிறந்தவரென்றும், நபியுல்லாவென்றும், றஸூலுல்லாவென்றும் தாவாச் செய்தார். பின்னர், தமது 69-வது வயதில் 26—5—1908-ல் மரித்தார். இவர் செய்த இந்த தாவாக்களெல்லாம் பொய்யென்பதற்கு மிர்ஜாயிகள் எழுதியுள்ள நூல்களிலிருந்தே அடியிற் கண்ட சமாச்சாரங்களை எடுத்தெழுதுகின்றேன். இதிலிருந்து அவரது தன்மை யாதென்பது சொல்லாமலே விளங்கும்.

காதியானீ மிர்ஜாவும், மராக் என்னும் வியாதியும்

(1) "பாருங்கள், எனது வியாதியைப் பற்றியுங்கூட நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள். அது உண்மையாகவே நிகழ்ந்து விட்டது. "மஸீஹானவர் வானத்திலிருந்து இறங்கும்போது அவர் இரண்டு பச்சை வஸ்திரங்களை அணிந்திருப்பார்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். இதற்கிணங்க, எனக்கு இரண்டு விதமான நோய்களிருக்கின்

றன. ஒன்று இடுப்பிற்கு மேலில், மற்றொன்று இடுப்பிற்குக் கீழில் அதாவது மராக் நோவும் அதிகமான மூத்திரமும்."

இவ்விபரம் காதியானியில் பிரசுரமான "பத்ரு" என்ற பத்திரிகையில் 7-6-1906வ பிரதியின் 5-வது பக்கத்தில் 2-வது பத்தியிலும், தஷ்ஹீதுல் அத்ஹான்" என்ற சஞ்சிகையின் 2-வது மலரில் ஜூன் மாதப் பதிப்பில் 1906-ல் 5-வது பக்கத்திலும் குலாம் அஹ்மது காதியானியால் எழுதப்பட்டிருக்கிறது.

"எனக்கே இந்த நிலைமை இருக்கிறது. நான் இரண்டு வியாதிகளில் எப்பொழுதும் அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறேன். அப்படி இருந்தும் தற்போதைய அலுவல்கள் எனக்கு இவ்விதமாக இருந்து கொண்டிருக்கின்றன. ராத்திரியில் வீட்டுத் தலைவாசலைப் பூட்டி விட்டு நீண்ட நேரம் வரை உட்கார்ந்துகொண்டு இந்தக் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், அதிகமாக விழித்திருப்பதால் மராக் என்ற என் வியாதி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தலை சுத்துதலும், மயக்கமும் அதிகமாகி விடுகிறது. அப்படி இருந்தும் இவ்விஷயத்தை நான் லக்ஷியம் செய்வதுமில்லை, இவ்வேலையைச் செய்தும் வருகிறேன்."

இவ்விஷயம் முஹம்மது மன்ஜூர் இலாஹி மிர்ஜாயி எழுதிய "மன்ஜூர் இலாஹி" யின் 348-ம் பக்கத்தில் குலாம் அஹ்மது சாகிப் கூறியதாக எழுதப்பட்டிருக்கிறது.

(3) "தமக்கு மராக் என்ற வியாதி இருக்கிறது என்பதாக ஹஜ்றத் அக்தஸ் கூறி இருக்கிறார்" என்பதாக "ரிவ்யூ ஆப்தி ரிலிஜியன்ஸ்" என்ற பத்திரிகையின் வால்யூம் 24 இதழ் 4 அதாவது 1925-ம் எப்ரல் மாதம் பிரசுரமான பிரதியின் 45-வது பக்கத்தில் பிரசுரமாகி இருக்கிறது.

(4) "தமக்கு மராக் என்ற வியாதி இருந்ததாக ஹஜ்றத் சாகிப் தம்முடைய சில கிரந்தங்களில் எழுதி இருக்கிறார்".

இதுவும் ஷை பத்திரிகை 25-வது மலர் 8-வது இதழ் அதாவது 1926-ம்வூ ஆகஸ்டு மாதப் பிரதியின் 6-வது பக்கத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

(5) ஹஜ்றத் சாகிபுடைய எல்லா நோய்களும் உதாரணமாக தலைச் சுற்றல், தலைவலி, தூக்கமின்மை, இருதய வலிப்பு, அஜீரணம், வயிற்றுப் போக்கு, மிதமிஞ்சிய மூத்திரம், மராக் முதலியவைகளுக்கெல்லாம், ஒன்றே ஒன்று தான் காரணம் என்பதை அறிந்து கொள்ளுங்கள், இன்னும் அதுவும் பலஹீனம்தான்"

இதுவும் ஷை பத்திரிகை 26-வது மலர், 5-வது இதழில் (மேமீ 1927வூ) காணப் படுகிறது.

(6) "மராக் என்பது "மாலிகூலியா" என்ற வியாதியின் ஒரு கிளையே யாகும்" என்பதாக, "அஸ்லுபியாலு நூறுத்தீன்" என்ற புத்தகத்தின் முதல் பாகம் 211-வது பக்கத்தில் கூறப் பட்டிருக்கிறது.

(7) "அஜீரணமும் வயிற்றுப் போக்கும்கூட இந்த வியாதியில் காணப்படுகின்றன. எல்லாவற்றிலும் சிந்தனையானது இதில் அதிகமாகி விடுகிறது. காக்காய் வலிப்பு, ஹிஸ்டரியா ஆகிய நோய்களையுடையவர்களைப் போன்றவர்களுக்கு தங்களுடைய உணர்ச்சிகளையும் நினைப்புகளையும் கட்டுப்படுத்த முடிவதில்லை".

இதுவும் ஷை பத்திரிகையின் 1926-ம் வூ ஆகஸ்டு மாதப் பிரதியின் 6-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

(8) "நபியிடத்தில் தன்னுடைய சுய உணர்ச்சியுடன் கவனங்கள் ஒன்று சேர்ந்திருக்கிறது. உணர்ச்சிகள் கட்டுக் கடங்கியவை"

இதுவும் ஷைபத்திரிகை1927-ம்வூ மேமீப் பிரதியின் 30-வது பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

ஹிஸ்டிரியா (வயிற்றுவலி) வியாதி

காதியானீ மிர்ஜாவின் புதல்வர் மிர்ஜா பஷீறுத்தின் அஹ்மத், எம். ஏ. பின் வருமாறு எழுதுகிறார்:—

என்னிடம் என் தாய் கூறியதாவது:—ஹஜ்றத் மஸீஹே மௌஊது அவர்களுக்கு (காதியானி மிர்ஜாவுக்கு) முதல் முறையாக தலை சுற்றும் ஹிஸ்டிரியாவும் முதலாவது பஷீருடைய (இவர் எனது மூத்த சகோதரர்; 1888-ல்மரணமடைந்தார்). மரணத்திற்குச் சில நாட் பின்பு உண்டாயிற்று. ராத்திரியில் தூங்கிக்கொண்டே அவர் எழுந்து விடுவார். பிறகு கொஞ்ச நாள் சென்று அவர் தேக சுகம் கெட்டு விட்டது. ஆனால், இந்த மயக்கம் இலேசாக இருந்தது. பிறகு, கொஞ்சகாலத்திற்குப்பின்னர் ஒருமுறை மஸ்ஜிதுக்குத் தொழச் சென்றார். போகும் போதுஇன்று உடம்புக்குச் சுகக்குறை வேற் பட்டி இருக்கிறது என்று சொன்னர். கொஞ்ச

நேரத்திற்குப் பின்னர் ஷெய்கு ஹாமித் அலீ கதவை தட்டி சீக்கிரத்தில் தண்ணீர் சுடவை யுங்கள் என்று கூறினர். ஹஜ்றத் சாகிபுக்குச் சுக வீனம் வந்து விட்டது என்று நான் (குலாம் அஹ்மதுவின் மனைவி) உணர்ந்து கொண்டேன். உடனேநான் வேலைக்காரப் பெண்ணை அழைத்து "மியானுக்கு உடம்பு எப்படி இருக்கிறது" என்று விசாரிக்கும் படியாகக் கூறினேன். சுகவீனமாக இருக்கிறது என்று ஷெய்கு ஹாமீத் அலீ கூறினர். உடனே நான் பர்தாவைப் போட்டுக்கொண்டு மஸ்ஜிதுக்குச் சென்று பார்த்தபோது அவர்கள் படுத்திருந் தார்கள். நான் பக்கத்தில் சென்றபோது, "எனக்கு உடம்பு சுகமில்லை; கெட்டுப் போய் விட்டது; ஆனல் இப்பொழுது கொஞ்சம் தேவலை; நான் தொழுது கொண்டிருக்கும் போது ஏதோ கருப்பு வஸ்துக்கள் என் முன் னுலிருந்து கிளம்பி வானத்தின்பால் செல்வது போல் கண்டேன்; நான் பிறகு சப்த மிட்டுக் கொண்டு கீழே விழுந்து விட்டேன்; பிறகு ஒரு விதமான புத்தி தடுமாற்றம் ஏற் பட்டுவிட்டது." என்று கூறினர்.

இதற்குப் பிறகு என் தந்தைக்கு வழக்கமாக வரும் மயக்கம் வர வாரம்பித்து விட்டது என்று என் தாயார் எனக்குக் கூறினர்.

(2) இதே மிர்ஜா பஷீறுத்தின் அஹ்மது தம் முடைய "ஸீரத்துல் மஹ்தி" இரண்டாம் பாகம் பக்கம் 55-ல் பின்வருமாறு எழுதி இருக் கிறுர் :—

"எனக்கு ஹிஸ்டிரியா வியாதி இருக்கிற தென்றும், சில சமயத்தில் மராக் வியாதி யுண் டாகுவதுண்டென்றும், ஹஜ்றத் மஸீஹே மௌஊத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொல் லக் கேட்டதாக டாக்டர் பீர் முஹம்மது இஸ் மாயீல் சாகிப் என்னிடம் கூறி இருக்கிறுர்."

(3) ஷி கனவான் ஷி புத்தகம் முதல் பாகத்தின் 22-வது பக்கத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறுர் :—

"பிஸ் மில்லாஹிர் ரஹ்மா னிர்ரஹீம். ஹஜ் றத்தின் தாயார் அவர்கள் என்னிடம் கூறிஇருப் பதாவது: ஆரம்பத்தில் ஒரு முறை ஹஜ்றத் மஸீஹே மௌஊத் அலைஹிஸ்ஸ லாமுக்கு கடுமையான மயக்க மேற்பட்டது. யாரோ ஒருவர் மிர்ஜா சுல்தான் அஹ்மதுக்கும் மிர்ஜா பஜ்லே அஹ்மதுக்கும் இச் சமாச்சாரத்தைத் தெரிவித்தார். உடனே அவ்விருவரும் வந்தார் கள். மிர்ஜா சுல்த்தான் அஹ்மது கட்டிலுக்குப் பக்கத்தில் வாய் பேசாமல் மௌனமாக உட் கார்ந்து கொண்டார். ஆனல், மிர்ஜா பஜ்லே அஹ்மதின் முகத்தில் ஒரு விதமான நிறம் தோன்றி மற்றொரு விதமான நிறம் வந்து கொண்டிருந்தது. அவர் இங்கு மங்கும் மாறி மாறி ஓடிக்கொண்டிருந்தார். சில சமயங்களில் அவர் தமது தலைப்பாகையை எடுத்து ஹஜ்றத் சாகிபின் கால்களைக் கட்டுவதும், சில சமயங் களில் பாதங்களைப் பிடித்து விடுவதுமாகயிருந் ததுடன் பயத்தினுல் அவரது கை நடுங்கிக் கொண்டிருந்தது".

(4) ரிவ்யூ ஆப்திரிலிஜியன்ஸ், மலர் 25, இதழ் 8-ல் பின்வருமாறு எழுதி இருக்கிறுர் :—

"இல்ஹாமைத் தாவாச் செய்கிற ஒருவர் சம்மந்தமாக அவருக்கு ஹிஸ்டரியா, மாலி கூலியா, காக்காய் வலிப்பு ஆகிய வியாதிகள் இருப்பதாக ருஜூவாகி விடுமாயின் அவரு டைய தாவாவை மறுப்பதற்காக வேறு ஒரு காரணம் தேவையேயில்லை. ஏனெனில், இது பெரும் அடையாளமாகும். அவர் உண்மை யாளர் என்ற கட்டிடத்தை இவை அடியுடன் பெயர்த்தெரிந்து விடுகின்றன."

இரவில் அல்லது பகலில் நூறுநூறு முறை சிறு நீர் வருதல்.

"அர்பயீன்" என்ற புத்தகத்தின் 3—4 அனுபந்தத்தின் 4-வது பக்கத்தில் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ பின்வறுமாறு எழுதுகிறுர் :—

"நான் நிரந்தரமாக எப்பொழுதும் நோயுள்ள மனிதனுகவே இருக்கிறேன். இரண்டு வஸ்தி ரங்களை அணிந்தவராக மஸீஹு இறங்கி வரு வார் என்று ஹதீதுகளில் வந்திருக்கிற அந்த இரண்டு வஸ்திரங்களும் என்நிலைமைக்குப் பொருந்தி இருக்கின்றன. சொற்பனத்திற் குப் பயன் சொல்லப்பட்டுள்ள நூல்களின்படி அவ்வஸ்திரங்கள் இரண்டும் இரண்டு நோய்க ளைக் குறிக்கின்றன. எனவே, ஒரு வஸ்திரம் எனது ஸ்தூலத்தின் மேற்பகுதியில் இருக்கி றது. அதாவது எப்பொழுதும் தலைவலியும், தலைச்சுற்றும், கிறுகிறுப்பும், தூக்க மின்மையும் இருதயவலிப்பும், மயக்கத்துடன் வந்து விடு கின்றன. மற்றொருவஸ்திரம் எனது கீழ்ப்பகு தியில் இருக்கின்றது. அதாவது எனக்கு டியா பட்டீஸ் (நீரழிவு) நோக்காடு இருந்து கொண்டி ருக்கிறது. இது எனக்கு வெகுகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. அநேக சர்ந்தர்ப்

பங்களில் இரவில் அல்லது பகலில் நூறுநூறு முறை சிறு நீருக்குவந்து விடுகிறது. இவ்வளவு அதிகமாகச் சிறு நீருக்கிருப்பதால் எத்துணை திங்குகளும் பலஹீனமும் வரமுடியுமோ அவையனைத்தும் எனக்கு இருக்கின்றன".

வயிற்றுப் போக்கு

(1) மியான் முஹம்மது மன்ஜூர் இலாஹி என்ற மிர்ஜாயீ தம்முடைய "மன்ஜூர் இலாஹி" என்ற புத்தகத்தின் 348,349-வது பக்கங்களில், "அல்ஹக்கம்" பத்திரிகையின் 5-வது மலர் 40-வது இதழின் மேற்கோளுடன் பின்வருமாறு எழுதி இருக்கிறார்:—

"எனக்கு வயிற்றுப் போக்கு வியாதி இருப்பதுடன் ஒவ்வொரு நாளும் அநேகம் முறை மலபாதை கழித்துக்கொண்டிருக்கிறேன். ஆயினும், எனக்கு மலங்கழிக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போதெல்லாம் "இப்பொழுது ஏன் இந்தத் தொல்லை வந்தது" என்ற வருத்தமே எனக்கு உண்டாகின்றது".

(2) "ஹஜ்ரத் சாகிபுக்கு அஜீரணம், வயிற்றுப்போக்கு, தலை கிருகிருப்பு ஆகியவைகள் பெரும்பாலும் எப்பொழுதுமிருந்து கொண்டிருக்கின்றன என்பது உண்மையான விஷயமேயாகும்.

(இது ரிவ்யூ ஆப் தி ரிலிஜியன்ஸ் என்ற பத்திரிகையின் 25-வது மலர், 4-வது இதழில் கூறப்பட்டிருக்கிறது).

தலைச்சுற்று

மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ "ஹக்கீக்கத்துல் வஹீ" என்ற தமது புத்தகத்தின் 307-வது பக்கத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்:—

"ஆம், இரண்டு வியாதிகள் எனக்கிருக்கின்றன. ஒன்று தேகத்தின் மேற்பகுதியில், மற்றொன்று தேகத்தின் கீழ்ப்பகுதியில். மேற்பகுதியில் தலைச்சுற்றும், கீழ்ப்பகுதியில் அதிகமான சிறு நீரும் இருந்து கொண்டிருக்கின்றன."

இனிப்பு மூத்திரம்

குலாம் அஹ்மது காதியானீ தமது "ஹக்கீக்கத்துல் வஹீ" 363, 364-வது பக்கங்களில் பின் வருமாறு எழுதி இருக்கிறார்:—

"இரண்டு பச்சை வஸ்திரங்கள் அணிந்திருப்பார் என்ற முன்னறிவிப்பு பொய்யாகாமலிருப்பதற்காக தலைச் சுற்றுமட்டிலும் சமயா சமயத்தில் வந்து கொண்டிருக்கிறது. மற்றொரு வியாதியாகிய நீர்ரோகம் ஏறக்குறைய 20 வருஷகாலமாக இருந்து வருகிறது. இந்த அடையாளத்தைப் பற்றி முன்னமேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது. தவிரவும், இன்றுவரை தினசரி 20 முறைக்குக் குறையாமல் சிறு நீருக்குச் செல்லவேண்டியதிருக்கிறது. அதனைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் மூத்திரத்தில் சர்க்கரையும் கலந்திருக்கிறது."

ஞாபகச் சக்தி நன்றாயில்லை.

"நஸீம் தாவத்" என்ற புத்தகத்தின் 71-வது பக்கத்தின் ஓரக்குறிப்பிலும் "ரிவ்யூ ஆப் தி ரிலிஜியன்ஸ்" என்ற பத்திரிகையின் மலர் 2, இதழ் 4-ல் (அதாவது 1903ஹு ஏப்ரல் மாதத்துப் பிரதியின்) 153-ம் பக்கத்தின் ஓரக்குறிப்பிலும் "ஞாபக சக்தி நன்றாயில்லை; ஞாபகமிருப்பதில்லை" என்றெழுதப்பட்டிருக்கிறது.

"மக்தூபாத்தே அஹ்மதிய்யா" என்னும் பிரசுரத்தின் வால்யூம் 5-பக்கம் 3-லும் 21-லும் குலாம் அஹ்மது காதியானீ பின்வருமாறு எழுதி இருக்கிறார்:—

"எனது ஞாபகச் சக்தி மிகவும் கெட்டுப் போய்விட்டது. ஒரே மனிதரைப் பலமுறை நான் சந்தித்தாலும்கூட அவரை நான் மறந்து விடுகிறேன். ஞாபக மூட்டுவது நல்ல முறைதான். ஞாபக சக்தி மிகவும் மோசமாகிவிட்டது. அதனை நான் விபரித்துச் சொல்லமுடியாத அளவிற்குக் கெட்டுப் போய்விட்டது"

காதியானி மிர்ஜாவின் மனைவிக்கும் மராக்

காதியானில் பிரசுரமாகும் "அல்ஹக்கம்" என்ற பத்திரிகையின் மலர் 5, நெம்பர் 29-ல் (அதாவது 10-8-90) பக்கம் 14, காலம் 3-ல் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "எனது மனைவிக்கும்கூட மராக் என்ற வியாதி இருந்து வருகிறது. சில சமயங்களில் அவள் என்னுடன் வெளியில் வருவாள். ஏனெனில், வைத்திய முறைப்படி, அவள் நடப்பது அவளுக்குப் பிரயோஜனமாக இருக்கும்."

காதியானீ மிர்ஜாவின் புதல்வருக்கும் மராக்.

"ரிவ்யூ ஆப் தி ரிலிஜியன்ஸ்" என்ற பத்திரிகையின் மலர் 25, இதழ் 8-ல் (1926-ஆகஸ்டு சஞ்சிகையின்) பக்கம் 11-ல் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

"தமக்குச் சில சமயங்களில் மராக் என்ற வியாதியின் மயக்கம் உண்டாகின்றது என்பதாக ஹஜ்றத் மஸீஹின் இரண்டாவது கலீபா, அய்யத ஹுல்லாஹு பி நஸ்ரிஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்."

மியான் மஹ்மூது அஹ்மது காதியானியின்
உபாத்தியாயர்

காதியானில் பிரசுரமாகும் "அல்பஜ்லு" பத்திரிகை 1-1-1935வ பிரதி 2-வது பக்கம், 3-வது பத்தியில் காதியானீ கலீபா மியான் மஹ்மூது அஹ்மது என்பவர் பின்வருமாறு எழுதி இருக்கிறார்:—

"உதாரணம் ஒரு பைத்தியக்காரனைப் போலிருந்தாலும், அது இப்பொழுது உயிருடனில்லாத ஒரு பைத்தியக்காரனைப் பற்றியதாகும். இன்னும், இந்த உதாரணம் எனக்கு உபாத்தியாயராக இருந்த ஒரு பைத்தியக்காரனைப் பற்றியதாக இருந்த போதினும், இதிலிருந்து இஷ்குடைய நிலைமை நன்கு வெளியாகிறது. என்னுடைய உபாத்தியாயர் ஒருவர் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தார். பிறகு அவர் தனக்கு நபித்துவமிருப்பதாக தாவாச் செய்துகொண்டிருந்தார். அவரது பெயர் மௌலவீ யார் முகம்மது என்பது."

மேலே சொல்லப்பட்ட காதியானீ கிரந்தங்களின் மேற்கோள்களிலிருந்து (1) மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ சதா நோயாளியாக இருந்திருக்கிறார். (2) அவருக்கு 'மராக்' என்ற வியாதி இருந்திருக்கிறது. (3) ஹிஸ்டரியா என்னும் மயக்க மிருந்தது. (4) தலைவலி, (5) தலை கிறுகிறுப்பு (6) நித்திரை பங்கம் (7) இருதய வலிப்பு (8) வயிற்றோட்டம் (9) மிதமிஞ்சிய மூத்திரம் (10) அஜீரணம் (11) ஞாபகப் பிசகு (12) மூளைப் பலஹீனம் ஆகியவைகள் இருந்ததாக ருஜுவாகிறது.

குறிப்பு:—இப்படிப்பட்ட நோய்களிருந்ததால் தான் அவர் முன்னுக்குப் பின் முரண்பாடாகவும் பரிகசிக்கத்தக்க விதமாகவும் தாவாச் செய்துகொண்டிருக்கிறார். என்றாலும், இப்படிப்பட்ட நோயுள்ள ஒருவர் தன்னைப்பற்றி பலவாறு கூறிக்கொண்டது ஆச்சரியமன்று. ஆனால், அக்கூற்றுக்களை மெய்யென்று நம்பி நமது சகோதரர்களிற் பலர், குலாம் அஹ்மது காதியானியைச் சீர்திருத்தக்காரர் என்றும் முஜத்திதென்றும், பெரிய ஞானியென்றும், நபியென்றும் பிரசாரம் செய்தும் வருவதுதான் ஆச்சரியகாமானதாகவும் பைத்தியக்காரத்தனமாகவும் இருந்து வருகிறது என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக! (ப. - ர்)

கோ. அ. பகீர் முகம்மது சாஹிபின் வந்தனம்.

நமது சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கக் கடமையை நிறைவேற்றுவான் வேண்டி இம்மிஸ்கீன் மலாய் நாட்டைவிட்டு இந்தியா புறப்படும்போது கோலாலம்பூர், கிள்ளான், றவாங், சுங்கை, தப்பாரோட்டு, ஈப்போ முதலிய ஸ்டேஷன்களிலும், பினங்கில் ரஜுலா கப்பலிலும் எனக்கு வாழ்த்துக்கூறி பயணம் அனுப்பிவைத்த அன்பான ஹிந்து-முஸ்லிம் சகோதரர்களுக்கும், வெளியிடங்களிலிருந்து வாழ்த்து தந்தி, தபால்கள் அனுப்பிவைத்த அன்பான நண்பர்களுக்கும் தனித்தனியே எனது நன்றியறிதலான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ள முடியாததற்கு வருந்துவதுடன் இப்பத்திரிகை மூலம் அன்னோருக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக கோலாலம்பூர் ஸ்டேஷனில் சிலாங்கூர் இந்திய வர்த்தக சங்கத்தார்களும், மற்றும் முஸ்லிம் கனவான்களும் ஹிந்து சகோதரர்களும் என்மீது அன்பு வைத்து மலர்மாலைகளிட்டு உபசரணை செய்து அனுப்பியதானது நான் இஸ்லாத்திற்காகச் செய்யும் அற்ப தொண்டின் அறிகுறியாகுமெனக் கருதுகிறேன்.

அல்லாஹ்வின் கிருபையைக் கொண்டு ஹஜ்ஜு யாத்திரைக்குச் சென்று யான் கோரிச்செல்லும் காரியத்தை முடித்துக்கொண்டு ஸலாமத்தாக திரும்பிவந்து தங்களை சந்திக்கும்படியான பாக்கியத்தைக் கொடுக்குமாறு ஏகவல்ல நாயனை இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

கோ. அ. பகீர் முகம்மது.

ஹிந்து வேதத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்

நபிமார்கள் எல்லா சமூகத்திற்கும் அனுப்பப் பட்டிருக்கின்றனர். அவர்கள் அருந்திய நீர்துறை ஒன்றேயாதலின் முன்னுள்ளவர் பின்னுள்ளவரைப் பற்றிமுன்னெச்சரிக்கை செய்துள்ளனர். இதுவன்றி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எல்லா நபிமார்களது போதனைகளையும் ஒருங்கே போதித்து உலகத்தில் வழிகாட்டியாக இருந்தமையான், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றி எல்லாச் சமூகத்தினருடைய வேதங்களிலும் எல்லாப்பாஷைகளிலும் முன்னெச்சரிக்கைகள் காணப்படுகின்றன. இன்று ஹிந்துக்களின் வேதப்புத்தகங்களிலிருந்து நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றிய முன்னறிவிப்புகளைக் கீழே எடுத்தெழுதுகின்றனம்!

ஸாம வேதத்தில் மூன்று அறிகுறிகள்

கடைசி காலத்து நபியைப்பற்றி ஸாம வேதத்தினேரிடத்தில் " அவரது பெயர் இந்திரர். அவர் 10 ஆயிரம் பரிசுத்த துணைவர்களுடன் வெற்றியையும் ஜெயத்தையும் அடைவார். 'அவர் கல்லை நாட்டுவார்' என்ற வாக்கியம் காணப்படுகிறது. இவ்வாக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள மூன்று அடையாளங்களும் நபிகள் நாயகம்(ஸல்.) அவர்களுக்குமுற்றிலும் பொருந்தி இருக்கின்றன. வேதத்தில் " இந்திரர்" என்ற பெயர் மிகப்பெரிய தளபதிக்கும் வெற்றி வீரருக்கும் சொல்லப்பட்டு வருகிறது. மழை பெய்யும்படிச்செய்வது அவரது சொந்த வேலையாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தளபதியாகவு மிருந்தார்கள், வெற்றி வீரராகவு மிருந்தார்கள், மழை பெய்விப்பவர்களாகவு மிருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பெய்வித்த மழையினுல் சர்வ சிருஷ்டிகளும் செழித்தன.

திருமக்காவை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஜெயித்துப் பிடித்தபோது அவர்களுடன் 10 ஆயிரம் வீரர்கள் இருந்தனர் என்பதும், இவர்களனைவரும் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்வதற்காகத் தங்களை அற்பணஞ் செய்த பரிசுத்தவான்களென்பதும் உலகறிந்த விஷயமாகும்.

திருமக்காவிலுள்ள பரிசுத்த தேவாலயமாகிய கஃபத்துல்லாவைத் திரும்பக்கட்டிய போது அறபிக் கோத்திரங்களுக்கிடையே பரிசுத்த கல்லை நடுவது சம்பந்தமாகச் சச்சரவு ஏற்பட்டபோது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பஞ்சாயத்துக்காரராக இருந்து ஹஜ்றுல் அஸ்வதை அது இருக்கவேண்டிய இடத்தில் நாட்டினார்கள் என்பது பெருமகரின் சரித்திரத்தில் தெள்ளத்தெளிய அறியக்கிடக்கிறது.

எனவே, ஸாம வேதத்தில் கடைசி காலத்து நபியைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ள முன்னறிவிப்பில் கண்ட அடையாளங்கள் மூன்றும் நாயகம் (ஸல்.) அவர்களிடம் பொருந்தி இருக்கின்றன என்பது இதிலிருந்து நன்கு ருஜுவாகிறது.

ஸ்ரீ கிருஷ்ணனின் முன்னறிவிப்பு

ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து அடியிற் கண்ட முன்னறிவிப்பை சுகயோகி அவர்கள் கேட்டுத் தெரிந்து 58 வருஷங்களுக்குப்பின் பரிக்ஷித்து மகாராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார் :—

" மகாராஜாவே! உமக்கு 115 வருஷங்களுக்குப்பின் ஸ்ரீ கிருஷ்ணனது போதனை அழிய வாரம்பித்துவிடும். முக்கா வென்னும் நக்ஷத்திரம் செவ்வாய் கிரகத்துடன் சேர்ந்து ஆட்சி செய்யும். அக்காலத்திலிருந்து கலியுகத்தின் காலத்தில் 1200 வருஷங்கள் மட்டிலும் தான் எஞ்சி இருக்கும்."

இதனைக் கூறியபின் அந்த யோகியானவர் இந்தியாவில் ஆட்சி புரிந்த பற்பல அரசகுடும்பத்தினரைப் பற்றியும் பிரஸ்தாபித்தார். மோரியா அரச வம்சத்தினரின் ஆட்சி 300 வருஷம் வரை இருக்கு மென்றும் கூறி விட்டு மேலும் கூறி இருப்பதாவது :—

" பாரத வருஷத்தில் சிறு சிறு அரசாங்கங்கள் ஏற்பட்டு விடும். பாபமும் அநீதிகளும் மிதமிஞ்சி விடும். அது சமயங் கல்கி அவதாரம் (விக்கிரகம் உடைப்பவர்) தோன்றுவார்."

பற் பல வம்சத்தினரது அரசாங்கங்களுடையவும் புராணங்களினுடையவும் சரித்திரங்களை ஆராய்ச்சி செய்ததிலிருந்து கல்கி அவ

தாரம் வருகிற காலம் கலியுகத்தில் 4658-வது வருஷம் என்று தெரியவருகிறது. இன்று கலியுகம் பிறந்து 6037-வருஷங்களாகின்றன. ஹிஜ்ரீ இப்பொழுது 1355-வருஷங்களாகின்றன. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 53-வது வயதில் ஹிஜ்றத்துச் செய்தார்கள். ஆகவே இரண்டையும் கழித்துவிட்டு பார்க்கும்போது 4629-வருஷங்கள்தான் எஞ்சி இருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபித்துவத்தை தமது 40-வது வயதில்தான் தாவாச் செய்தார்கள். ஆகவே, அதனை ஷை 4629 உடன் சேர்த்தால் 4669 ஆகிறது. அரபி சகாப்தம் சந்திர வருஷமாகவும், ஹிந்து வருஷம் சூரிய வருஷமாகவு மிருப்பதால் வருஷத்திற்கு 11 நாட்கள் வித்தியாசப்படுகிறது. இவ்வித்தியாசத்தையும் சேர்த்துப்பார்த்தால் 4680-வருஷமாகின்றது. எனவே, புராணங்களில் சொல்லப்பட்ட கல்கி அவதாரம் நபிகள் நாயாகம் (ஸல்.) அவர்கள் தான் என்பது இதிலிருந்து நன்கு விளங்குகிறது.

கலிங்க புராணம்

கலிங்க புராணம் ஹிந்துக்களுக்கு மிகவும் பரிசுத்தமான கிரந்தம். இப்புராணத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வருகையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற இடத்தில் நபிகள் நாயகம் (ஸல்.)அவர்களது பெயர், பெற்றோர்களது பெயர்கள், ஜன்ம பூமி ஆகியவைகளெல்லாம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "ஜகத்குரு விஷ்ணு பக்தருக்கும் கோமதிக்கும் பிறப்பார். முதல்மீ அவபது பிறப்பு 12வ திங்கட்கிழமை சூரியோதயமான 2 நாழிகைக்குப் பிறகு நிகழும். அவரது பிதா அவர் பிறப்பதற்குமுன்னர் பரலோகம் சேர்ந்து விடுவார். அவரது மாதாவும் பின்னர் வெகு சீக்கிரத்தில் சென்று விடுவார். ஜகத்குருவுக்கு ஸல்மல் தீபத்தின் இளவரசியுடன் விவாகம் நிகழும். விவாகம் நடைபெறும்போது அவருடைய தந்தையுடன் பிறந்தவர்களில் ஒருவரும் மூன்று சகோதகர்களும் கூட இருப்பர். ஒரு பொதும்பில் பரசுராமர் அவருக்குப் போதனை செய்வார். பின்னர் அவர் ஸல்மல் தீபத்தில் தமது நகரமாகிய ஸம்பாலாவிற்கு வந்ததும் தமது பிரசாரத்தை ஆரம்பிப்பார். அதனால் அவரது பந்து மித்திரர்கள் அவர்மீது கடுங்கோபமடைவர். இக்கஷ்டங்களால் நெருக்குண்டு அவர் வடக்கிலுள்ள மலைகளின் பக்கல் சென்றுவிடுவார். ஆனால், கொஞ்ச காலத்திற்குப் பின்னர் அதே நகரத்தில் வாளாயுதந் தாங்கித் திரும்பவும் வந்து எல்லா தேசங்களையும் ஜெயித்துக் கொள்வார். ஜகத்குருவினிடத்தில் ஒரு குதிரை இருக்கும் அதற்கு மின்னலைப்பார்க்கினும் அதிகமான வேகமிருக்கும். அதில் ஆரோகணித்து பூமியையும் எழுவானங்களையும் பிரயாணம் செய்வார்." எனக் கூறப்பட்டிருக்கிறது.

கலிங்க புராணத்தில் சொல்லப்பட்டுள்ள "ஜகத்குரு" என்ற பதத்திற்கு அறபியில் "றஹ்மத்துன் லில்ஆலமீன்" என்பது பொருள். இந்தப் பெயர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் திருகுர்ஆனின் மூலமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்களது தந்தையின் பெயர் "ஈஸ்வரபக்தர்" என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தந்தையின் "அப்துல்லாஹ் என்ற பெயராக இருக்கிறது. அவர்களது மாதாவின் பெயர் "சோமதி" என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுதான் "ஆமினா" என்ற பெயராகும். சோமதி என்பதற்கு ஆமினா என்பது பொருள். மேலும் ஹிந்து ரிஷிகள் இவ்வுலகத்தை 7 கண்டங்களாகப் பிரித்திருக்கின்றனர்.

1. ஜம்புதீபம். இதில் இந்தியா, பர்மா, அஸ்ஸாம் ஆகிய தேசங்களடங்கி இருக்கின்றன.

2. ஷாதகுதீபம். இதில் ஈரான், குராஸான் ஆகிய தேசங்கடங்கி இருக்கின்றன.

3. கம்பதகதீபம். இதில் ருசியா, ஜெர்மன், ஜப்பான், சீனா ஆகியவைகளடங்கி இருக்கின்றன.

4. குருச்தீபம். இதில் இத்தாலி, பால்க்கன் நாடுகள் அடங்கி இருக்கின்றன.

5. ஸல்மல்தீபம். இதில் அறப், கானான் ஆகிய தேசங்களடங்கி இருக்கின்றன.

6. கஷதீபம். இதில் ஆப்பிரிக்கா கண்டம் அடங்கி இருக்கிறது.

இன்னொரு தீபத்தில் மற்ற நாடுகள் சேர்ந்திருக்கின்றன. இவ்வாறு ரிஷிகள் செய்த பாகத்தின்படி புராணத்தில் சொல்லப்பட்ட ஸல்மல் தீபம் என்பது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிறந்த நாடாகவே இருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உம்முல் மூமினீன் ஹஜ்றத் கதீஜத்துல்குப்ரா (றலி.) அவர்களை விவாகம் செய்த போது ஹஜ்றத் அபூதாலி

யும் அவரது மைந்தர்களான ஹஜ்றத் உகைல் (ரலி.), ஜஅபரதையார் (ரலி.), அலீ முர்த்தஜா (ரலி.) ஆகிய மூவரும் பிரசன்னமாக இருந்தனர். ஹஜ்றத் அபூதாலிப் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தந்தையின் மூத்த சகோதரர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இஷா அத்தே இஸ்லாம் வேலையை ஆரம்பித்த போது அவர்களது பந்துமித்திரர்கள் அவர்களைப் பகைத்துப் பல விதத்திலும் தொந்தரவு செய்தும், 13-வருஷ காலத்திற்குப் பிறகு தமது பிறந்த ஸ்தலமாகிய மக்காவிற்கு வடக்கிலுள்ள மதினுவிற்குச் சென்றூர்கள். மக்காவிற்கு வடக்கில் மதீனுவரை மலைப்பிரதேசம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பின்னர், 8-வது வருஷத்தில் 10 ஆயிரம் ஸஹாபிகளைக்கொண்ட பட்டாளத்துடன் மக்காவின் மீது படையெடுத்து வந்து அதனைக்கைப்பற்றினூர்கள். மக்கா பிடிப்பட்டபின் வெகு சீக்கிரத்தில் அறபி நாடுகள் முழுவதும் நாயகம் (ஸல்.) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து விட்டன. இவை எல்லாம் சரித்திரசான்றுகளாகும். மின்னலைப் பார்க்கினும் வேகமுள்ள குதிரையால் பூமியையும், 7 வானங்களையும் சுற்றிவருவதானது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மிஃறாஜுக்குச் சென்று வந்த சம்பவத்தைக் குறிக்கின்றது. நாயகம் (ஸல்.) அவர்களது இந்தயாத்திரையில் "புராக்" என்ற தெய்வ லோகத்துப் புரவியில் பிரயாணம் செய்தார்கள் என்பது தெளிவு. ஆனல், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பிறப்பிடமாகிய திருமக்காவிற்கு புராணத்தில் "ஸம்பாலா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்திற்கு வடக்கில் மலைகளிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வடையாளம் திருமக்காவிற்கு மிகப்பொருத்தமாகவுமிருக்கிறது.

என்றாலும், இற்றை நாளிலுள்ள ஹிந்து சகோதரர்கள் குளிர்ந்தமனத்துடன் அவர்களது புராணத்திற் கூறப்பட்டுள்ள முன்னறிவிப்பையும், நாயகம் (ஸல்.) அவர்களது ஜீவிய சரித்திரத்தையும் சீர்தூக்கிப் பார்ப் பார்களாயின் அவர்கள் தங்களது பழைய மதத்திலே விடாப்பிடியாக இருப்பதற்கு எவ்விதக் காரணமுமில்லை என்பது அவர்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

முஸ்லிம்களின் முன்னேற்றத்தின் இரகசியம்

(சுல்த்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி)

இங்கிலாந்தை அரசாட்சி புரிந்த மன்னர்களில் முதலாவது ரிச்சார்டு அரசர் புஜபல பராக்கிரமத்திலும், வீரப் பிரதாபத்திலும், யுத்தங்களிலும் சிறந்தவர். இங்கிலாந்தின் சரித்திரத்தில் இவரது பெயர் "அஞ்சா நெஞ்சன்" என்ற சிறப்புப் பெயருடன் பொறிக்கப்படுகிறது. இம்மன்னனது வாணுள் முழுவதும் பாலஸ்தீனத்தில் சுல்த்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களுடன் வாள்வீசுவதிலேயே கழிந்தது. இவரது சைனியங்களெல்லாம் போர் செய்து அலுத்துப்போயின. இம்மன்னரும் நோய்வாய்ப்பட்டார். எத்தனையோ ராஜ வைத்தியங்கள் புரியப்பட்டன. எல்லா வைத்தியர்களும் கைவிட்டனர். இவ்வித நிலைமையிலும்கூட இம்மன்னன் பாலஸ்தீனத்தை விட்டகன்றனல்லன். இவ்வாறு நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும்போது ஒருநாள் அந்திப் பொழுதில் அவரது கூடாரத்தின் முன் ஒரு தர்வேஷ் தோன்றினூர். கூடாரத்திற்கு வெளியில் நின்றுகொண்டு சப்தம் கொடுத்தார். மன்னனது பிரதானிகளில் ஒருவர் கூடாரத்திற்குள்ளிருந்துகொண்டே தர்வேஷைப் பார்த்துக் கோபமடைந்து "சீ, பயலே! இந்த நேரத்திலுங்கூடவா விடுகின்றனையில்லை. நீ யார்?" என்று வினவினன். மற்றொரு பிரதானி அந்த தர்வேஷை நோக்கி "அரசர் நோய்வாய்ப்பட்டிருக்கிறூர். ஆதலின், ஒருவரையும் உள்ளே அனுமதிக்க உத்தரவில்லை." என்றனன். மூன்றுவது பிரதானி ஒருவன் "எதற்கும் வெளியிற் சென்று வந்திருப்பவர் யார்தான் என்று பார்க்

கலாம் என்றனன். இதற்குள்ளாக ஒருவர் வெளியில் வந்தார். ஒரு ஏழைப் பிச்சைக்காரன், கந்தலும் கதுக்கலும் உடுத்து, கைத்தடியை ஊன்றிக்கொண்டு நிற்பதைப் பார்த்து,

நீர் யார்? குருடனுயினையோ? இது அரசரது கூடாரமன்றோ? என்றனன்.

அதற்கு அந்த தர்வேஷ்!—ஆம்! மெய்தான். இது அரசரது கூடாரமென்பதை யானறிவேன். அரசரது சரீர நிலை இப்பொழுது எப்படி இருக்கிறது? நான் அவருக்கு வைத்திய சிகிச்சை செய்யவேண்டும்.

பிரதானி :—தாங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?

தர்வேஷ் :—நாங்கள் துறவிகள். எங்களுக்கு எங்குமில்லமில்லை.

பிரதானி :—அவ்வாருயின், தாங்கள் நன்கு வைத்திய சிகிச்சை செய்வீர்களா?

தர்வேஷ் :—ஆம்! அதற்கென்ன சந்தேகம் கடவுள் நமக்கு உதவி புரியும் பக்ஷத்தில்.

பிரதானி :—(கொஞ்சம் மெல்லிய குரலில்) நல்லது தாங்கள் உள்ளே வரலாம்.

தர்வேஷ் கூடாரத்தினுட் சென்று நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் கிடக்கும் மன்னனது நாடியைப் பரிசோதித்தார். கொஞ்சநேரம் சிந்தனை செய்தார். பின்னர் பிரதானிகளை நோக்கி, நாம் உங்களது அரசருக்கு வைத்திய சிகிச்சை செய்வோம். கடவுள் கிருபையால் அவர் குணமடைந்து விடுவார். ஆனுல், எமது வைத்திய சிகிச்சை முறையில் நீங்கள் தலையிடக்கூடாது. இந்நிபந்தனையை அங்கீகரிப்பின் சிகிச்சையை இப்பொழுதே ஆரம்பித்துவிடலாம்." என்ருர்.

பிரதானிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு ஒன்றுங் கூறமுடியாமல் திகைத்தனர். ஆனுல், நோய் வாய்பட்டவஸ்தையிலிருக்கிற மன்னனுன முதலாவது ரிச்சர்டு தாழ்ந்த குரலில் "நல்லது, தாங்கள் சிகிச்சை செய்யுங்கள்" என்று கூறினன். அதன் பேரில் அந்த தர்வேஷ் அவ்விடத்திலேயே இருந்து மூன்று நான்கு நாட்கள்வரை தமது கைப்பட துஆக்களை எழுதி மன்னனுக்கு அதனைக் குடிக்கும்படிச் செய்தார். மரணக்குறி தோன்றிய முதலாவது ரிச்சார்டின் முகத்தில் நோய் விலகுவதற்குரிய அடையாளங்கள் தோன்றின. சின்னுட்களுக்குப் பின்னர் மன்னன் பூர்ண குணமடைந்தனன். வைத்திய சிகிச்சை செய்த தர்வேஷ் மன்னனிடம் விடைகேட்டார். மன்னன் தர்வேஷைத் தமது அண்டையில் அழைத்து "வைத்தியரே? வரவேண்டும், தாங்கள் யாது கேட்கிறீர்கள்?" என்று வினவலுற்றுன். அதற்கு

தர்வேஷ் :—நாம் உம்மிடம் எதையும் வெகுமதியாகப் பெற விரும்பவில்லை.

மன்னன் :—(பிரமிப் படைந்து) ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

தர்வேஷ் :—எங்களுக்குத் தேவையில்லை.

மன்னன் :—தங்களது திருநாமம் யாது?

தர்வேஷ் :—நமது பெயரா?.....................

மன்னன் :—என்ன? என்ன? தங்களது பெயரைக் கூறுவதற்கு நானுங்கூடவா உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறேன்?

தர்வேஷ் :—நான் எகிப்து பாலஸ்தீனத்திற்கு அரசனுகிய ஸலாஹுத்தீன்.

மன்னன் :—நிஜமாக, ஸலாஹுத்தீனு? பாலஸ்தீனத்தின் அரசரா?

ஸலாஹுத்தீன் :—ஆம், எனது கடமையை நான் நிறைவேற்றினேன். இவ்விதமான கஷ்டகாலங்களில் எனது பகைவர்களுக்கு நான் உதவி செய்வது மனிதத்துவத்திற்கு ஏற்பட்ட பொதுக்கடமை. இப்பொழுது தாங்கள் குணமடைந்து விட்டீர்கள். போர்க்களத்தில் தாங்கள் என்னை எதிர்க்கலாம். நான் தங்களுடன் தனிமையாகவே சண்டை செய்வேன்.

இப்பொழுது, அஞ்சா நெஞ்சனுன முதலாவது ரிச்சர்டு திகைத்தும் போயினன். யாது செய்வதென்று தோன்ருதவனுக ஸ்தம்பித்தனன். சுல்த்தான் ஸலாஹுத்தீன் இதற்குள்ளாகத் தமது ராணுவ விடுதிக்கு வந்து சேர்ந்து விட்டார்.

நமது முன்னோர்களாய பெரியார்களின் உதாரகுணம் இவ்வாறிருந்தது. முற்காலத்திலிருந்த முஸ்லிம்களின் செய்கைகள் இது போன்றவைகளாகும். அக்காலத்திலிருந்த இஸ்லாமிய அரசர்களின் நடத்தை இப்படி இருந்தது. முஸ்லிம்களாகிய நாம் இக்காசினியில் உயிருள்ள ஒருவர்க்கத்தினராக இருந்த போது அக்காலத்தைய முஸ்லிம்களது நடவடிக்கைத் தங்கள் பகைவர்களுடன் மேற்கூறியவாறு இருந்தது. ஆனுல், இன்ருே, அச்சோ நமது சகோதரர்களை அவமானப் படுத்துவதிலும், கேவலப்படுத்துவதிலும், தாழ்த்துவதிலும், அழிப்பதிலும் முனைந்திருக்கின்றன. இச்சம்பவத்தைப் படித்த பின்னரேனும் பாடங்

கற்றுக் கொள்வோர் எவருமுண்டோ? நம்மவர் ஒவ்வொருவரும் தம்மை வீரனாகவும், திடசித்தனாகவும், மனு நீதி தவறாதவனாகவும் ஆக்கிக் கொள்ள முயலல் வேண்டும். சுல்த்தான் ஸலாஹுத்தீனுடைய நற்குண நன்னடத்தைகளைப் போல் தங்களது நற்குண நன்னடக்கைகளைத் திருத்திக் கொள்ளும் நாள் எந்நாளோ? அன்றைய தினம் தான் முஸ்லிம்களது நக்ஷத்திரம் மிகப் பிரகாசமாக ஒளி வீசும்.

பர்மாவில் இஸ்லாம்

இந்தியன் எம்பயரிலுள்ள மாகாணங்கள் ஒவ்வொன்றிற்கும் பர்மா மாகாணத்துடன் நெருங்கிய சம்பந்த மிருந்து வருகிறது. பர்மாவைத்தவிரவுள்ள இதர இந்திய மாகாணங்களுக்குள் இத்தனை சம்மந்தமில்லை. அப்படியிருந்தும் இந்தியாவிலுள்ள படித்த வகுப்பினர் பர்மாவைப்பற்றி மிகவும் குறைவாகவே அறிந்து கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமென்னவெனில், இந்தியாவிலுள்ள சுதேச பாஷைப் பத்திரிகைகளில் மேனாட்டின் சமாச்சாரங்கள் மிகவும் அதிகமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால், நாம் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேனாடுகளைப் பத்திரிகைகளின் மூலம் பார்த்துக்கொள்கிறோம். ஆனால், இந்தியாவிலுள்ள இஸ்லாமியக் கல்விச்சாலைகள், பத்திரிகைகள், உலமாக்கள் ஆகியவர்களுக்கு அதிகலாபமும் பிரயோஜனமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற பர்மா, மலாயா முதலிய நாடுகளையும் இதரநாடுகளையும் பற்றி மிகவும் சொற்பமாகவே விஷயங்கள் தெரிந்து கொள்ளப்படுகின்றன. இந்தியாவிலுள்ள படித்த வகுப்பு முஸ்லிம்கள் பர்மாவைப்பற்றி மிகவும் குறைவாகவே கவனம் செலுத்துகின்றனர். ஆனால், பர்மா, மலாயா முதலிய நாடுகளைப்பற்றி இந்திய முஸ்லிம்கள் அதிகப் கவனம் செலுத்த வேண்டிய தவசியமிருந்து வருகிறது. மேலும், முஸ்லிம்கள் இஸ்லாமியப் பிரசாரம், தப்லீக் முதலியவைகள் செய்வதற்கு இப்பூலோகம் முழுவதிலும் இத்தேசத்தைப் பார்க்கினும் அதிகமான வசதிகள் பொருந்திய தேசம் வேறு ஒன்று மில்லை என்று சொல்லலாம்.

பர்மா முஸ்லிம்

இத்தேசத்தில் முதல் முதலாக எந்த தேசத்து முஸ்லிம்கள் குடியேறினர் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. இது சம்மந்தமான சரித்திரமும் பர்மாவில் இல்லை. ஆனால், இங்கு அறபியர்கள் தாம் ஆரம்பத்தில் வந்தனர் என்று சில படித்தவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். இஸ்லாத்தின் ஆரம்பக்காலத்தில் அறபியர்கள் மலாயா முதலிய நாடுகளில் வியாபாரத்தின் நிமித்தமாக வந்த சமாச்சாரம் தெரிய வருகிறது. இவர்கள் மூலமாக அங்கு இஸ்லாம் பரவிற்றென்பதிலும் சந்தேகமில்லை. இவ்வறபியர்கள் பர்மாவிற்கும் வந்திருக்கக் கூடும். மேலும், இங்குள்ள வஸ்துக்களில் அநேகமானவைகளுக்கு அறபிப் பெயர்களே இருந்து வருகிறது. தவிரவும், மொகலாய அரசாங்க மிருந்த ஆரம்பகாலத்தில் முஸ்லிம்களது கூட்டத்தினர் கரை மார்க்கமாக பர்மாவின் தலை நகரான மாண்டலேயில் வந்து குடியேறினர். இவர்கள் இங்கு விவாகம் முதலியவைகளைச் செய்துகொண்டு நிரந்தரமாகக் குடியிருந்து விட்டனர். இவர்களது சந்ததியினர்தான் மாண்டலேக்கு அக்கம் பக்கத்தில் ஜேர்பாதி என்ற பெயரால் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், இந்த ஜேர்பாதிகள் தங்களுடைய மூதாதையர் யார் என்பதைப்பற்றி நன்கு தெரிந்து கொள்ளவில்லை.

ஜேர்பாதி முஸ்லிம்கள்

ஜேர்பாதி முஸ்லிம்களது உடையும் நாகரீகமும் பர்மாவிலுள்ள அசல் சுதேசிகளைப் போலவே இருந்து வருகின்றன. ஜேர்பாதி ஸ்திரீகள் தங்கள் தலையில் துப்பட்டாக் கட்டிக் கொள்ளுதல் அல்லது துணிபோட்டுக்கொள்ளுதல் ஆகியவைகளைக் குறைவாகவே இன்னமும் மதித்து வருகின்றனர். இவர்களது பாஷையும் கூட பர்மிய பாஷைதான். என்றாலும், தங்களது பாஷையில் அறபிப் பதங்களை அதிகமாக

கலந்து பேசுகின்றனர். அல்லாஹ்-றஸூல் ஆகியவர்களது பெயர்களையும் அதிகமாகப் பிரஸ்தாபிக்கின்றனர். பர்மியப் பாஷையில் இஸ்லாமிய கிரந்தங்களில்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் அவைகள் இல்லாதிருப்பதற்கே ஒப்பாக இருக்கின்றன. ஆதலால், அவர்கள் இஸ்லாமியக் கல்விகளைப்பற்றிப் பொதுவாக ஒன்றுந்தெரியாதவர்கள் என்னலாம். இந்தியாவிலுள்ள உலமாக்கள் பர்மாவிற்கு வருகின்றனர்; அவர்கள் இங்கு வந்து நன்மையடைவதற்குத் தக்க கைமாறு அவர்களுக்குச் செய்யவேண்டும் என்று நினைத்திருந்தால் பர்மிய முஸ்லிம்களுக்கு அவர்கள் பல விதத்திலும் அநேகந் தொண்டுகள் புரிந்திருக்கலாம். பர்மிய முஸ்லிம்களான ஜேர்பாதிகளில் இஸ்லாமிய உணர்ச்சிக்குக் குறைவில்லை. மாண்டலே நகரில் மட்டிலும் அவர்கள் 80 மஸ்ஜிதுகளைக் கட்டி இருக்கின்றனர். இதனை அல்லாமலும் இதர பல இடங்களில் மிகக்கம்பீரமான அநேகம் மஸ்ஜிதுகள் அவர்களால் கட்டப் பட்டிருக்கின்றன.

திரு குர்ஆன் போதனை.

ஜேர்பாதிகளில் திருகுர்ஆன் ஓதுவித்தல் போதியஅளவிற்குப் பரவிஇருக்கிறது. ஹஜ்ஜு முதலிய கடமைகளிலும் அவர்கள் போதியளவு பங்கெடுத்துக் கொள்கிறார்கள். அசல்பர்மியரிடம் மதத்துவேஷம் இயற்கையாக இல்லாமல் இருப்பது ஒருபக்கல் இருக்க, அவர்கள் முஸ்லிம்களை நன்கு மதிக்கின்றனர். எனவே, இத்தேசத்தில் முதலாவதாக முகலாயர் காலத்தில் முஸ்லிம்கள் கரைமார்க்கமாக வந்த பிறகு சில காலம் வரை என்ன நடந்தது என்பதைப் பற்றிய சமாச்சாரம் தெரியவில்லை. அப்புறம் பிரிட்டிஷார் பர்மாவைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இருந்த பர்மிய அரசரின் காலங்களில் முஸ்லிம்கள் போதியளவிற்கு ஸூறத்து, சிட்டகாங், தென்னிந்தியா முதலிய நாடுகளிலிருந்து இங்கு வியாபாரத்தின் நிமித்தம் வந்திருக்கிறார்கள். இம்முஸ்லிம்களுக்கும் பர்மியருக்குமிடையிலுள்ள சம்மந்தம் மிகவும் நேசப்பான்மையாகவே இருந்ததாகவும், இஸ்மாயில் என்ற பெயருள்ள ஸூரத்து முஸ்லிம் ஒருவர் பர்மிய அரசர் ஒருவருக்கு மந்திரியாக இருந்ததாகவும் தெரியவருகிறது. இவர் இங்கு விவாகம் செய்து இங்கேயே இருந்துவிட்டார். இவரது சந்ததியினரும் இப்பொழுது மாண்டலேயில் இருந்து வருகின்றனர். அநேகம் முஸ்லிம் வியாபாரிகள் பர்மிய ஸ்திரீகளை விவாகம்செய்து கொண்டு இங்கே குடியிருந்து வந்திருக்கிறார்கள். இவர்களது சந்ததியினரும் தேசமெங்கும் பரவியிருக்கின்றனர். இவர்களும் தங்களை ஜேர்பாதி என்றே கூறிக்கொள்கின்றனர். இவர்களில் இஸ்லாமியக் கிரியைகளும் ஆசாரங்களும் மேலே சொல்லப்பட்ட ஜேர்பாதி வகுப்பினரைப் பார்க்கினும் அதிகம் பரவி இருக்கின்றன.

பர்மாவில் உருதூ அல்லது இந்துஸ்தானி

பிரிட்டிஷார் பர்மாவைக் கைப்பற்றிய பின்னர் ராணுவப் போர் வீரர்கள் மூலமாக பர்மாவில் உருதூபாஷை பரவிற்றென்பதுதான் இங்குள்ளவர்களது பொது அபிப்பிராயம். இது ஓரளவு சரி என்றுதான் புலப்படுகிறது. என்றாலும், முஸ்லிம்கள் எந்த நாட்டைத் தங்களது வாசஸ்தலமாகச் செய்து கொள்கின்றனரோ அந்த நாட்டில் தங்கள் நாகரீகம், ஆசாரம், ஈமான் ஆகியவைகளின் ஜோதியையும் பரவச்செய்து கொண்டே இருந்தனர் என்பதையும் மறுக்க முடியாது. இங்கு பிரிட்டிஷ் அரசாங்கமேற்படுவதற்கு வெகு காலத்திற்குமுன்பிருந்தே முஸ்லிம்கள் குடியேறி வசித்து வருகின்றனர். ஆதலால், அவர்கள் உருதூ பாஷையை இங்கு பரவச்செய்திருக்கக்கூடும். எவ்வாறாயினும், பர்மாவில் உருதூ பாஷைக்கு இவ்வளவு வியாபகம் ஏற்பட்டிருப்பதானது உருதூ பாஷைக்குள்ள செல்வாக்கைப்பற்றி நாமெல்லோரும் பெருமை கொள்வதற்குத் தகுதியாயிருக்கிறது. முகலாய அரசாங்கம் உருதூ பாஷைக்கு விதைவிதைத்ததென்றால் பர்மா தேசம் அதற்கு ஜலம் வார்த்ததென்று கூறலாம். இங்குள்ள பெரும்பாலான நகரங்களிலும் முக்கியமாக இரங்கூனிலும் உருதூபாஷை பொதுபாஷையாகவே இருந்துவருகிறது. எந்த தேசத்துக்காரராக இருந்தாலும் சரி நகருக்குள் பிரவேசித்துவிட்டால் அவர் உருதூ பாஷையைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகி விடுகின்றது. கடைத்தெருவிலுள்ள எந்த வஸ்துவை விலைக்கு வாங்க வேண்டுமாயினும் உருதூ பாஷையில்தான் சம்பாஷணை செய்யவேண்டும். அந்நியதேசத்து ஜனங்களும், இந்தியாவிலுள்ள பற்பல நாட்டு ஜனங்களும் பர்மாவில் கலந்திருப்பதுபோல இந்தியாவிலுள்ள வேறெந்த நகரிலும் இன்று வரை கலந்துகொள்ள முடியவில்லை. இதன்

காரணமாகத்தான் உருதுபாஷை மிக மிகத் தூர தேசங்களிலெல்லாம் பரவிவிட்டது.

மதராஸ், காக்கிநடா, மதுரை, நாகூர் முதலிய இடங்களிலுள்ளவர்கள் பர்மாவிற்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதன் காரணமாக மிகச் சுலபமாக அவர்கள் உருதுவைக் கற்றுக் கொள்கிறார்கள். இன்று அப்பிரதேசங்களிலுள்ள எந்த கிராமத்திற்குச் சென்றாலும் உருதுபாஷை தெரிந்தவர்கள் சுலபமாக அகப்படுகிறார்கள். பர்மாவில் குடியேறி இருக்கிற சிட்டகாங் வாசிகளிற் பெரும் பகுதியினருக்கு உருதுபாஷை நன்கு தெரியும். அவர்கள் உருதுபாஷையைத் தெரிந்துகொண்டது மட்டுமில்லாமல் அதற்கு உதவிக்காரர்களாகவு மிருக்கிறார்கள். மலையாளத்திலும்கூட இதே பர்மாவின் காரணமாக உருதுபாஷை போதியளவிற்குப் பரவி இருக்கிறது. காக்கிநடா, மதராஸ் ஆகியவைகளுக்கு பர்மாவினுடன் இருக்கிற விசாலமான சம்மந்தங்களையும் உருதுபாஷையின் ஊழியத்தையும் பற்றித் தனிவியாசம் எழுதுவதென்றால் அது மிகவும் வீண் வியாசமாகவே இருக்கிறது. இங்கு சீனர்களும் அதிகமாக வசித்து வருகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் உருதுபாஷையை நன்கு பேசுபவர்களாகவும் தெரிந்தவர்களாகவும் இருந்து வருகின்றனர். இங்குள்ள ஐரோப்பியரும்கூட ஹிந்துஸ்தானி பாஷையிலேயே தொழில் நடத்தி வருகின்றனர்.

அநித்திய உலகின் அநித்தியத்தன்மை

இவ்வுலகமும், இவ்வுலகத்தைய அரசாங்கமும் எத்துணை அற்பமானவை என்பதும், அரசனாயினும் அற்ப கூலிக் காரனாயினும் மரணாவஸ்தையின் போழ்து இவ்வுலகத்தைப் பற்றி எவ்வித அபிப்பிராயங்கொள்கின்றனர் என்பதும் அடியிற்கண்ட சிலவாக்கியங்களால் நன்கு தெரியவரும். இவ்வாக்கியங்களை, உலகை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்ய நினைத்து வாகைமாலை சூடிய மாபெரும் சக்கிரவர்த்திகள் கூறி இருக்கின்றனர். எனவே, உலகாதாயத்தைப் பெரிதென மதித்து மார்க்கத்திற்கும் சமூகத்திற்கும் தீங்கு செய்து தங்களது மறுவுலகவாழ்க்கையை மறந்துகிடப்போர் இவைகளிலிருந்தேனும் பாடங்கற்றுக் கொள்வார்களாக. (ப-ர்.)

மகா அலக்ஜாண்டர்.

மகா அலக்ஜாண்டர் கிரீஸ்தேசத்தை அரசாட்சிபுரிந்தவர். இந்தியாவிலும்கூட இவர் பெரும்படையுடன் வந்து வெற்றிக் கொடி நாட்டிச் சென்றார். உலகமெல்லாம் இவரது பெயரைக்கேட்டு நடுங்கிற்று. பெரிய பெரிய ஏகாதிபத்தியங்களெல்லாம் இவரது படையெடுப்பைத் தடுக்கமுடியாமலழிந்தன. இவரும் ஒரு நாளில் மரணமடைய வேண்டியவரானார். இவர் மரணப் படுக்கையில் இருக்கும் போது கூறிய வார்த்தைகள் வருமாறு:—

"நான் உலகை ஜெயிக்க விரும்பினேன். ஆனால், என்னை மரணம் ஜெயித்துவிட்டது. நான் எத்தனை மனிதரது இரத்தத்தைச் சிந்தி இருப்பேன் என்பதையும், நான் எனது மறு உலக வாழ்விற்காக எதைக்கொண்டு போகிறேன் என்பதையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அன்னே! ஒரு சாமான்ய மனிதன் இவ்வுலகில் ஜீவித்திருக்கும் போது அடையக்கூடிய சாமான்ய அமைதியையுங்கூட நான் என் வாணாளின் ஒருமுறையேனும் அடைந்தேனில்லை. நான் உலகை ஜெயிக்காமலிருந்தது மிகவும் நல்லதாகிவிட்டது. அவ்வாறு ஜெயித்திருப்பேனாயின் எனது பாவங்களை இன்னும் அதிகமாகப் பெருக்கிக்கொண்டுதான் இவ்வுலகைவிட்டு யானகலவேண்டியதிருக்கும். என்னை ராணுவ உடையில் புதைக்கவேண்டும். யான் ராணுவ வீரனாக இருந்தேன். இன்னமும் ராணுவ வீரனாகவே இருந்து வருகிறேன்."

நெப்போலியன் போனபார்ட்

சாமான்ய குடும்பத்தில் பிறந்து பிரான்ஸ் தேசாதிபதியாகி, ஐரோப்பா முழுவதையும்

போரில் புறங்காட்டி ஓடச்செய்து அழியாப் புகழ் பெற்ற நெப்போலியன் போனபார்ட் தனது அந்திய காலத்தில் கூறிய வார்த்தை கள் மகா அலக்ஜாண்டருடைய வார்த்தைக ளைப் பார்க்கினும் அதிகமான வருத்தத்தை யும் தோல்வியையும் தெரிவிக்கிறதாக யிருக் கிறது. அவர் கூறியவைகள் வருமாறு :—

"நம்பிக்கையிழத்தல், இயலாதகாரியம் என நினைத்தல் மிகப் பெரிய பாவம் என்ப தாக யான் கருதி இருந்தேன். ஆனால், என் னைப்பார்க்கினும் அதிகமாக நம்பிக்கை இழந்த மனிதன் இவ்வுலகில் வேறு யாருமில்லை. நான் உலகில் இரண்டு வஸ்துக்களை விரும்பினேன். ஒன்று அரசாங்கத்தை, மற்றொன்று அன்பை. அரசாங்கம் எனக்குக் கிடைத்தது. ஆனால், அது எனக்கு உதவியளிக்கவில்லை. அன்பை நான் வெகு தூரம் தேடினேன். ஆனால் அதனை நான் ஒருபோதும் அடைய முடிய வில்லை. நான் யாரை நேசித்தேனோ அவள் எனக்குத் துரோகம் செய்தாள். அன்புக்குப் பதில் துரோகம்தான் போலும். ஒரு மனித ரது வாழ்க்கையின் நோக்கம் எனது வாழ்க்கை யின் நோக்கத்தைப் போலிருக்குமாயின் அத் தகைய வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை என்று தான் நான் கூறுவேன். இயலாமலாகுதல்தான் உலகம் என்பது என் அபிப்பிராயம். இயலா மைதான் உலகம் என்ற பெயரால் விளங்கு கிறது."

நெப்போலியன் என்ற பெயரைக்கூறிய மாத் திரத்தில் ஐரோப்பாவிலுள்ள தொட்டில் குழந்தைகளெல்லாம் வாயை மூடிக்கொள்ளும். உலகச் சரித்திரத்தில் அவனது கீர்த்தி என் றும் மங்காததாக இருந்து வருகிறது. என் றாலும், முடிவில் அவன் கூறிய பொன் மொழி கள் அவனது வாணாள் முழுவதும் அனுப வத்தில் தெரிந்து கொண்டவைகளாகும். இதனைப் பார்த்தேனும் நம்மவர் இவ்வுலக வாழ்வைச் சதமென நம்பி ஏமாற்றமடையா திருப்பார்களாக.

ஹாரூனுர் ரஷீத்.

ஹாரூனுர் ரஷீத் என்பவர் பகுதாதை அரசாட்சிபுரிந்த அப்பாஸிய்யா வம்சத்து கலீ பாக்களில் மூன்றாவது அரசர். இவர் இஸ்லா மிய உலகம் முழுவதற்கும் ஏகச்சக்கிரவர்த்தி யாக இருந்தார். இப்பொழுது ஐரோப்பியர் இதர கண்டங்களிலுள்ளவர்களை ஆட்சிபுரிவது போல், ஆசியா வாசியான இவர் ஐரோப்பியரை ஆட்சி புரிந்தார். இவர் வாள் வலிமையுடன் பேனுவலிமையும் பெற்றவர். இவர்கள் காலத் தில் அப்பாஸிய்யா வம்சத்து அரசாங்கத்தின் சூரியன் உச்சஸ்தானத்தை அடைந்தது. தோல்வி என்ற பெயரை இவர் காதாலும் கூட கேள்விப்பட்டிருக்க மாட்டார். இவர் காலத்தில் நாடெங்கும் கல்வி அபிவிருத்தியா யிற்று. ஆதலின் இவரது கீர்த்தி உலகில் மங்காமல் இன்னமும் இருந்து வருகிறது. இன்ஷா அல்லாஹ் இனி என்றும் இருந்து வரும். இப்படிப்பட்ட சக்கிரவர்த்தியானவர் தூஸ் என்ற நகரில் நோய்வாய்ப்பட்டார். இந்த நோய்தான் இவரை இவ்வுலகை விட்ட கற்றிற்று. மரணம் இவரைச் சூழ்ந்துகொண் டது. இவர் எந்த அறையில் நோய்வாய்ப் பட்டிருந்தாரோ அதே அறையில் தமக்கு சமாதிக் குழி தோண்டும்படிச் செய்தார். சமாதிக் குழி தயாரான பின்னர் திருகுர் ஆனை மனனம் செய்த சில ஹாபிஸ்கள் கப் ருக்குள்ளிறங்கி திருகுர் ஆன் ஓதி கத்தம் செய் தனர். ஹாரூன் ரஷீத் தனது கட்டிலை அக் கப்றின் அண்டையில் வைக்கச் செய்து அதில் படுத்துக் கொண்டே தம்மை அடக்கு வதற்காக தயார் செய்யப்பட்ட கப்றை பார்த் துக் கொண்டிருந்தார். இதுதான் ஹாரூனுர் ரஷீதுடைய கடைசி நேரம். இந்நேரத்தில் அவர் கூறிய வார்த்தைகள் வருமாறு :—

"ஜனங்களே! நீங்கள் சாக்ஷிகளாயிருக்க வேண்டும். நான் அல்லாஹுதஆலாவின்மீது ஈமான் என்னும் விசுவாசம் கொண்டுள்ளேன். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அவனது தூதர் என்பதை மனமுவந்து உண்மையுடன் ஒப்புக் கொள்கிறேன். நான் பாவமே யுருவாய மைந்தவன். என் வாணாள் முழுவதிலும் "துக்கம்" என்பது இல்லை என்று ஏற்படுத்தி விடுவதற்காக முயன்றேன். என்றாலும், துக் கத்தை இல்லை யென்று ருஜுப்பண்ண என்னா லாகவில்லை. நான் அளவற்ற துக்கமும் விசன மும் கூடிய ஜீவியத்தில் தான் வாழ்ந்தேன். என்னை அரசாங்க அலுவல்களும், அரசாங்கத் தின் பாக்கியங்களும் அல்லாஹுதஆலாவை யும், அவனது மதத்தையும் மறக்கும்படி அடிக் கச் செய்தன. இறைவன் என்னை மன்னிப் பானாக! நான் கவலையில்லாமல் வாழ்ந்த நாள் ஒன்றுகூட என் ஜீவியத்தில் எனக்குக் கிடைக்க

வில்லை. இப்பொழுது நான் மரணத்தின் கரையின் மீதிருக்கிறேன். மரணமானது உங்களெல்லோரையும் விட்டு என்னைத் தனியே பிரித்துவிடும். இப்பொழுது வாயைத் திறந்துகொண்டு இதோ என் முன்னிருக்கிற இந்த கப்ருனது என் உடலை விழுங்கிவிடும். இதுதான் ஒவ்வொரு மனிதனும் கடைசியில் சேருமிடமாகும். ஆனல், மனிதர் என்னைப் போலவே தனது சேருமிடத்தைப்பற்றி அஜாக்கிரதையாக இருக்கிறார்கள்.''

இவ்வார்த்தைகளைக் கூறியபின் அரசாங்க நிர்வாக சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றிய தமது ஆலோசனைகளைக் கூறியபின் இவ்வுலகில் இனி என்றென்றைக்கும் பேசாவண்ணம் கண்ணை மூடிக்கொண்டார்.

அப்துல் மலிக்குப்னு மர்வான்

பனூஉமய்யா வம்சத்து கலீபாக்களில் அதிகப் பலமும் கியாதியும் பெற்ற அரசர் இவரேயாவர். இவரது ஆட்சியில்தான் ஹஜ்ஜாஜுப்னு யூஸப் கவர்னர் வேலை பார்த்தார். ஹஜ்ஜாஜுப்னுயூஸுப்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது குடும்பத்தினரையும் அவர்களது அபிமானிகளையும் அறபி நாட்டை விட்டு ஓடச் செய்தவர். இவர் செய்த கொடுமைகளைப்பற்றி இங்கெழுத முடியாது. எனவே, அப்துல் மலிக்குடைய ஆட்சிகாலம் முஸ்லிம்களில் ஒரு சாராருக்கு கடுபிடியாகவே இருந்தது. இப்படிப்பட்ட அரசர் தனது அந்திய காலத்தில் கூறிய பொன் மொழிகள் வருமாறு:—

"என்னை நான் சந்தோஷமுள்ளவனாக ஆக்கிக் கொள்ளவேண்டுமென்று நான் பிறந்தது முதல் ஆசை கொண்டிருந்தேன். ஆனல், எனக்கு ஒரு க்ஷணம்கூட உண்மையான சந்தோஷம் உண்டாகவே இல்லை. அரசனாக இருத்தலானது மனிதனது முன்னேற்றத்தின் கடைசி ஸ்தானம் என்று நம்பி இருந்தேன். இந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் நான் அரசாங்கச் சுமையை ஏற்றுக்கொண்டேன். ஆனல், என்னுடைய இந்த நம்பிக்கையில், எனக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. நான் இதுவரை செய்ததையும், செய்து கொண்டிருந்ததையும் பற்றி நான் வெட்கமடைகின்றேன். ஆனல், நான் வெட்கமடைய வேண்டிய காலம் தவறி விட்டது. எனவே, நான் தோல்வியடைந்தவனாகவும், மனவிருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதவனாகவும் இருக்கிற நிலைமையிலேயே இவ்வுலகை விட்டுச் செல்கின்றேன். எனக்காக நான் தெரிந்தெடுத்துக்கொண்ட பாதையானது தவறான பாதையாக இருக்கிறது என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிய வருகிறது''.

இவரது கவர்னர்தான் கஃபத்துல்லாவை இடித்துத் தள்ளினர். இவர் கூறிய இவ்வார்த்தைகளிலிருந்து இவர் தமது குற்றத்தையுணர்ந்து விட்டார் என்பது விளங்குகிறது. இதற்குப் பிராயச்சித்தமாக இருக்கும் பொருட்டுத்தான் இவர் தமக்குப்பின் கலீபாவாக இருக்கும்படி உமறுப்னு அப்துல் அஜீஜைத் தெரிந்தெடுத்தார் போலும்.

மன்ஸூர் அப்பாஸி

பகுதாதைத் தலைநகராக்கி அரசாட்சி புரிந்த அப்பாஸிய்யா வம்சத்து அரசர்களில் இரண்டாவதானவர். இவர் காலத்தில் தான் ஹஜ்றத் இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்கள் சிறையிலடைக்கப்பட்டு, பாஷாணம் அருந்தக் கொடுக்கப்பட்டார்கள். இவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சிறிய தந்தையரான ஹஜ்றத் அப்பாஸ் (றலி.) அவர்களது சந்ததியினராக இருந்தும், நாயகம் (ஸல்.) அவர்களது செல்வப் புதல்வியான ஸெய்யிதத்துன்னிஸா ஹஜ்றத் பாத்திமத் துஜ்ஜஹ்றா (றலி.) அவர்களது சந்ததியினரைக் கருவறுத்தார். இவர்கள் பனூஉமய்யா வம்சத்தினரிடமிருந்து வாள்பலத்தால் அரசாங்கத்தைக் கைப்பற்றியவர்களாதலின் அவ்வம்சத்திலிருந்த கலீபாக்களது கப்ருகளையும் கூடத் தோண்டி உக்கிப்போன எலும்புகளை அவமதித்தனர். என்றாலும், இஸ்லாமிய அரசாங்கத்திற்கு அந்நியரிடம் அதிகம் செல்வாக்கையும் மதிப்பையும் உண்டுபண்ணி வைத்தார். இவர் தமது மரணத்திற்குமுன் கூறிய மொழிகள் மற்றவர்களுக்குப் படிப்பினையாகவும் உபதேசமாகவுமிருக்கின்றன. அவை வருமாறு:—

"நான் பலமுறை தடுமாற்றங்களடைந்தபின் அரசாங்கத்தை அடைந்தேன். ஆனல், நான் உலகத்திற்காக மதத்தை விற்றுப் போட்டேன் என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிய வருகிறது. நான் இனிமேலும் உயிர் வாழ முடியுமாயின் இவ்விதமான அரசாங்கத்தை நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுவேன். இந்த அரசாங்கம்தான் என்னை நேர்

மையைவிட்டு அகற்றி விட்டது. ஒரு நன்மையைச் சம்பாதிப்பதானது இவ்வரசாங்கம் முழுவதைப் பார்க்கினும் சிறந்ததாக இருக்கிறது. ஆனால், மரணம் என்னைத் தனது பஞ்சாவினுள் அழுத்திக் கொண்டிருக்கும்போது தான் இவ்விஷயம் எனக்குத் தெரிய வந்திருக்கிறது''.

புருஷனைக் கடத்திச் சென்றதாக வழக்கு

பெண்களைக் கடத்திச் சென்றதாக வழக்குகள் நடப்பதை நாம் இந்தியப்பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். நமது இந்திய நாட்டில் பெண்களை ஆடவர்கள் அடித்துக் கொண்டுபோவது போல இங்கிலாந்தில் ஆடவர்களை ஸ்திரீகள் அடித்துக்கொண்டு போவதாக பிரிட்டிஷ் பத்திரிகைகளிலிருந்து தெரிய வருகிறது. அங்குள்ள கோர்ட்டுகளில் இத்தகைய வழக்குகள் அதிகமாக விசாரணைக்கு வருகின்றன. இவ்வித வழக்குகளில் ஒன்றின் விபரத்தைக் கீழே தருகிறோம்.

மேரி ஷெப்பீல்ட் என்பவள் லண்டனிலுள்ள பிரபல நாவலாசிரியைகளில் ஒருத்தி. அவள் சமீப காலத்தில் லண்டனிலுள்ள லூயிஸ் ஜாக்ஸன் என்ற ஒரு கட்டழகியின் மீது ஒரு வழக்குத் தொடர்ந்தனள். இவ்வழக்கு பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

" லூயிஸ் ஜாக்ஸன் என்பவள் எனது ஆசைகளை எல்லாம் அழித்தவள். அவள் எனது கணவனை என்னை விட்டுக் கடத்திச் சென்று விட்டனள். முதலில் எனது கணவன் என்பால் அதிக பக்ஷமாக இருந்தனன். ஒவ்வொரு காரியத்திலும் எனது இஷ்டத்தை முதன்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தனன். ஆனால், இப்பொழுது அவன் என்பால் கொஞ்சம் கூடக் கவனிக்கிறதே இல்லை '' என்பது அவ்வழக்கின் சாராம்சமாகும்.

வழக்குப்பதிவானவுடன் சட்டப்படி மாஜிஸ்டிரேட் லூயிஸ் ஜாக்ஸனுக்கு சம்மன் பிறப்பித்து, உண்மையை விசாரித்தார். லூயிஸ் ஜாக்ஸன் என்பவள் ஒரு பாவமும் அறியாதவள் போல் பின் வருமாறு வாக்கு மூலம் கொடுத்தனள் :—

"எனது வயது தற்போது 22 தான் பூர்த்தியாகி இருக்கிறது. நான் இவ்வுலகத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் கொஞ்சங்கூட அறியேன். காதல் என்பதற்கு என்ன அர்த்தம் என்பதுகூடத் தற்போது என் புத்திக்கு எட்டவில்லை. இவ்வித நிலைமையில் அனுபவமற்ற என்போன்ற ஒரு ஸ்திரீ அனுபவமும் கல்வியறிவுமுள்ள ஒரு ஆடவரை எங்ஙனம் கடத்திச் செல்ல முடியும்'' என்பதைத் தாங்களே சிந்தித்துப் பாருங்கள்.''

இதற்கப்புறம் கடத்திச் செல்லப்பட்ட கணவன் சாக்ஷியம் கூறினன். அது வருமாறு :—

" எனது புதிய மனைவி முற்றிலும் குற்றமற்றவள். அவள் என்னைக் கடத்திச் செல்லவே இல்லை. நான்தான் தானாகவே சென்றேன். எனது பழைய மனைவி எனது உணர்ச்சிகளை மதிக்கவில்லை. பிறருடைய அன்பை அவள் விலைக்கு வாங்கிக் கொண்டிருந்தனள். இதுதான் அவள் மீது நான் அன்பு கொள்வதை விட்டு விட்டதற்குக் காரணம்.''

வாதியாகிய பழைய மனைவி பின் வருமாறு சாக்ஷியம் கூறினள் :—

"இல்லை, அவர் கொடுத்த ஸ்டேட்மென்ட் தவறு. நான் எனது கணவனைப் போதியளவிற்கு நேசிக்கிறேன். ஆனால், ஒரு முறை மாத்திரம் ஒரே ஒரு நாளில் மட்டிலும் எனது சிநேகிதருடன் உல்லாசத்திற்காகச் சென்றிருந்தது உண்மை.''

இவ்விசாரணைக்குப் பின் மாஜிஸ்டிரேட் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார். கடத்திச் செல்லப்பட்ட கணவர் க்ஷேமமாகத் தமது 22 வயது மனைவியுடன் சென்றுவிட்டார்.

பெண் சுதந்திரம் என்று பெயர் வைத்துக் கொண்டு அந்நிய ஆடவரும் ஸ்திரீயும் ஒருவருக் கொருவர் கலந்து பேசவும், உல்லாச யாத்திரை செல்லவும் ஸ்திரீகளுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்றும், கோஷாமுறையை அனுஷ்டிப்பதானது ஸ்திரீகளது உரிமையைப் பறித்துக்கொள்வதாக இருக்கிறது என்றும் வாதம் செய்யும் கனவான்கள் நாகரீக முன்னேற்ற மடைந்த மேனுடுகளில் படித்த ஸ்திரீகளது ஒழுக்கமும், அவர்களை மணந்த கணவன்மார்களது அவஸ்தைகளையும் நன்குணர்ந்து கொள்வார்களாக. இதிலிருந்து ஸ்திரீ சுதந்திரத்தை நாம் மறுப்பதாக நினைக்க வேண்டாம். ஸ்திரீகளுக்கு அவர்களுக்கு நியாயமாகவும்கிரமமாகவும் இருக்க வேண்டிய சுதந்திரத்தை நாம் மறுக்கவில்லை. அவர்களுக்குத் தீங்கு செய்யக் கூடியதும் அவர்களது ஒழுக்கத்தை வழுக்கடையச் செய்வதுமான காரியங்களிலா அவர்களுக்கு உரிமை யளிக்கவேண்டு மென்று வினவுகின்ருேம். மேலும், இத்தகைய காரியங்களில் ஸ்திரீகளது இஷ்டப்படி நடக்க அனுமதிப்பதானது அவர்கள் பால் ஆடவருக்குள்ள அன்பைக் காட்டுகிறதா அல்லது அவர்கள் பாலுள்ள பகைமை யுணர்ச்சியைக் காட்டுகிறதா என்பதையும் சிந்திக்குமாறு வேண்டுகின்ருேம். ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் அளிக்கும் தன்மை ஐரோப்பாவில் இம்மட்டுடன் நின்றுவிட்டதென்று நினைக்கிறீர்கள். ஸ்திரீ சுதந்தரம் என்று உங்களை ஏய்க்கும் ஐரோப்பியரைப் பற்றிய மற்ருெரு விசேடத்தையும் இங்கு கவனிப்பீர்களாக:—

நிர்வாணிகள் விவாகம்

ஐரோப்பாவின் அழகிய நகரமாகிய பர்ரினில் நிர்வாணிகளது சங்கமொன்றிருக்கிறது. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் தங்கள் மனம் போன போக்கில் நடந்து கொள்வதற்காக ஒரு விடுதியை ஏற்படுத்தி இருக்கிருர்கள். அங்கு அவர்கள் ஒரு மாதம் அல்லது அதற்கதிகமான காலம் தங்கி இருந்து தனது மனேவிச்சையை நிறைவேற்றி இன்பம் நுகரலாம். இச்சங்கத்தில் விவாகமான தம்பதிகள் தான் அங்கத்தினராகச் சேரமுடியும். எத்தேசத்தாரும் இதில் அங்கத்தினராகச் சேரலாம். எவ்வித பேதமும் கிடையாது. இவ்வங்கத்தினர்கள் இவ்விடுதிகளுக்கு வரும்போது எல்லா ஸ்திரீ புருஷர்களது நாமங்களை எழுதித் திருவளச்சீட்டுப் போடப்படுகிறது. எந்த ஸ்திரீயின் பெயருடன் எந்த ஆடவரது பெயர் வருகிறதோ அந்த ஸ்திரீயும் ஆடவரும் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் கணவன் மனைவியரென்று கருதப்படுவர். அந்த ஸ்திரீயின் உண்மைக் கணவன் அவ்விடுதியில் அது போழ்து இருந்தாலும்கூட அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அவள்மீது கைபோடுவதற்கு அவனுக்கு உரிமை கிடையாது. இந்தக் குறிப்பிட்டகாலம் முடிவடைந்த பின்னர் தான் அவள் தனது அசல் கணவனுடன் தங்களது சொந்த இல்லத்திற்கு வரமுடியும். இவ்வித முறையில் கணவன்மார்களுடைய நிலைமை இப்படி இருக்கிறதென்பது மட்டுமல்ல, நிர்வாணியான தந்தை தனது நிர்வாணப்புதல்வியை, நிர்வாணியான சகோதரன் தனது நிர்வாணச் சகோதரியை இக்குறிப்பிட்ட காலத்தில் தற்காலக் கணவனின் காதலுக்கு ஒப்புவிக்க வேண்டிய தேற்படுகிறது. வெளிநாடுகள் இச்செயலைப் பலமாகக் கண்டித்தபின் பிரஞ்சு கவர்ன்மெண்டார் இச்சங்கம் சட்டவிரோதமென்று தீர்மானித்திருக்கின்றனர். இவ்விடுதியைச் சேர்ந்த அறுவர் கைதி செய்யப்பட்டு மிருக்கின்றனர்.

மேனுட்டிலுள்ள ஜனங்கள் மட்டு மில்லாமல் நாகரீகம்வாய்ந்த அரசாங்கமும் இத்தகைய காரியங்களைப்பற்றிக் கவலை கொள்ளாமல் அந்நிய நாடுகள் கண்டிக்கும்வரை இருந்தால், அப்புறம் ஜனங்களது நிலைமை எவ்வாறிருக்கும்? என்பதைச் சிந்தித்து பார்ப்பீர்களாக. நாகரீகம் என்பதற்கு மானம், வெட்கம் முதலியவைகளைத் துறந்து நிர்வாணிகளாகுவது என்பதுதான் அர்த்தம் போலும்.

இதுதான் மேனுட்டு நாகரீகத்தின் பயனுகும். கோஷா முறையை அனுஷ்டிக்காத தோஷத்தினுல் தான் இவ்வாருன கெடுதிகளெல்லாம் சம்பவிக்கின்றன. மாதர்கள் கோஷா முறையைக் கைக்கொண்டு அடக்கம் நாணத்துடன் வீடடங்கியிருப்பார்களாயின் இவ்வாருன சங்கங்களில் மெம்பர்களாகச் சேரவும், அன்னிய ஆடவர் முன் அம்மணமாக வரவும் முடியாதென்பது திண்ணம். ஆகவே நம்மவர் இதனை சிந்தையில்கொண்டு சிரப்புற்று விளங்குவார்களாக.

ஆரோக்கிய வாழ்க்கை

பொது ஆரோக்கிய விஷயமாக தெளிவான நோக்கங்களை அடையும் பொருட்டு, நமக்கு நன்ருய்த் தெரிந்ததும், ஆனல், அடிக்கடி கவனியாமல் விட்டு விட்டதுமான இரண்டு விஷயங்களை நாம் அறியவேண்டியதவசியம். முதலாவது, மனிதனுடைய புத்தியும், நடத்தையும் எவ்வளவு அபிவிருத்தியடைந்த போதிலும், அவன் முக்கியமாய் சில நிலைமைகளுக்கு ஆரம்பத்தில் ஒருமைப்பட்ட ஒரு ஜெந்து ஆவான். மற்ருென்று, நாகரீகத்தின் பலனுக, அந்த நிலைமைகள் சில மாறுதல்கள் அடைவதற்கு ஆவசியகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனதுபற்றி, நாம் யோசிக்கவேண்டிய விஷயம் யாதெனில், அவன் "ஜெந்துக் குணங்கள்" அதாவது, அவனுடைய தேகத்தொழில் சம்பந்தமான நடத்தை சீரழிந்து போகாமல் இருக்கும்படி எவ்வாறு இந்த மாறுதல்களைச் செய்யலாம்? என்பதே.

ஆதியில், மனிதன் அரைவாசி அம்மணமான ஜெந்து. அவன் வேட்டையாடியும் நிலத்தை உழுதும் தன் ஆகாரத்தைத் தேடிக்கொண்டிருந்தான். ஆரம்பத்தில் இந்நிலைமைகளுக்கு அவன் ஒற்றுமைப்பட்டிருந்தான். காலம் செல்லச்செல்ல, அவனுக்கு நாகரீகம் அதிகமாயிற்று. அதாவது, அதிகமாக உடைகளைத் தரிக்கலானுன்; வீடுகளிலும் கூட்டம் கூட்டமாகவும் வசிக்கலானுன்; தன்னுடைய ஆகாரத்தை வெயர்வை வடிய உழைத்து சம்பாதிப்பதை விட்டு, தன் மூளையை உபயோகித்து அதன் மூலமாய்ச் சம்பாதிக்க ஆரம்பித்தான். அவன் வாழ்வு இவ்வாறு மாறுதலடையவே, அதற்குத் தக்கபடி, அவன் பழக்க வழக்கங்களும் மாறுதலடைந்தன.

வாஸ்தவத்தில் சில மாறுதல்கள் உண்டாயிருக்கின்றன. ஆனல், அவை ஆரோக்கியத்திற்கு அனுகுணமான மாறுதல்கள் அன்று. அவற்ருல் ஏதோ சுகம் உண்டென்றும், அவை நாஜுக்கானவை என்றும் ஒரு தப்பபிப்பிராயத்தால் அவை ஏற்பட்டவை. மனிதன் உழைப்பதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜெந்து. தேகாரோக்கியமானது தேகத்திலுள்ள ஒவ்வொரு ஸெல்லும் சரிவரத் தன் தொழிலைச் செய்வதைப் பொருந்தி நிற்கும். ஒரு பாகத்திற்கு இது எவ்வாறு நிஜமோ, அவ்வாறே முழுதிற்கும் நிஜமாகும். வேலை செய்யாத மனிதன் ஒருபோதும் ஆரோக்கியமுள்ளவனுக இருக்கமாட்டான். குறைந்தது வெகுகாலம்வரை ஆரோக்கியமாக இருக்க முடியாது. சாதாரண மனிதனுக்கு தனது சக்தியை வெளிச்செலுத்த சில தொழில்கள் வேண்டும். அவை இராவிடில், கெட்ட வழிகளில் அதைச் செலுத்தும்படி நேரிடும். குடிகாரர்கள், சதா தூக்கித்துக் கொண்டிருப்பவர்கள், உன்மத்தம் பிடித்தவர்கள் ஆகிய இவர்கள் யாதொரு வேலையும் செய்யாமலிருப்பர்.

ஆனதுபற்றி, ஆரோக்கியமாகவிருப்பதற்கு மனிதன் உழைக்கவேண்டும். ஒருவனுக்குச் சரியான வரும்படி கிடைக்காவிட்டால், அவனை வேலை செய்யும்படி கட்டாயப் படுத்துவது சுலபமான காரியமல்ல. தேகத்திற்கும் மனதிற்கும் போதுமான தொழில்வேண்டும். இரண்டையும் புத்திசாலித்தனமாய்க் கலந்து செய்தால், தேகம், மனம் இரண்டும் ஆரோக்கியமாகவிருக்கும். ஒருவனுடைய தொழிலிலோ, உத்தியோகத்திலோ சாவகாஸம் அதிகமாக இருக்கும் பக்ஷத்தில், அவன் தனக்குப் பிரியமான ஒரு வேலையைத் தெரிந்துகொண்டு, அதை ஓய்வுநேரத்தில் செய்யும் பக்ஷத்தில் அது தன் தேகத்திற்கு ஒரு வியாயாமமாக இருப்பதுமன்றி, தன் மனதிற்கும் ஓய்வு கொடுக்கும்.

இயற்கையில் மனிதன் ஒரு அம்மணமான ஜெந்துவா, இல்லையா? என்பது ஒரு விவாதமான விஷயம். உடையை நாம் இப்போது தரிக்கிருேம். அது காயமாய் நம்மிடம் நின்றுவிட்டது. மிகைபடச் சொல்லல் என்னும் குற்றத்திற்குப் பயப்படாமல் நாம் எல்லோரும் இப்போது அதிக உடைதரிக்கிருேம் என்று ஒருவன் உறுதியாய்ச் சொல்லலாம். இந்த உடையினுலே சர்மத்தின் தொழில்கள் எவ்

வாறு பாதைப்படுகின்றன என்பதை இப்போது யோசிப்போம். சர்மமானது குளிருக்குச் சுருங்குகிறதென்பதும், வெப்பத்திற்கு விரிகிறதென்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயம். இந்த சக்தியானது மற்ற ஜீவிய சக்திகளைப் போலவே, நிலைத்திருப்பது சரியான வியாயாமத்தைப் பொருந்தி நிற்கிறது. மற்றவைகளைப்போல், இங்கும் அதைச் சரியாய் உபயோகிப்பதனால் தொழில் அதிகமாகிறது. அது நோய்ப்பட்டால், அதன் தொழில் போய் விடுகிறது. தப்புவழியில் உபயோகித்தால் வியாதி உண்டாகிறது. ஆனதுபற்றி, சர்மத்தின் சரியான தொழிலுக்கு இடைஞ்சல் இல்லாமலும், அது சரியான வியாயாமம் செய்வதற்குப் போதுமான வசதிகள் கொடுக்கும் பொருட்டும் நாம் உடுக்கும் உடையை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நமக்குத் தெரிகிறது.

ஆரோக்கியமுள்ள மனிதனுக்குப் போதுமான உடை யாதெனில், அது உஷ்ணக்கிரக மாறுதல்களினின்றும் தேகத்தைப் பாதுகாப்பதற்குப் போதுமானதா யிருப்பதுமன்றி, இரத்த ஓட்டம் சரிசமானதாக இருக்கும்படியாயும் செய்வதேயாம். அதாவது, ஒரு ஆரோக்கியமுள்ள மனிதனுக்கு உஷ்ணக்கிரத்தின் மாறுதல்களினின்றும் ஒருவனைக் காப்பாற்றுவதற்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவே அவனுக்குப் போதுமான உடையாகும். வெப்பம் மிகுதியாயுள்ள இந்நாட்டில் நாம் எல்லோரும் அளவுக்கு மிஞ்சி உடை தரிக்கிறோம். அதிக உடைதரிக்கக்கூடாது என்பதைப்பற்றிய வாதங்கள், குழந்தைகள் விஷயத்தில் மிகவும் முக்கியமானவை. குழந்தைகளுக்கு அதிக உடை போட்டால், அது அவைகள் ஆரோக்கியமாக வளருவதைத் தடுக்கும். ஏனெனில், அது சூரியகிரணங்களை மேலே படவொட்டாமல் தடுக்கின்றது. இந்த விதியை நாம் அனுசரிக்கும் பக்ஷத்தில் இப்போது குழந்தைகளுக்குக் காணும் கணநோய் என்னும் கொடிய வியாதி அவ்வளவு அதிகமாக இராது. உடை எவ்வளவு தேவை என்பதைச் சொன்னோம். இப்போது எம்மாதிரியான உடையைத் தரிக்கவேண்டுமென்பதை நாம் சொல்லுவோம். இது அவரவர்களுடைய பிரியத்தையும் பொருளாதாரத்தையும் பொருந்தியது. தென் இந்தியாவில் சீதோஷ்ணஸ்திதி சரிசமானமாயிருப்பதினால் நமக்குக் கம்பளம் தேவையில்லை. நமக்குப் பட்டும் பருத்தியும் தாம் ஏற்றவை. அவை சர்மத்திற்குத் தாராளமாய் காற்றோட்டத்தை வரவிடுகின்றன. இடுப்பு, மார்பு, கழுத்து இவ்விடங்களில் உடையை இறுக்கிக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி செய்வதால், ஜீவாதாரமான உறுப்புக்களை நாம் இறுக்கி விடுகிறோம்.

இப்போது, ஸ்நானம் செய்யவேண்டிய காரியத்தைக் குறித்து கொஞ்சம் சொல்வோம். இது அவசியம் என்பதை யாவரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். தினம் ஒருதரமாவது ஸ்நானம் செய்வது நலம். தென் இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதிக்கு, ஆரோக்கியமாய் வாழ்வதற்கு குளிர்ந்த நீர் ஸ்நானம் நல்லது.

ஆரோக்கிய வாழ்விற்கு, சுத்தமான காற்றும் அதுவும் நிரம்ப இருப்பதும் அவசியம். கெட்ட அசுத்தமான காற்றை சுவாஸிப்பதால் நேரிடும் வியாதிகள் அநேகம். நாம் எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமான காற்றை சுவாஸிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்மைச் சுற்றிலுமுள்ள நோயைக்கொண்டு செல்லும் கிருமிகள் நம்மைத் தாக்குவதை எதிர்ப்பதற்கு நமக்குச் சக்தி இருக்கும். குழந்தைப் பருவமுதற்கொண்டே தாழ்வாரங்களிலாவது அல்லது நன்றாய் திறந்து வைக்கப்பட்ட ஜன்னல்களும் காற்றுவாரிகளுமுள்ள அறைகளிலாவது அவைகளைப் படுத்துறங்கும்படி செய்யவேண்டும். ஜன்னல்களைத்திறந்துவைப்பதினால் ஜலதோஷமுண்டாகும் என்னும் ஒரு முட்டாள் தனமான கொள்கையை விட்டொழிக்க வேண்டும். மற்றப்படி புத்திசாலிகளாயும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்களாயுமுள்ள ஜனங்கள் கூட, திறந்து வைக்கப்பட்ட ஜன்னல்களின் அடியில் உட்காருவது அபாயகரமானதென்று நினைக்கிறார்கள். ஏனெனில், அதனால் அசுகம் இல்லாவிட்டாலும், அபாயத்தை விளைவிக்கும்; ஜலதோஷம் உண்டாகும் என்கின்றனர். இந்தக் கொள்கைக்கு யாதொரு நியாயமும் காணோம். இப்போது சுகமான காற்றோட்டத்திற்கும், விஷத்தன்மை தங்கியிருக்கும் காற்றுக்கும் உள்ள வித்தியாஸத்தைக் கண்டறியவேண்டும். உதாரணமாக, க்ஷயரோகத்திற்கும், இன்னும் மற்ற நுரையீரல் வியாதிகளுக்கும் இப்போது செய்யும் வெளிக்காற்றுச் சிகிச்சையை எடுத்துக் கொள்வோம். அனுபோகத்தில் காற்று வாடைகள் கெடுதலற்றவை என்று இப்போது நிரூபிக்கப் பட்டிருக்கிறது. இந்த

வெளிக்காற்றுச் சிகிச்சையின் வெற்றியே, குளிர்காற்றுக் கொள்கை பிசகானதென்று நிரூபிக்கிறது. இந்தக் குளிர் காற்றுக் கொள்கையில் ஏதாகிலும் உண்மையிருக்கும் பக்ஷத்தில், முன்னமே மெலிந்துபோயுள்ள இந்த க்ஷயரோகிகள், வெளிக்காற்றில் விட்டவுடனே எலிகள் போல் இறந்துகிடக்க வேண்டும். அவர்கள் பிழைத்திருப்பதுமன்றி, அவர்களுடைய பலமும் எடையும் அதிகரித்து, நோயும் தடைப்பட்டு நிற்கிறது. ஆனதுபற்றி, திறந்த கதவுகள், ஜன்னல்கள், திறந்த வெளிகள் இவற்றின் மூலமாய் கடவுளால் நமக்குக் கிடைத்த நல்ல காற்றை நாம் உபயோகிப்போமாக.

சூரியவெளிச்சத்தின் குணத்தையும் ஆவசியகத்தையும் குறித்து மேலே சொல்லியிருக்கிறோம். நமது தேசத்தில் போதுமான சூரிய வெளிச்சம் இருப்பதால் அதை நமது அனுகூலத்திற்காக உபயோகிக்கிறோமா என்பது கேள்வி? நாம் இருட்டான, காற்றோட்டமில்லாத அறைகளில் வசிக்கிறோம். அதுவும் போதாமல் திறந்துவைக்கப்பட்ட சர்மத்தின் மேல் சூரியவெளிச்சம்பட்டால் எவ்வளவு அனுகூலம் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் அதிகமாக உடைதரித்துக்கொள்கிறோம்.

எந்த ஜெந்துவிற்கும் பசி என்பது ஆரம்பத்திலேயே உண்டான ஒரு உணர்ச்சி. இது விஷயத்தில் மனிதனுக்கும் ஒரு கிருமிக்கும் வித்தியாஸம் என்பதே கிடையாது. இதனால் நாம் ஆகார விஷயத்தைக்குறித்து யோசிக்க நேரிடுகிறது. தேகத்திலுள்ள செல்லுகள் தேய்ந்துபோனால் அதை வலுப்படுத்தவும் வளர்ச்சியை விருத்தி பண்ணவும் நானாவித தொத்துவியாதிகளிலிருந்தும் தேகத்தைப் பாதுகாக்கவும் நாம் ஆகாரம் எடுத்துக்கொள்கிறோம். தகாத ஆகாரத்தை உண்டால், நமது சக்தி குறைந்துபோய், வியாதிக்கு இரையாகும்படி நேரிடும். இந்த வியாஸத்தில், சரியானதும் சரிசமானமானதுமான ஆகாரம் எது என்பதை விவரித்துச் சொல்லமுடியாது. ஆனால் நமது தேசம் விருத்தியடைய வேண்டுமானாலும், நமக்குப் பின்வரும் சந்ததியார்கள் நம்மைக்காட்டிலும் பலசாலிகளாயிருக்க வேண்டுமானாலும் ஆகாரத்தில் முக்கியமாக ஜீவஸத்துப் பொருள்களைச் சேர்க்கவேண்டும். இவை ஒத்தாசையான ஆகாரப்பதார்த்தங்கள். இவைகள் தேகவளர்ச்சிக்கும், தொத்துவியாதிகள் அணுகாமல் இருப்பதற்கும் உதவியாயிருக்கின்றன. முற்காலத்தில் மனிதன் சமைக்காத இயற்கைப்பொருள்களையே உண்டு வாழ்ந்துவந்தான். ஆனால் அபிவிருத்தி ஆக ஆக, சமைக்கக்கற்றுக்கொண்டான். சமைப்பது அவசியம் என்பதை நாம் ஒத்துக்கொள்வோம். சமையல் ஒரு வித்தை. அதை நாம் கற்கக் கற்க அது நம்மையே முழுகடித்துவிட்டது. அது இப்போது நாம் சொல்கிறபடி கேட்கும் ஊழியக்காரனன்று. அது நம்முடைய குரூரமான எஜமானனுகிவிட்டது. நம்முடைய முக்கியமான ஆகாரப்பதார்த்தங்கள் யாவையெனில், இயற்கையில் ஏராளமாய் நமக்குக் கிடைக்கக்கூடிய வஸ்துக்களாகிய பால், தயிர், மோர், நெய், பழங்கள், காய்கறிகள். இவைகளே நமது ஆகாரக் கட்டடத்திற்கு அஸ்திவாரம். இவைகளில் சமைத்த ஆகாரத்தைக் காட்டிலும் ஜீவஸத்துப்பொருள்கள் நிறைந்த நூதனமானதும் பச்சையானதுமான ஆகாரத்தையே நாம் உட்கொள்ளவேண்டும்.

சமைத்த ஆகாரம் உத்தீபனத்தை உண்டு பண்ணக்கூடியவை. ஆனால் இந்த உத்தீபனத்தினால் அதிகமாகச் சாப்பிடும்படி நேரிடுகிறது. சாப்பிடும்போது உண்டாகும் விருப்பம் சமைத்த ஆகாரங்களை உண்ணும்போதுதான் உண்டாகிறது. சமைக்காத ஆகாரத்தை நாம் அதிகமாக உண்ணமுடியாது. அதிகம் உண்ண வேண்டுமென்கிற எண்ணம் தேவையினால் உண்டானதேயொழிய ஆசையினால் உண்டானதல்ல. என்ன தேவை? ஜீவஸத்துப் பொருள்கள் தேவை. நாம் சமைப்பதினால் ஜீவஸத்துப் பொருள்களை அழித்துவிடுகிறோம். ஜீவஸத்துப் பொருள்களின் அளவு கிடைப்பதற்காக, எப்படி வைக்கப்போரில் ஊசி விழுந்துவிட்டால் போர்முழுதையும் கிளறிப் பார்க்கிறோமோ, அப்படியே, ஜீவஸத்துப்பொருள்கள் தேவையான அளவு கிடைக்கும் வரையில் நிரம்ப உண்ணுகிறோம். இது இயற்கை முறை.

நாம் எவ்வளவு ஜீரணம் செய்கிறோமோ அதனாலேயேயொழிய, நாம் உண்ணும் உணவினால் ஜீவிக்கிறதில்லை. அநேகர் தேகத்திற்கு எவ்வளவு தேவையோ அதற்கு மேற்கொண்டு ஜீரணம் செய்துகொண்டு அதனால் சோர்வையை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள். நமது சதைகள், மனது இவைகளின் மூலமாய் செய்துகொள்வதைக்காட்டிலும் ஜீரணத்தின் மூலமாய் அதிக சீக்கிரத்தில் சோர்வையை வருவித்துக்கொள்ளலாம். அநேகர் இப்போது

பிடிவாதமாய், அதிகமாகவே உண்டு வருகிருர்கள். இதுவே அவர்களுடைய தேகங்களில் நீடித்த விஷத்தன்மை உண்டாவதற்குக்காரணம். அதனல் சீக்கிரத்திலேயே கிழத்தனம் அடைகிருர்கள். மரணவிகிதம் அதிகமா யிருப்பதற்கும் இதுவே காரணம்.

நாம் ஒவ்வொருவரும் பழக்கவழக்கங்களில் கட்டுப்பட்டிருக்கிருேம். தேவையான போதாவது அவைகளை ஒழிக்க வேண்டும். ஆகாரச் சீர்திருத்தம் வரும்போது, சுவற்றில் முட்டிக் கொள்ள வேண்டியதுதான். நாம் தினசரி ஆகாரத்தில் ஏதாகிலும் மாறுதல் சொன்னல், வீட்டிலுள்ள ஸ்திரீகள் அதற்கு முட்டுக்கட்டைப் போட்டு விடுகிருர்கள். "வயிறு நிரம்ப உண்ணவேண்டியது" என்பதுதான் நமது ஸ்திரீகளுக்குத் தெரியும். ஆனதுபற்றி ஸ்திரீகளுக்குப் போதனை வேண்டும். அவர்களுக்குப் புத்திக்கூர்மையை உண்டாக்கி, அவர்கள் வரும் சந்ததியாரின் தாய்மார்களாக இருக்கும்போது, சீர்திருத்தங்களில், முக்கியமாய், ஆகாரச் சீர்திருத்தத்தில் வழி காட்டும்படிச் செய்ய வேண்டும்.

அதிகமாக உண்பதின் பலன்களைப் போக்க அடிக்கடி உபவாஸம் இருக்கும்படி மதாசாரமாகவே ஒரு பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. வாரத்திற் கொருமுறையாவது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது உபவாஸம் இருத்தல் நலம். உபவாஸம் எல்லா நோய்களுக்கும் கைகண்ட ஒளஷதம்—லங்கணம் பரம ஒளஷதம்—என்கிற ஒரு பழமொழி நம்மிடம் வழங்க வில்லையா?

காபி, தேயிலை இவைகளைக் குறித்துச் சொல்லாமல் இந்த வியாஸத்தை முடிக்கமுடியாது. இவைகளை மிதமாய்க் குடித்தால் இவை இலேசான உத்தீபனங்கள் ஆகும். அதிகமாய்க் குடித்தாலோ விஷம். இவைகளை அடியோடு ஒழிக்க முடியாத பக்ஷத்தில், மிதமாய்க் குடிப்பதுதான் விதி.

இந்த வியாஸத்தை நன்ருய்ப்படித்து அதன்படி நடக்கும்பக்ஷத்தில், ஆரோக்கியமான வாழ்வு வாழலாம். அதுதான் தகுமான வாழ்வாகும்.

இஸ்லாமிய உலகின் ராஜிய விழிப்பு

கீழ்நாடும் மேனுடும் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்வதானது இன்று புதிய விஷயமல்ல. பல நூற்ருண்டுகளாக இவ்விரு நாடுகளுக்கு மிடையே போராட்டம் நடந்து கொண்டே இருக்கின்றது. மேனுட்டின் கொடி கீழ்நாட்டிலும் கீழ்நாட்டின் கொடி மேனுட்டிலும் அநேக சந்தர்ப்பங்களில் நடப்பட்டிருக்கிறது. கீழ்நாட்டிற்கும் மேனுட்டிற்கு மிடையில் அநேகம் தடவைகளில் கடுமையான போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவைகளில் சில சமயம் மேனுடு படையெடுத்து வலுவில் தாக்குவதாகவும், சில சமயங்களில் கீழ்நாடு வலுவில் படையெடுத்துத் தாக்குவதாகவும் இருந்திருக்கிறது. இவ்விதமான போராட்டங்கள் கடைசியில் சிலுவை யுத்தங்களில்தான் நிகழ்ந்தது. இந்த யுத்தங்கள் கிட்டதட்ட 200 வருஷங்கள்வரை நிகழ்ந்தன. இச்சந்தர்ப்பத்தில் கீழ் நாட்டை ஜெயிக்க மேனுடு தன்னலான சகல முயற்சிகளையும்செய்தது. ஆனல், மேனுட்டிற்குக் காலம் உதவியாக இல்லை. எனவே, அது தோல்வியுற்றது. அதன் நோக்கம் சித்தியாகவில்லை. என்ருலும், இந்த யுத்தங்களின் பயனுக மேனுடு கீழ் நாட்டிலிருந்து ராஜியம், பொருளாதாரம், கல்வி, நாகரீகம் ஆகியவைகளில் அநேகம் விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்குத் தக்க சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அந்தக்காலத்தில் மேனுட்டார் கற்றுக்கொண்ட பாடங்கள்தாம் இக்காலத்தில் அவர்கள் உச்சஸ்தானத்தை அடைவதற்கான வசதியையும் சௌகரியங்களையும் அளித்தன. எனவே, வெகு துரிதமாக மேனுடு தன்னைப் பலப்படுத்திக் கொண்டு தொழில் வர்த்தகம் முதலியவைகளில் முன்னேற்ற மடைந்து விட்டது.

மிகச்சுலபமாகக் கைப்பற்றப்படக்கூடிய நாடு கீழ்நாடுகளில் இல்லாததால் 17-வது நூற்றூண்டின் ஆரம்பத்திலிருந்து பற்பல விதமான முறையில் தனது யுத்தத்தைக் கீழ்நாடுகளில் ஆரம்பித்தது. இம் முயற்சியில் வெற்றியும் பெற்றது. மகாயுத்தத்திற்குப் பிறகு கீழ்நாடுகளிலும் ஒருவிதமான விழிப்பு ஏற்பட்டதால் அதன் முயற்சிகள் இந்நாடுகளில் இப்பொழுது அத்துணை பயன் விளைவிக்கவில்லை. கீழ்நாடுகளில் ஒவ்வொரு மூலையிலும்கூட மேனாட்டிற்கு விரோதமான கிளர்ச்சி தோன்றி ஒன்றன்பின் ஒன்ருகச் சுயேச்சை யடைந்து வருகின்றன. பாய்ச்சல்களினுள் அகப்பட்டுக் கொண்டதானது கீழ்நாடுகளிலுள்ள இதர தேசங்களின் வீழ்ச்சிக்கும் காரணமாகி விட்டது. இத்தேசத்தைப் பிரிட்டிஷ் சிங்கம் பிடித்துக்கொண்டதால் அதற்கு அபரிமிதமான பலம் ஏற்பட்டு விட்டது. ஆதலால், பாதுகாப்பு என்ற பெயரைக் கூறிக்கொண்டு அக்கம் பக்கத்து தேசங்களையும் அது கைவசமாக்கிக்கொண்டது. இந்தியாவிற்காக இந்தியாவிற்குப் பக்கத்திலுள்ள அநேகம் நாடுகளில் பல யுத்தங்களும் நேர்ந்தன. இதனல் அநேகம் நாடுகளுக்குக் கஷ்டங்களும் சம்பவித்தன.

சந்தா நேயர்கட்கு!

நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் காரியதரிசி ஆலி ஜனப் மௌலவீ அல்ஹாஜ். S. A. முகம்மது அலீசாஹிப் அவர்களும், ஆசிரியர் மௌலவீ A. R. அப்துற்றஹீம் சாஹிபும் முபாரக்கான இவ்வாண்டின் ஹஜ்ஜை நிறைவேற்றி திருரவுளா ஷரீபையும் ஜியாரத்துச் செய்து வரும் நோக்கத்தோடு தங்கள் சகாக்களுடன் ஹிஜாஸ் பிரயாணமாவதால் இந்த ஜனவரி மாத சஞ்சிகையுடன் பிப்ரவரிமாத சஞ்சிகையும் சேர்த்து வெளியிடப்படுகிறது. இன்ஷா அல்லாஹ் புண்ணிய க்ஷேத்திரம் சென்று திரும்பி வந்தபின் மார்ச்சு, ஏப்ரல் மாதங்களின் சஞ்சிகைகள் ஒன்று சேர்த்து பிரசுரிக்கப் படுமென்பதை அன்பர்கட்கு அறிவித்துக்கொள்கிருேம்.

மானேஜர்.

சில நாடுகள் தனது சுயேச்சைப் போராட்டத்தை இன்னமும் நடத்திக்கொண்டே இருக்கின்றன. எனவே, சென்ற காலச்சரித்திரத்தை நோக்குமிடத்து கீழ்நாடுகள் சீக்கிரத்திலோ அல்லது தாமதத்திலோ மேனடுகளின் பிடியை விட்டு விலகிவிடும் என்று தோன்றுகிறது. எனவே, கீழ்நாடுகள் மேனடுகளுக்கு வீழ்ச்சி யடைந்த ஒழுங்கு முறைப்படி கீழ்நாடுகளின் முயற்சியைப்பற்றி இங்கு சிறிது விவரிக்க விரும்புகிருேம். இந்தியாவின் மீதுதான் மேனடுகள் முதல் முதலாகத் தங்களது தாக்குதல்களை ஆரம்பித்தன. இந்தியா போன்ற விசாலமான தேசம் பிரிட்டிஷ் சிங்கத்தின்

இந்தியா

இந்தியாவில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக பிரிட்டிஷ்காரர் தங்களது முயற்சிகளை 1645-ம் வருஷத்தில் முதல் முதலாக ஆரம்பித்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாக பிரிட்டிஷாருக்கு ஆதிக்கம் வலுத்துக்கொண்டே வந்து இறுதியில் 1857-ம் வருஷத்தில் நிகழ்ந்த பிரபல சிப்பாய் கலகத்திற்குப் பிறகு பூரண ஆதிக்கம் மேற்பட்டது. இந்தச் சிப்பாய்க் கலகத்தை இந்தியாவின் சுயேச்சைக்குச் செய்யப்பட்ட கடைசி போராட்டம் என்று கூறலாம். இப்போராட்

டத்தில் இந்தியா வெற்றியடையாதது மட்டு மில்லாமல் அதன் இடுப்பு முற்றிலும் உடைந்து விட்டது. எனவே, இந்தியா நம்பிக்கையிழந்து தனது முயற்சியைக் கைவிட்டுவிட்டது. பின்னர் இந்த நூற்ருண்டின் ஆரம்பத்திலிருந்து சொற்ப விழிப்பேற்பட்டிருக்கிறது. சில தலைவர்கள் சுயேச்சைக்காகச் சொற்ப முயற்சியும் செய்கின்றனர். மகா யுத்தத்திற்குப் பிறகு 1919-ல் இந்த இயக்கம் கொஞ்சம் வலுவடைந்தது. அடக்குமுறைகளும் நிகழ்ந்தன. அடக்குமுறை எவ்வளவு வேகமாகச் செய்யப்பட்டதோ அவ்வளவு வேகத்திற்கு சுதந்திர இயக்கக் கிளர்ச்சியும் அதிகப்பட்டது. கடைசியாக ஸைமன் கமிஷன் விசாரணைக்கு வந்தது. அப்பால் வட்டமேஜை மகாநாடுகள் கூட்டப்பட்டன. புதிய சீர்திருத்தம் என்ற பெயரால் சிறிது சுயேச்சை இந்தியாவிற் களிக்கப்பட்டிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் இவ்வருஷத்தில் அதன் ஒரு பகுதி அமலில் வந்துவிடும். சுதேச சமஸ்தானங்களது சந்தேகங்கள் நிவர்த்தியானபின் பெடரல் ஆட்சி முறை சிக்கிரத்தில் அமலுக்கு வந்துவிடுமெனத் தெரிகிறது. ஆனல், இந்தியாவி லேற்பட்டுள்ள இச்சுதந்திரப் போராட்டத்திற்கு வகுப்புணர்ச்சிதான் பெரும் தடையாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள பெரும்பான்மை வகுப்பினருக்கு வகுப்புச் சுயநலமும் சிறுபான்மையினரை நசுக்கும் உத்தேசமுமிருப்பதால் பிரிட்டிஷாருக்கு இது நல்ல தருணமாக அமைந்துவிட்டது. இந்திய சுயேச்சைப் போராட்டத்தின் தலைவரான ஸ்ரீ காந்தியும் இவ்வகுப்புணர்ச்சிக்குள் சிக்கிக் கொண்டதால் 1919-வருஷத்திற்குப் பிறகு அவருக்கு நாட்டிலேற்பட்ட செல்வாக்கு இப்பொழுதில்லை. வகுப்புச் சமரசம் இந்தியாவில் பூரணமாக ஏற்பட்டு விடுமாயின் சுதந்திரப் போராட்டத்திற்கு அதிக ஆக்கமும் பலமும் ஏற்படும்.

அப்கானிஸ்தானம்

இந்தியாவின் எல்லைப்புறங்களிலுள்ள தேசங்களில் அப்கானிஸ்தானமும் ஒன்று. இத்தேசத்திலும் ஆங்கிலேயர்கள் பல்லாண்டுகளாக யுத்தம் செய்து தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்டார்கள். அப்கானியரும் தங்கள் சுதந்திரத்தைக் காத்துக் கொள்வதற்காக உயிரை வெறுத்துப் பல்லாண்டுகள் போர் செய்தனர். கடைசியாக 1887-ம் வருஷத்தில் அத்தேசத்தின் வெளிநாட்டு உரிமை ஆங்கிலேயர் வசம் சென்றது. இதன் பலனாக அந்நியநாடுகளில் ஆங்கிலேயர்கள் அப்கானிஸ்தானத்தின் பிரதிநிதிகளாக இருக்கும் உரிமை பெற்றனர்.

பின்னர் 1919-ம் வருஷத்தில் அமானுல்லா கான்வசம் அப்கானிய அரசாங்கத்தின் கடிவாளம் வந்தபோது அவர் எவ்விதத் தாமதமுமில்லாமல் தனது நாட்டின் சுயேச்சைக்காக போராட வாரம்பித்துவிட்டார். ஒருகாலம் வரை ஆங்கிலேயரும் அப்கானியரும் போர்க்களத்தில் தங்கள் கைவரிசையைக் காண்பித்தனர். இறுதியாக 8-8-1921-ல் அப்கானிஸ்தானம் தனது சுயேச்சையைத் திரும்பவும் பூர்த்தியாக அடைவதில் வெற்றி பெற்றது.

ஈரான்

அப்கானிஸ்தானில் நடந்தவைகளெல்லாம் ஈரானிலும் நடந்தன. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் வழியில் ஈரான் இருப்பதால் அதில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள ஆங்கிலேயர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். விசாலமான இந்த முஸ்லிம் அரசாங்கம் ஆங்லேயரின் கைவசத்தில் முற்றிலும் வீழ்ச்சியடைந்துவிடும் நிலைமைக்கு வந்தது. என்ருலும், இறைவனுக்கு இது விருப்பமாக வில்லாததால் ரிஜாகான் பஹ்லவி திடீரென தோன்றி தனது தோள் வலிமையாலும் ராஜதந்திரத்தாலும் ஈரானின் சுயேச்சையைப் பாதுகாத்ததுடன், மிகவும் சுத்த வீரப்பராக்கிரமத்துடன் 1919-ம் வருஷத்தில் ஆங்கியேருக்கும் ஈரான் முதல் மந்திரிக்கு மிடையில் 'துஹ்ரான்' பட்டணத்தில் நிகழ்ந்த உடன்படிக்கையைக்கிழித்தெரிந்து விட்டார். ரிஜாகான் பஹ்லவியின் இக்காரியத்தினல் ஈரானின் சுயேச்சை காப்பாற்றப்பட்டது. இப்பொழுது ரிஜாகான் பஹ்லவி ரிஜாஷாஹ் பஹ்லவி என்ற நாமத்துடன் ஈரானை ஆட்சி புரிந்து வருகிருர். பல துறைகளிலும் இத்தேசம் இப்பொழுது விருத்தியடைந்து வருகிறது.

துருக்கி

மகா யுத்தத்திற்குப் பிறகு ஈரானில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக பிரிட்டிஷார் கையாண்ட அதே முறையை அவர்கள் துருக்கியிலும் உபயோகித்தனர். 1918-ம் வருஷம் அக்டோபர் மாதம் துருக்கியருடன் நேச

தேசத்தார் செய்த உடன்படிக்கைக்குப் பிறகு தங்களது கடற்படையையும் கரைப்படையையும் பிரிட்டிஷார் கான்ஸ்தாந்தி நோபிளில் இறக்கினர். அக்காலத்தில் இந் நகரம் துருக்கியின் தலை நகரமாக இருந்தது. அப்பொழுது கலீபாவாக இருந்த சுல்த்தான் 6-வது முஹம்மதை பிரிட்டிஷார் தங்களது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு அரசாங்கக் கடிவாளத்தையும் தங்களது கையில் வாங்கிக்கொண்டனர். என்றாலும், தங்களது சுயேச்சையும் தங்களது தேசமும் அந்நியர் வசம் செல்வதை யுணர்ந்த துருக்கி சுயேச்சைவாதிகள் காஜீ முஸ்தபா கமால் பாஷாவின் தலைமையின்கீழ் ஒன்று கூடினர். ஆங்கிலேயரது உதவி பெற்று துருக்கியரை நசுக்க பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த கிரேக்கரை முஸ்தபா கமால் பாஷா தோற்கடித்து மிகப் பெரிய வெற்றியடைந்தார். எனவே துருக்கியரது சுயேச்சையை அங்கீகரிக்காமலிருக்க ஆங்கிலேயருக்கு வேறு வழியில்லை யாதலால் தங்கள் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு அவர்கள் கான்ஸ்தாந்திநோபிளை விட்டு வெளியேறினர். லாஸேன் என்ற இடத்தில் நேச தேசத்தினருக்கும் துருக்கியருக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கைக்குப் பிறகு துருக்கி தனது பலத்தை பூரணமாகப் பெருக்கிக் கொண்டு விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஆகியவைகளிலும் துரிதமாக முன்னேறி வருகிறது. காஜீ முஸ்தபா கமால் பாஷா இப்பொழுது துருக்கியரின் தந்தை என்ற பெயரால் துருக்கிக் குடியரசின் ஜீவிய தலைவராக இருந்து வருகிறார்.

அறபி நாடுகள்

மகா யுத்தம் ஆரம்பமாகும் வரை அறபி நாடுகள் துருக்கி உதுமானியா ஏகாதிபத்தியத்தின் ஒரு பாகம் எனக் கருதப்பட்டு வந்தன. இங்குள்ள ஜனங்களுக்குத் துருக்கியை விட்டுப் பிரிந்து தங்களுக்கென தனி அரசை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் பெருகிக் கொண்டே வந்ததால் 1908-ம் வருஷத்தில் துருக்கி உதுமானிய ஏகாதிபத்தியம் பேச்சுச் சுதந்திரம், அச்சுச் சுதந்திரம் அளித்தமையான் மிகவும் பலமாக இவர்கள் தங்கள் எண்ணத்தைப் பிரசாரம் செய்து கான்ஸ்தாந்திநோபிள், ஷாம், எகிப்து, பேருத் முதலிய இடங்களில் அநேகம் இரகசியச் சங்கங்களையும் ஏற்படுத்தி இருந்தனர். இம் முயற்சியைத் துருக்கியர் மிகவும் கண்டிப்பான முறையில் நசுக்கிவிட முயன்றனர் என்றாலும் அவர்கள் வெற்றியடையவில்லை. எனவே, மகா யுத்தம் தோன்றிய பிறகு துருக்கியர் இந்த நாடுகளைத் துறக்கவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. இந்த இயக்கத்தில் ஷரீப் ஹுஸைன் என்பவர்தான் அறபிச் சிற்றரசர்களின் முன்னணியில் நின்றவர்.

அறபி நாட்டில் துருக்கியருக்குச் சம்மந்தமில்லாமற் செய்வதில் அவர் அதிகம் பிரயாசை எடுத்துக்கொண்டார். ஆனாலும், அவரது முயற்சிக்குத்தக்க பிரதி பலன் அவருக்குக் கிடைக்கவில்லை. 1918-ம் வருஷத்தில் அமீர் பைஸல் திமிஷ்கு நகரில் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தினர். அதனை நேச தேசத்தினர் அங்கீகரிக்கவில்லை. போதாதற்கு 1920-ல் நேச தேசத்தைச் சேர்ந்தவர்கள் திமிஷ்கு நகரில் பிரவேசித்து அவ்வரசாங்கத்தை அழித்து அமீர்பைஸலை அதை விட்டு வெளியேற்றி விட்டனர். இவ்வெளியேற்றுகையினால் அத்தேசத்தில் ஒருவித எழுச்சியுண்டாயிற்று. டாக்டர் அப்துர் ரஹ்மான் ஷஹ்பந்தர் என்பவரது தலைமையின்கீழ் இவ்வியக்கம் வளர் பிறைச் சந்திரனைப்போல தழைத்தோங்கிற்று. கடைசியாக 1925-ம் வருஷத்தில் சுல்த்தான் பாஷா அத்ரஷின் தலைமையின்கீழ் ஷாம் தேசத்தில் சுதந்திரப் போராட்டம் தொடங்கிற்று. இரண்டு வருஷங்கள்வரை ஷாம் தேசத்தாருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் ஷாம் தேசத்தில் ரத்தப் போர் நடந்தது. இறுதியாக வலி மிகுந்த பிரஞ்சுக்காரர்களது கை ஓங்கிற்று. சத்தியம் அசத்தியத்திற்கு முன் வீழ்ச்சி யடைந்தது. சுல்தான் பாஷா அத்ரஷ் ஷாம் தேசத்தை விட்டு டிரான்ஸ் ஜார்டோனிபாவுக்கும், டாக்டர் அப்துர் ரஹ்மான் ஷஹ்பந்தர் எகிப்துக்கும் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது. என்றாலும், சுதந்திர இயக்கம் மட்டும் நின்று விடவில்லை. சென்ற வருஷத்தின் ஆரம்பத்தில் இவ்வியக்கம் மறுபடியும் பல மடைந்தது. இந்த முறையில் அவர்கள் வாளேந்தி யுத்தம் செய்யாமல் 19-1-936-ல் தேசமெங்கும் பூரணவேலை நிறுத்தத்தைத் தொடங்கி, தங்களது கோரிக்கைகளை பிரஞ்சுக்காரர்கள் அங்கீகரிக்கும்வரை வேலை நிறுத்தத்தை விடுவதில்லை என்ற உறுதியுடனிருந்தனர். பிறகு மார்ச்சு மாதத்தில் பிரஞ்சுக்காரர்கள் ஷாம் தேசவாசி

களது கோரிக்கைகளை அங்கீகரித்தனர். கூடிய சீக்கிரத்தில் அங்கு குடியரசு ஏற்படும்.

இராக்

மகா யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் ஆங்கிலேயர் இராக் வாசிகளுக்கு உதவி புரிவதாகக்கூறி அத்தேசத்தில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அங்கு நூதன முறையில் ஒரு அரசியல் திட்டத்தையும் ஏற்படுத்தினர். இராக் வாசிகளுக்கு ஆங்கிலேயரது இத்தலையீடு மிகக் கஷ்டமாகத் தோன்றிற்று. ஆதலின், அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினர். மகா யுத்தம் முடிவடைந்தபின் ஆங்கிலேயர்கள் அவர்களுக்குக்கூறி இருந்த வாக்குறுதிகளை ஞாபக மூட்டினர். ஆனால், ஆங்கிலேயர் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாகப் பலத்தை உபயோகித்தனர். எனவே இராக் வாசிகள் 1920-ம் வருஷத்தில் சண்டை தொடங்கினர். இச்சண்டை ஒருகாலம் வரை நடந்தது. 1921-ம் வருஷத்தில் இராக்கின் சுயேச்சையை ஆங்கிலேயர் ஆங்கீகரித்து திமிஷ்கிலிருந்து விரட்டப்பட்ட அமீர் பைஸலை அந்நாட்டிற்கு அரசராக்கினார்கள். இவர் ராஜதந்திரியாக இருந்ததால் பிரிட்டிஷாரை உறவு பிடித்துத் தமக்கு வேண்டிய பல வசதிகளையும் தேடிக்கொண்டார். எனவே, இப்பொழுது இத்தேசம் சர்வதேச சங்கத்தில் ஒரு அங்கமாக விளங்குகிறது. பூரண சுயேச்சையும் பலமுமுள்ள ஒரு முஸ்லிம் அரசாங்கமாகவும் இருந்து வருகிறது.

பாலஸ்தீனம்

துருக்கி உதுமானிய ஏகாதிபத்தியத்தில் பாலஸ்தீனம் ஷாம் தேசத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால், பிரிட்டிஷாரின் ராஜ தந்திரமானது இத்தேசத்தை ஷாம் என்றும் பாலஸ்தீனம் என்றும் வெவ்வேறாகப் பிரித்து, குடியேற்ற நாடு என்ற முறையில் இத்தேசத்தில் ஒரு மாதிரியான அரசாங்கத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இத்தேசத்தை யூதர்களது தாய் நாடாக்குவதாக அவர்களுக்கு வாக்களித்து அவ்வண்ணமே செய்து வருகிறது. ஆதலின், அங்குள்ள முஸ்லிம்களது உரிமையில் பிரிட்டன் அநியாயமாகத் தலையிடுவதாக முஸ்லிம்கள் நினைக்கின்றனர். மேலும், அத்தேச ஜனங்களும் பிரிட்டிஷாரிடம் இதனைப்பற்றி மிகக் கடுமையாகக் கண்டனம் செய்தனர். இதில் காரியம் பலிக்கவில்லை. ஆகவே, சண்டையில் இறங்கி விட்டனர். 17-4-1936-ம் வருஷம் பாலஸ்தீன் அறபியர் பூரணவேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். அநேகர் மலைகளுக்குச் சென்று குரங்குச் சண்டையை ஆரம்பித்தனர். இறுதியாக அறபி மன்னர்களது வேண்டுகோளுக்கிணங்கி 12-10-36ல் பாலஸ்தீனம் அறபியர் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். இப்பொழுது அங்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விசாரணைக் கமிஷன் விஜயம் செய்திருக்கிறது. என்றாலும், பாலஸ்தீன் அறபியர் இக் கமிஷனையும் பகிஷ்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

எகிப்து

இத்தேசம் முன்னர் உதுமானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு அங்கமாக இருந்தது. அப்பால் அங்கு பிரிட்டனின் செல்வாக்கேற்பட்டது. பின்னர் பிரிட்டிஷாருக்குப் பூரண ஆதிக்கம் ஏற்பட்டது. பிரிட்டிஷாரின் இஷ்டப்படியே அங்குள்ள அரசர் ஆட்சி செய்யவேண்டியதாக இருந்தது. தேசியவாதிகள் தங்களது சுயேச்சைக்காகப் பகிரதப் பிரயத்தனம் செய்து அநேகம் அடக்கு முறைகளுக் குட்படுத்தப்பட்டபின் இப்போது எகிப்துக்கும் பிரிட்டனுக்கும் ஒருஉடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. இவ்வுடன்படிக்கையின் மூலமாக எகிப்திற்குப் பூரண சுயேச்சை கிடைத்திருப்பதுடன் கூடிய சீக்கிரத்தில் எகிப்தும் சர்வதேச சங்கத்தில் ஒரு மெம்பராகச் சேர்ந்து விடும்.

ஆப்பிரிக்க அறபி நாடுகள்

வட ஆப்பிரிக்காவில் அறபியர்கள் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலர் முஸ்லிம்களேயாவர். ஒரு காலத்தில் இந்நாடுகளில் சுயேச்யையான முஸ்லிம் சுதேச அரசாங்கமிருந்தது. இவர்களது ஆட்சி ஐரோப்பாவிலும்கூட இருந்தது. அப்பால் இவர்களுக்குள் ஐக்கியமில்லாதிருந்ததால் இவர்கள் நாலைந்து தேசத்தினராகப் பிரிந்தனர். சிலர் சுயேச்சையாக இருந்தனர். சிலர் துருக்கி உதுமானிய ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்தனர்.

வட ஆப்பிரிக்காவிலுள்ள மேற்குக் கோடிக்குப் பக்கத்தில் அல்ஜீரியா என்ற தேசத்தினர் சுயேச்சையான சுதேச அரசாங்க முள்ளவர்களாக இருந்தனர். பிரஞ்சுக்காரர்கள் 1839-ம் வருஷத்தில் இத்தேசத்தின் உள்நாட்டில் படையுடன் பிரவேசித்தனர். அல்ஜீரிய வாசி

களும் அமீர் அப்துல்காதிர் ஜஸாயிரி என்பவரது தலைமையில் பலமாக எதிர்த்தனர். 1846-ம் வருஷம் வரை கடும்போராட்டங்கள் நிகழ்ந்தன. சில வசதிக் குறைவுகளினால் அமீர் அப்துல் காதிர் பிரஞ்சுக்காரர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். இவரது ராணுவத்திறமையை பிரஞ்சுக்காரர்கள் மெச்சி இவரது கோரிக்கைகளிற் சிலவற்றை அங்கீகரித்தனர்.

பிறகு, பிரஞ்சுக்காரர்கள் டுனிஸ் தேசத்தை நோக்கினர். பல போராட்டங்களுக்குப் பின் இத்தேசமும் 1881-ம் வருஷத்தில் பிரஞ்சுக்காரர்களது ஆதிக்கத்தில் வந்தது. பிறகு ஸ்பெய்ன் வாசிகளது ஒத்துழைப்புடன் பிரஞ்சுக்காரர்கள் மக்ரிபு அக்ஸாவின் பால் திரும்பினர். 1912-ல் அத்தேசம் வீழ்ச்சியடைந்தது. ஸ்பெய்னின் ஒத்துழைப்பிற்காக அத்தேசத்தின் ஒரு பகுதி ஸ்பெய்ன் தேசத்திற்குக் கொடுக்கப்பட்டது.

1911-ம் வருஷத்தில் இத்தாலியர் திருப்போலியின்மீதும், புர்க்காவின்மீதும் படையெடுத்தனர். 1911-லிருந்து 1915-ம் வருஷம் வரை ஷெய்கு ஸெய்யிது அஹ்மது ஷரீப் ஸன்னூஸி புர்க்காவின் சுதந்திரப் போராட்டத்தை நடத்தி வந்தார். அப்புறம் அவர் கான்ஸ்தாந்திநோபிளுக்குச் சென்று விடவே, அவரது சிறிய தந்தையின் புதல்வரான ஸெய்யிது முஹம்மது இத்ரீஸ் மஹ்தீ ஸன்னூஸி என்பவர் 1922-ம் வருஷம்வரை இப்போராட்டத்தைச் செய்து வந்தார். இவரும் தமது சுகவீனத்தால் எகிப்துக்கு வயித்திய சிகிச்சை செய்துகொள்ள வந்துவிட்டார். அப்பால், ஸெய்யிது உமர் முக்தார் என்ற வாலிபர் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு 1931-ம் வருஷம் வரை மிகத் தீவிரமாகப் போராடினார். எனினும், இத்தாலியரிடம் கைதியாகி மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டார்.

திருப்போலியில் சுதந்திரப் போராட்டம் ஷெய்கு சுலைமான் பாஷா பாரூனியின் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. இவர் தோல்வியுற்று டுனிஸ் சென்று அங்கிருந்து கான்ஸ்தாந்தி நோபிள் சென்றார். மகா யுத்தம் ஆரம்பமானபோது அவர் மறுபடியும் திருப்போலிக்கு வந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்தி 1919-ல் இத்தாலியருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கைப்படி திருப்போலி குடியரசாக ஏற்படவேண்டும்.

ஸ்பெய்ன் தேசத்தாருக்குப் பங்கு போட்டுக் கொடுக்கப்பட்ட மக்ரிபு அக்ஸாவில் அமீர் அப்துல் கரீம் கித்தாபீ என்பவர் 1921-ல் தோன்றி ஸ்பானியரை எதிர்த்து மிகவீரதீரமாகப் போராடி அவர்களை தோற்கடித்து விட்டார். ஆயினும், பக்கத்திலுள்ள பிரஞ்சுக்காரர்கள் ஸ்பானியருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் அமீர் அப்துல் கரீமிடம் சண்டை தொடங்கினர். இறுதியாக அமீர் அப்துல் கரீம் பிரஞ்சுக்காரர்களிடம் சரணடைந்தார்.

மகா யுத்தம் முடிவடைந்த பின் அல்ஜீரியாவிலும் சுதந்திரதாகம் உண்டாயிற்று. அங்கு சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது.

நமது அனுதாபம்

சென்னை கிடங்குத் தெருவின் பிரபல வியாபாரியும், ஆலீ ஜனுப் சௌகார் C. அப்துல் ஹகீம் சாஹிப் பஹதூர் அவர்களது சகோதரியின் குமாரரும், உத்தம நற்குண சீலரும், பொது நலப் பிரியருமான ஜனுப் வி. அப்துல்லாஹ் பாஷா சாஹிப் அவர்கள் பக்க வாதத்தால் நோய் வாய்ப்பட்டு 2-1-37 சனிக்கிழமை காலை 7-மணிக்கு இவ்விடம் திருவல்லிக்கேணியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் இப்பொய்யுலகைவிட்டு மெய்யுலகு சென்றார் (இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹி ராஜிஊன்) என்னும் துக்ககரமான செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். மாலை $4\frac{1}{2}$-மணிக்கு பெரியமெட் மஸ்ஜிதில் பல ஆயிரக்கணக்கான மக்களிடையே அவரது ஜனாஸா தொழவைக்கப்பட்டு புரசைவாக்கம் கபரஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அல்லாஹ்தஆலா மௌலத்தாவுக்கு மக்பிரத்தும், றஹ்மத்தும் செய்து அவரது பந்துமித்திரர்களுக்கு "ஸப்ராஜமீலை" அருள்புரிவானாக.

மௌலத்தாவின் பந்து மித்ரர்களுக்கும், உத்தம சகாவை யிழந்து பிரிவாற்றாமையால் மனம் வாடும் ஆலீஜனுப் சௌகார் ஸி. அப்துல் ஹகீம் சாஹிப் பஹதூர் அவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மில்னர் கமிஷன்

நமது இந்தியநாடு மேனாட்டினரால் ஆட்சி புரியப்படுகிறது. தன்னுடைய சுயேச்சையை இழந்து 150 வருஷங்களாக அடிமைப் பட்டுக் கிடக்கின்றது. சிறிது காலமாக இத் தேசமக்களிடம் சுதந்திர உணர்ச்சி தோன்றி அதற்கான முயற்சி செய்கின்றனர். என்றாலும், இவர்கள் இன்னமும் வெற்றிபெறவில்லை. வெற்றிபெறுவதற்கான அறிகுறிகளையும் காணவில்லை. இதற்குக் காரணமென்னவெனில், இந்தியாவிலுள்ள சகல வகுப்பினருடைய நம்பிக்கையையும் பெற்ற பொதுத்தலைவர் இல்லாததும், சகல வகுப்பினருடைய நம்பிக்கைக்கும் உரிய பொதுச்சபை ஒன்று இல்லாததுமேயாகும் காங்கிரஸ் மகாசபையை ஒரு கூட்டத்தார் தேசியசபை என்று கூறுகின்றனர். ஆனால் அச்சபையின் தீர்மானங்கள் தேசிய மணம் கமழுவனவாயில்லை. குறிப்பிட்ட ஒரு வகுப்பின் நலனை மாத்திரம் கருதுவனவாகவே இருக்கின்றன. எனவே, இந்தியாவும், காங்கிரஸ்சபையும் தேசிய ஒற்றுமையைக் கவனித்து அதனை வளர்ப்பதற்கான முயற்சி செய்யவில்லை. வகுப்புப் பிரசினை மிக அற்பமானதென்றே இன்னமும் மதித்துக்கொண்டிருக்கிறது. வகுப்பு ஒற்றுமையின் பயனை விளக்குவதற்கு இதனடியில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறோம். நேயர்கள் கவனிப்பார்களாக.

எகிப்து தேசமும் இந்தியாவைப்போல் பிரிட்டிஷாரிடம் அடிமைப்பட்டது. அத் தேசத்தில் தோன்றிய தலைவர்கள் ராஜதந்திரிகள். அரசியல் போராட்டத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள். அங்கு வசிக்கும் கிறிஸ்தவர்கள், எகிப்தியராகிய சிறுபான்மையினரைத் தங்கள் வசப்படுத்துவதற்காக தேசியத் தலைவரான ஸக்லூல்பாஷா அவர்கள் விரும்பிய உரிமைக்கு மேல் அதிகமான உரிமையை அளித்தனர். சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையினரிடமிருந்த சந்தேகம் அகன்றது. எகிப்தில் வகுப்புப் பிரசினை அடியுடன் ஒழிந்தது. யாவரும் ஒன்று கூடினர். ஒரு முகமாகப் பிரயாசை எடுத்துக் கொண்டார்கள். அடக்கு முறைகள் தாண்டவமாடின. ஒன்றுக்கும் எகிப்தியர் அஞ்சவில்லை. இறுதியாக பிரிட்டிஷார் லண்டனிலிருந்து லார்டு மில்னரின் தலைமையின் கீழ் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தனர். இக்கமிஷனை எகிப்தியர் பகிஷ்கரித்ததுடன் தங்கள் தலைவரான ஜக்லூல் பாஷாவை மட்டிலும் தங்கள் பிரதிநிதியாக ஏற்படுத்தி விட்டனர். அது போழ்து ஜக்லூல் பாஷா நாடு கடத்தப்பட்டு பந்தோபஸ்தில் இருந்தார். கமிஷன் எகிப்து சென்றது. அவர்களிடம் சாக்ஷியம் கூற ஒருவரும் முன்வரவில்லை. கமிஷன் தலைவர் அங்குள்ளவர்களிடம் சென்று விசாரணை புரியத் தலைப்பட்டார். எனவே, கமிஷன் தலைவரான லார்ட் மில்னர் எகிப்தில் இருவருடன் செய்த சம்பாஷணை விபரம் வருமாறு:—

முப்தீ முஹம்மது நஜீப்

லார்டு மில்னர்:—தாங்கள் எகிப்திலுள்ள பிரபல மேதாவிகளில் ஒருவர். எகிப்து அதிகம் முன்னேற்ற மடைந்துவிட்டது. ஆனாலும், தற்போதைய சில பிரசினைகளைப் பற்றித் தங்களபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முப்தீ முஹம்மது நஜீப்:—தங்கள் நல்லெண்ணத்திற்கு நன்றி செலுத்துகிறேன். தற்போதைய பிரசினைகளைப்பற்றி நான் தங்களுடன் பேச முடியாதவனாயிருக்கிறேன். ஏனெனில், அப்படி நான் பேசுவதானது எனது தேசத்தாரின் ஏகோபித்த தீர்மானத்திற்கு விரோதமானது. நான் ஏதேனும் சொல்லவேண்டியது அவசியமாக இருப்பின் "எகிப்து பூரண சுயேச்சையடையாமல் எவ்விதத்திலும் திருப்தி யடையாது?" என்பதைத் தெளிவாகக் கூறிவிடுகிறேன்.

லார்டு:—தாங்கள் போன்ற அறிஞர்களும் கூட எகிப்தின் கோரிக்கையை ஆதரிப்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில், பூரண சுயேச்சையடைய எகிப்து இன்னமும் தகுதியாகிவிடவில்லை. நாங்கள் எகிப்தைவிட்டு தற்போதைய நிலைமையில் விலகுவதானது எகிப்துக்கு நஷ்டமாகும்.

முப்தீ:—எகிப்து அதிகம் முன்னேற்ற மடைந்து விட்டதெனத் தாங்கள் இப்பொழுது தான் கூறினீர்கள். அதன்படி கவனிக்கு மிடத்து எகிப்தின் பூரண சுயேச்சைக் கோரிக்கை முற்றிலும் சரியேயாகும். எங்கள் நஷ்டத்தைப் பற்றித் தாங்கள் கவலை கொள்ள வேண்டியதில்லை. எங்கள் லாபத்தையும் நஷ்டத்தையும் நாங்கள் பார்த்துக் கொள்வோம். உலகம் முழுவதிலுள்ள தாழ்ந்தவர்களைக் காப்பாற்றுவதற்குக் கடவுள் உங்களுக்குக் கண்டிராக்ட் விடவில்லை. அப்படி ஏதேனும் கண்டிராக்ட் இருந்தால் அந்தச் சீட்டை தயவு செய்து காண்பியுங்கள். அதனை நாங்கள் பார்த்துக் கொண்டால் நாங்கள் சந்தோஷமாக உங்களிடம் அடிமையாயிருக்கிறோம். தாங்கள் 40 வருஷ காலமாக எகிப்தில் நாகரீகத்தைப் பரவச் செய்து கொண்டிருக்கிறீர்கள். என்றும் "எகிப்து இன்னமும் சுதந்திரமடையத் தகுதி பெற வில்லை" என்றே இன்னமும் நீங்கள் கூறி வருகிறீர்கள். இதுபோல இந்தியாவைப் பற்றியும் நீங்கள் இப்படித்தான் கூறுகிறீர்கள். அங்கும் உங்களது "கடவுள் இயக்கம்" 150 வருஷங்களாக நடை பெற்றுக் கொண்டுதானிருக்கிறது. கீழ் நாட்டினர் தங்களுக்குக் கீழில் எத்தனை வருஷங்களிருந்து சீர் திருத்தமடைய வேண்டு மென்பதை தயவு செய்து தாங்கள் தெரியப்படுத்த வேண்டும்.

லார்டு:—இவ்வளவு தூரத்திற்கு தாங்கள் தப்பெண்ணங் கொள்ளக்கூடாது. எகிப்தில் நாங்களிருப்பதால் உங்களுக்கு அநேகம் நன்மைகள் இருக்கிறது. (என்று கூறி அந்த நன்மைகளை அளந்து விட்டார்.)

முப்தீ:—இதே நன்மைகள் தங்களுக்கு ஜெர்மனியரால் ஏற்படுமாயின் தாங்கள் அவர்களை உங்களுக்கு மேலதிகாரிகளாக நியமித்து அவர்களுக்குக் கீழ்படிவீர்களா என்பதை நான் உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

லார்டு:—இல்லை, நாங்கள் அதனை அங்கிகரிக்க மாட்டோம்.

முப்தீ—அப்படியானால், அதனை எங்களுக்கு அளிக்க நீங்கள் ஏன் விரும்புகிறீர்கள்.

லார்டு:—எகிப்துக்கும் இங்கிலாந்துக்கும் வானம் பூமிக்கிடையிலுள்ள வித்தியாசமிருக்கின்றது. இங்கிலாந்து பல நூற்றாண்டுகளாக சுயேச்சை யுள்ள தேசம். எகிப்து அடிமை நாடு. இவ்விரண்டும் சமமாகுமா?

முப்தீ:—எகிப்து எப்பொழுதுமே அடிமை நாடாக இருந்து வருகிறது என்பதை விவாதத்திற்காக வேனும் ஒப்புக்கொள்வோம். அப்படி இருந்தாலும் இனிமேலும் அது அடிமையாகவே இருக்கவேண்டும் என்பது கட்டாயமா? அதிலும் தங்களிடத்தில்தான் அடிமையாக இருக்கவேண்டுமா? எகிப்து பூரண சுயேச்சை யடையும் வரை நாங்களும் சும்மா இருக்க மாட்டோம். உங்களையும் சும்மா இருக்க விடமாட்டோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இதுதான் எனது கடைசி வார்த்தை. இதற்கப்புறம் நான் பேச மாட்டேன்.

விவசாயி

பின்னர், லார்டு மில்னர் துரை கிராமங்களிலுள்ள ஜனங்களது நிலைமையை உணர்ந்து கொள்வதற்காகக் கால் நடையாகச் சென்று ஒரு கழனிக்கு வந்து சேர்ந்தார். அங்கு ஒரு உழவர் உழுது கொண்டிருந்தார். அவரிடம் லார்டு மில்னர் அணுகி புன்முறுவல் பூத்தவராக:—

"தங்களுக்கு எவ்வளவு பூமி இருக்கிறது?" என்று விசாரித்தார்.

உழவர்:—ஜக்லூல் பாஷாவைக் கேளுங்கள்.

லார்டு:—தங்களுக்குக் குழந்தைகள் எத்தனை?

உழவர்:—ஜக்லூலிடம் கேளுங்கள்.

லார்டு மில்னர் இந்நிலைமையைப் பார்த்து வெட்கமடைந்து இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்று தமது குரு லார்டு கர்ஜன் (அக்காலத்தில் அந்நியநாட்டு மந்திரியாக இருந்தவர் - மாஜீ இந்திய வைஸ்ராய்) அவர்களிடம் சகல விபரத்தையும் கூறினர். உடனே, அவர் வேறு ஒரு யுக்தி செய்து ஜக்லூல் பாஷாவை விடுதலை செய்துஎகிப்திய தூதுவக்கூட்டமொன்றை லண்டனுக்கு அழைத்தனர். எகிப்தின் பிரதிநிதியாக ஜக்லூல் பாஷா தமது சகாக்களுடன் சென்றார். இத்தூதுவக் கூட்டத்தினர்மீது ஆங்கிலேயர்கள் தங்கள் மந்திரத்தை உச்சாடனம் செய்து பார்த்தார்கள். ஜமாலுதீன் அப்கானீ (றஹ்) அவர்களது சிஷ்யரான ஜக்லூல்பாஷாவிடம் இது நடக்குமா? பிரிட்டன் எகிப்தின் டிரஸ்டியாக இருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் வரை மில்னர் கமிஷனுடன் நாங்கள் எவ்விதச் சம்பாஷணையும் செய்யப்போவதுமில்லை; எகிப்தின் சுதந்திரப் போராட்டமும் நிற்கப்

போவது மில்லை" என்று பகிரங்கமாகக் கூறி விட்டார்.

அப்புறம், எகிப்துடன் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன் படிக்கையில் எகிப்தின் சுயேச்சை அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், நான்கு விஷயங்களில் மட்டிலும்தான் விஷயமும் முடிவடையாமலிருந்தது. அந்நான்கு பிரசினைகளும் இத்தாலிய - அபிசீனிய யுத்தத்தின் போழ்து எகிப்தின் சர்வ கக்ஷி ஒற்றுமையைக் கண்டு ஜக்லுல்பாஷா மர்ஹூம் அவர்களது சிஷ்யரான முஸ்தபா நஹாஸ் பாஷாவின் தலைமையின்கீழ் எகிப்திய பிரதிநிதிகளுடன் பிரிட்டன் செய்த உடன் படிக்கையின் மூலம் முடிவு செய்யப்பட்டது. இப்பொழுது எகிப்து பூரண சுயேச்சையடைந்த தனிநாடாக விளங்குகிறது. இதனைக் கண்டேனும் இந்தியாவிலுள்ள பெரும்பான்மை வகுப்பினர் பாடம் கற்றுக் கொள்வார்களாக.

218941

காலண்டர்கள் வரவு

ஜெயரசம் டிப்போ:—அய்யம்பேட்டை பிரபல்ய ஔஷதாலயமாகிய ஜெயரசம் டிப்போவின் புரொப்ரெய்டர் A. K. முகம்மது சுல்த்தான் சாஹிப் அவர்களிடமிருந்து காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மூன்று தேதிகளையும் ஒருங்கே காண்பிக்கக் கூடியதாகவும், தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் ஒவ்வொரு ஷீட்டிலும் அரும் மொழிகள் பொரிக்கப்பட்டனவாயும், அதன் அட்டையில் "சுல்த்தானிய்யா" படை மருந்தின் திவ்விய குணங்கள் தீட்டப்பட்டு தக்க முறையில் விளம்பரஞ் செய்யப்பட்டதாகவும் மிருக்கிறது. அந்த அட்டையில் தீட்டப்பட்டிருக்கும் நற்சாக்ஷி பத்திரம் கண்களைக் கவரக்கூடியதாக இருக்கிறது.

K.M. முகம்மது கௌஸ் & Co.:—சென்னை, நாகை, பினங், சிங்கப்பூர், ரெங்கூன் முதலிய இடங்களில் பிரபல்ய வியாபாரம் செய்பவர்களும், கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸ்ஸர்ஸ். K. M. முகம்மது கௌஸ் கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதுதினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், அதன் மத்தியில் மதீனா முனவ்வராவின் அழகிய தோற்றம் அமைக்கப்பட்டதாகவும், அவர்களது பிராஞ்சு ஆபீஸ்களின் நாமங்கள் வரையப் பெற்றதாகவும், தேதி காட்டும் ஷீட்டுகளுக்குப் பக்கத்தில் இருபுறமும் ரெங்கூன், மதராஸ் பிராஞ்சுகளின் பெயர்களாகிய மெஸ்ஸர்ஸ். M. முஹம்மது ஹுஸைன், K. M. முகம்மது கௌஸ் என்று வரையப்பட்டதாகவு மிருக்கிறது.

M. M. முஹையித்தீன் தம்பி & Co:—சென்னை அங்கப்ப நாய்க்கன் தெருவிலுள்ள பிரபல தோல் வியாபாரிகளாகிய மெஸ்ஸர்ஸ். M. M. முஹையித்தீன் தம்பி அண்டு கம்பெனியாரிடமிருந்து 12 ஷீட்களையுடைய அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது இங்கிலீஷ், அறபி, தமிழ் ஆகிய தேதிகளை ஒருங்கே மூன்று கலர்களில் காட்டக் கூடியதாகவும், முக்கிய விசேஷ தினங்களுக்கு பிரத்தியேக அடையாளங்களிடப் பட்டதாகவும் மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் லண்டனில் நடைபெறும் ஏலங்களை அறிவிக்கக் கூடியதாகவுமிருக்கிறது.

K. M. பகீர் முகையதீன் & Co.:—சிங்கை மார்க்கட் ஸ்டிரீட், ரூச்சர்ரோடு முதலிய இடங்களில் பிரபல வியாபாரம் செய்பவர்களான மெஸ்ஸர்ஸ். K. M. பகீர் முஹையித்தீன் அண்டு கம்பெனியாரிடமிருந்து 12 ஷீட்டுகளையுடைய அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மூன்று தேதிகளையும் ஒருங்கே மூன்று வர்ணங்களில் காட்டக்கூடியதாகவும், ஓரத்தில் பிரத்தியேகமாக விசேஷ தினங்களை குறிப்பிட்டு காண்பிக்கக்கூடியதாகவும், தஞ்சை ஜில்லாவிலுள்ள வல்லம் ஆபீஸின் பெயர் வரையப்பட்டதாகவு மிருக்கிறது.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பீர் !

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்தி லேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென் பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அவ் விடத்திலுள்ள நமது சந்தா நேயர்களிலனேகர் இதுவரை தங்கள் சந்தா பாக்கியை செலுத்தாமலே இருந்து வருகின்றனர். வி. பி. செய்வது கொண்டு சந்தாதார்கட்கு வீண் செலவேற்படுகிறது. ஆதலால் சிலோன் பகுதியி லுள்ள நேயர்கள் தங்கள் பாக்கியை உடனே அனுப்பி வைப்பார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

N. B.—மற்ற சந்தாதார்களும் தங்களில் பாக்கியுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளையும், அவர்களும் மற்ற நண்பர்களும் நிகழும் 1937-ம் ஆண்டுக் குரிய சந்தாக்களையும் முன் பணமாக அனுப்பி மாசிகையை அன்போடு ஆதரிப்பார்களென்று எதிப்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் பினங் வாசிகள்

ஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,

(113-A, சோலியா ஸ்டீட்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்கு தெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோரு கிறோம்.

ஹிபாஜத்துல் இஸ்லாம் எட்டாவதாண்டின் வாழ்த்து

காரைக்கால் அமுர்தகவி - அ. சாயபு மரைக்காயரால் எழுதியது

மும்மணி - கட்டளைக்கலிப்பா

பொன்னை போலவும் பூதலத் துள்ளவர்
    போற்றும் மாபெறும் போதனைத் தேசிகன்
தன்னை நோக்கிய வாசகத் தார்களை
    தேர்ந்த மூதறி உள்ளவ ராக்கிடும்
சென்னை வாழ்ஹிபா ஜத்திசு லாம்மலர்
    சீராய் எட்டுபி ராயமு மேற்றுவிண்
மின்னை போல்பிர காசமா மேதினில்
    மன்னெ வாகுடன் வந்தநி வாழியே.

தாதி யானிகள் ஆற்றலைக் காற்றுமுன்
    காலா லெற்றியெ தூற்றின சிங்கமே
போதி யப்பலம் வல்லமை யாய்மிகப்
    பூவார் வாழ்கவெ புத்துயி ரீந்தவ!
ஆதி தாதுவர் ஆகிரு நந்நபி
    ஆக்கல் போல்ஹிபா ஜத்திசு லாம்மலர்
நீதி நேர்மையை நாட்டிய நண்பனெ
    நீழ்கப் பார்மிசை நின்றுநி வாழியே.

காலக் கோலமா நூதன ஆற்றலில்
    காளை வாலிபர் சிக்கிடக் கட்டுரை
ஜால மாகவெ தீட்டிடுந் தீயரின்
    சாயம் மங்கிட சங்கரித் தோய்புலி
தால மாந்தரை நேர்வழிக் காட்டியத்
    தங்க மேஹிபா ஜத்திசு லாம்மலர்
வால சூரியன் போலவெ சோதியாய்
    வல்லான் நல்லருள் பெற்றுநி வாழியே.

வஸ்ஸலாம்.

218941
சென்னை-600 008

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & ublished by Mo
A. R. Abdur Rahim Saheb, Manager, Hif ath-ul-Islam, 43, Post Office S , G. T., Madra